# தமிழ்ச் சோலை

## I

மாணவர் பிரசுராலயம்,
297, தங்கசாலை வீதி, சென்னை.

பதிப்புரிமை] 1933 [விலை அணா 10

# பதிப்புரை

இச் செந்'தமிழ்ச் சோலை'யில் புகுவோர், தமிழ்த் தென்றலைச் சுகித்துத் தமிழ் மலர் மணத்தை நுகர்ந்து, தமிழ்ப் பழங்களைச் சுவைப்பர் என்பது திண்ணம். 'தமிழ்ச் சோலை' என்ற இந் நூல் பள்ளி யிறுதித் தேர்வின் (S. S. L. C. Exam) திருத்த முறைப் பாட இயலினை உளங் கொண்டு அதற் கேற்ப, செய்யுட்களும், கட்டுரைகளும் தொகுக்கப் பட்டுள்ளது. இதிலுள்ள செய்யுட் பகுதியும், உரைநடைப் பகுதியும் பயிற்றுவோர்க்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவதோடு, பயில்வோர்க்கும் தமிழார்வத்தையும், பல வகையான அறிவையும் வளர் வுறச் செய்யு மென்பதில் ஐயமில்லை.

இந் நூலில் அடங்கிய வசன பாடங்களின் ஆசிரியர்கள் அவைகளைப் பதிப்பிக்க அன்புடன் அனுமதி தந்த பேருதவியை யாம் மறக்க முடியாது. அன்றியும் இத் தண்'டமிழ்ச் சோலை'ச் செழித்து வளர்வதற்கு வேண்டிய பணிகளைச் செய்தச் சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர் கலாசாலைத் தமிழாசிரியர் திருவாளர் பா. பக்கிரிசுவாமி செட்டியார் அவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

பிரசுரகர்த்தர்

# செய்யுட் பகுதி

## பொருளடக்கம்


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | தோத்திரம் | |
| | 1. பரம்பொருள் | 1 |
| | 2. சகலகலாவல்லி | 2 |
| | 3. தமிழ்த்தாய் | 3 |
| II. | நீதி | |
| | 1. திருக்குறள் | 5 |
| | 2. நாலடியார் | 6 |
| | 3. பழமொழி | 7 |
| | 4. ஆசாரக்கோவை | 9 |
| III. | கதை | |
| | 1. விசுவாமித்திரர் விழைவும் நிறைவும் | 11 |
| | 2. தாயும் சேயும் | 15 |
| | 3. அரிவாட்டாய நாயனர் | 18 |
| | 4. நாச்சியார் கனவு | 21 |
| IV. | பொது | |
| | 1. நால்வர் | 23 |
| | 2. மன்னன் | 24 |
| | 3. இருபெரும் புலவர்கள் | 25 |
| | 4. சிலேடை | 26 |
| | 5. இமய மலை | 27 |
| | 6. வேளாளர் சிறப்பு | 28 |

# உரைநடைப் பகுதி

## பொருளடக்கம்


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | உலகின் நாகரிக ஊற்று (திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள் B.A., தமிழாசிரியர், அரசாங்க முகமதியர் கலாசாலை, சென்னை.) | 31 |
| 2. | மகாபலிபுர மாண்பு (ஆரியூர் திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள், 'திருமகள் நிலயம்', ஆரியூர்.) | 40 |
| 3. | மகா மந்திரம் (திரு. எஸ். கோதண்டராமன் அவர்கள் B.A., L.T., தமிழாசிரியர், மேரி ஐரோப்பிய உயர் கலாசாலை, சென்னை.) | 46 |
| 4. | மனுச்சோழன் பெருமை (திரு. இராமலிங்க சுவாமிகள்.) | 51 |
| 5. | வெண்ணெய் அண்ணல் (திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் B.A., சித்திராலயம், திருநெல்வேலி.) | 55 |
| 6. | தோலும் நிறமும் (திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வழக்கறிஞர், மேலவூர், தூத்துக்குடி.) | 61 |
| 7. | மனம் போல வாழ்வு (திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் B.A., L.T., தமிழாசிரியர், இராஜதானிக் கலாசாலை, சென்னை.) | 66 |
| 8. | போப் ஐயர் (திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் B.A., L.T., முன்னீர்ப்பள்ளம்.) | 71 |
| 9. | மாணவர் கடமை (திரு. பா. பக்கிரிசுவாமி செட்டியார், தமிழாசிரியர், தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர் கலாசாலை, சென்னை.) | 80 |
| 10. | இயற்கை இன்பம் (திரு. டி. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் B.A., ஆசிரியர், 'முரசு,' சென்னை.) | 86 |

# செய்யுட் பகுதி

# தமிழ்ச் சோலை

## 1. தோத்திரம்

### 1. பரம்பொருள்

1. அங்கிங்கெ னாதபடி எங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடுநி றைந்ததெது? தன்னருள்வெ ளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கி னில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகள்எலாம்
'தம்தெய்வம்' 'எம்தெய்வ ம்'என்(று)
எங்குந்தொ டர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவ ழக்காய்,
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ள தெது? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது? அது
கருத்திற் கிசைந்த ததுவே;
கண்டனவெ லாம்மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய் குவாம்.

2. அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான
அறிவே! என் அறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே! என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்

இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
இடைவிட்டு நின்ற துண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ?
யாதேனும் அறியா வெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டு, கண்டாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மே! பரஞ்
சோதியே! சுகவா ரியே!

—தாயுமானுர்

3. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என் அலங்கலணிந் தருளே.

4. உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்னாணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பே னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி எனக்குவிரைந் தருளே.

—இராமலிங்கர்

---

## 2. சகலகலாவல்லி

1. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே,

2. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

3. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

4. சொல்விற் பனமும் அவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென்று ஒருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

5. சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

6. மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

—குமரகுருபரர்

---

## 3. தமிழ்த்தாய்

1. மறைமுதற் கிளந்த வாயான், மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பின் பாடை அனைத்தும் வென்(று), ஆரியத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உள்ளினைந்(து) ஏத்தல் செய்வாம்.

—கருணைப்பிரகாசர்.

2. நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

3. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—சுந்தரம் பிள்ளை

# II. நீதி

## 1. திருக்குறள்

### அன்புடைமை

1. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

2. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

### இனியவை கூறல்

3. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

4. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

### செய்ந்நன்றி யறிதல்

5. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

6. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

### அடக்கமுடைமை

7. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

8. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

### ஒழுக்கமுடைமை

9. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

10. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

—திருவள்ளுவர்

## 2. நாலடியார்

### கல்வி

1. இம்மை பயக்குமால்: ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால்: தாமுளராக் கேடின்றால்.
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கு மருந்து.

### ஊக்கம்

2. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

### செல்வம்

3. வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

### கயமை

4. ஒருநன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்கு
எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும்.

### சினமின்மை

5. இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்;—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

### பேதைமை

6. பெருங்கடல் ஆடிய சென்றார், 'ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும்'-என்றற்றால்
இற்செய் குறையினை நீக்கி, அறவினை
மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு.

### மெய்ம்மை

7. இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வைபத்(து) இயற்கை;—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ! செய்ந்நன்றி
கொன்றாரில் குற்றம் உடைத்து.

### பொறை யுடைமை

8. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றும் துணையும் பொறுக்க: பொறுணுயின்
தூற்றுதே தூர விடல்.

### மேலோர்—கீழோர்

9. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனு எண்ணி விடும்.

### கற்புடை மகளிர்

10. குடம்நீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதுங்
கடல்நீர் அறஉண்ணுங் கேளிர்-வரினுங்
கடன்நீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

—சமண முனிவர்கள்

---

## 3. பழமொழி

### கல்வியின் சிறப்பு

1. ஆற்றவும் கற்றார் அறிவுடையார். அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை. அந்நாடு
வேற்றுநா டாகா: தமவேயாம். ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

### கேள்வியின் சிறப்பு

2. உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்:—கணக்கினை

முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

அறிவின் மாண்பு

3. அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின்.

தம் குற்றம் நீக்கல்

4. தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் கிடைப்புகுதல்,—எங்கும்
வியனுலகின் வெள்ளாடு தன்வளி தீரா
தயல்வளி தீர்த்து விடல்.

வடுவல்ல செய்தல்

5. கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்.—நெடுவரை
முற்றுநீ ராழி வரையகத் தீண்டிய
கற்றேயும்; தேயாது சொல்.

பிறர்க்கு இன்னா செய்யாமை

6. வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்ப செய்யாமை வேண்டும்.
புனப்பொன் அவிர்சுணங்கிற் பூங்கொம்ப ரன்னாய்!
தனக்கின்னா இன்னா பிறர்க்கு.

நலிந்தாரை நலியாமை

7. நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தந்நலியின்,
கூர்த்தவரைத் தாநலிதல் கோளன்றால் சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினா ரில்.

கருத்தை முகம் அறிவித்தல்

8. வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்.
ஒள்ளமர் கண்ணாய்! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்,

### வருத்தத்தால் திருத்தம்

9. வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துத லின்று.

### பொருளின் வலிமை

10. தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே.—பொருள்கொடுப்பின்
பாணித்து நிற்கிற்பார் யாருளரோ? வேற்குத்தின்
காணியின் குத்தே வலிது.

—மூன்றுறையரையர்

---

## 4. ஆசாரக்கோவை

### வைகறை எழுந்து செய்வன

1. வைகறை யாமம் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக; என்பதே
முந்தையோர் கண்ட முறை.

### காலை மாலைக் கடவுள் வணக்கம்

2. நாளந்தி கோல்தின்று, கண்கழீஇத் தெய்வத்தைத்
தான்அறியும் ஆற்றால் தொழுதெழுக; அல்கந்தி
நின்று தொழுதல் பழி.

### ஐங்குரவர்

3. அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்; இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி.

### நீராடு நீர்மை

4. நீராடும் போழ்தில் நெறிப்பட்டார்; எஞ்ஞான்றும்
நீந்தார்; உமியார்; திளையார்; விளையாடார்.

காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவின் அவர்.

### ஆடை அணிதல்

5. உடுத்தலால் நீராடார் ; ஒன்றுடுத் துண்ணார் ;
உடுத்தாடை நீருட் பிழியார் ; விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை.

### உண்ணு முறை

6. கைப்பன எல்லாம் கடை,தலை தித்திப்ப,
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க, முறைவகையால் ஊண்.

### அந்திப்பொழுது செய்வன தவிர்வன

7. அந்திப் பொழுது கிடவார் ; நடவாரே;
உண்ணார்; வெகுளார்; விளக்கிகழார் முன்னந்தி.
அல்குண் டடங்கல் வழி.

### புகலாகாத இடங்கள்

8. சூதர் கழகம் அரவ மறுக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர். புகுபவேல்
ஏதம் பலவும் தரும்.

### படுத்தல் முறை

9. கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது,
வடக்கொடு கோணம் தலைசெய்யார், மீக்கோள்
உடல்கொடுத்துச் சேர்தல் வழி.

### ஆசார வித்து

10. நன்றி அறிதல் பொறைஉடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு
ஒப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து.

—பெருவாயின் முள்ளியார்

# III. கதை

## விசுவாமித்திரர் விழைவும் நிறைவும்

1. நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தியே.

2. தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
நாயகன் இவன்கொல்என்(று) அயிர்த்து நாட்டம்ஓர்
ஆயிரம் இல்லைஎன்(று) ஐயம் நீங்கவே.

3. மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்உயிர்
அடங்கலும் உலகும்வே(று) அமைத்துத் தேவரோ(டு)
இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்(டு)' எனத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினன்.

வேறு

4. வந்துமுனி எய்துதலும் மார்பில்அணி ஆரம்
அந்தரநி லத்(து)இரவி அஞ்சஒளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரன்எ னக்கடி(து)எ ழுந்(து)அடிப ணிந்தான்.

5. பணிந்துமணி செற்றுபு குயிற்றிஅவிர் பைம்பொன்
அணிந்ததவி(சு) இட்(டு) இனி(து) அருத்தியொ(டு) இருத்தி
இணைந்தகம லச்சரண் அருச்சனைசெய்(து) 'இன்றே
துணிந்த(து)என் வினைத்தொடர்(பு)' எனத்தொழுது சொல்லும்.

6. 'நிலஞ்செய்தவம் என்(று)உணரின் அன்றுநெடி யோய்!என்
நலஞ்செய்வினை உண்(டு)எனினும் அன்றுநகர் நீயான்,
வலஞ்செய்துவ ணங்கவெளி வந்தஇது முந்(து)என்
குலஞ்செய்தவம்' என்(று)இனிது கூறமுனி கூறும்.

### வேறு

7\. ‘என்அனைய முனிவர்களும் இமையவரும்
இடையூ(று)ஒன் (று)உடையர் ஆனால்,
பன்னகமும், நகுவெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்
தன்நகரும், கற்பகநாட்(டு), அணிகவரும்,
அணிமாட அயோத்தி என்னும்
பொன்நகரும் அல்லாது புகல்உண்டோ?
இகல்கடந்த புலவு வேலோய்!

8\. ‘இன்றளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து,
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறைஇரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குருமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்(டு)
அன்றளித்த அரசன்றோ புரந்தரன்இன்(று)
ஆள்கின்ற(து) அரச!’ என்றான்.

9\. உரைசெய்யும் அளவில்அவன் முகம்நோக்கி
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரைசெய்ய அரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி,
‘அரசெய்தி இருந்தபயன் எய்தினன்மற்(று)
இனிச்செய்வ(து) அருளு(க)’ என்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியும் முனிவன் ஆங்கே:

10\. ‘தருவனத்துள் யான்இயற்றும் தகைவேள்விக்(கு)
இடையூறாய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென்(று) அடைகாம வெகுளிஎன
நிருதர்இடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி’என உயிர்இரக்குங்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்.

11. எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால்
எனச்செவியிற் புகுத லோடும்,
உண்ணிலா வியதுயரம் பிடித்(து)உந்த
ஆருயிர்நின்(று) ஊசல் ஆடக்
கண்ணிலான் பெற்(று)இழந்தான் எனஉழந்தான்
கடுந்துயரம் கால வேலான்.

12. தொடைஊற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கிப்
'படையூற்றம் இலன்,சிறியன், அவர்பெரியோர்,
பணிஇதுவேல் பனிநீர்க் கங்கை
புடைஊற்றுஞ் சடையானும் புரந்தரனும்
வெகுண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக்(கு) இடையூறாய் யான்காப்பன்
பெருவேள்விக்(கு) எழுக' என்றான்.

13. என்றனன்என் றலும்முனிவோ டெழுந்தனன் மண்
படைத்தமுனி இறுதிக் காலம்
அன்றெனஆம் எனஇமையோர் அயிர்த்தனர்;மேல்
வெயில்கரந்த(து); அங்கும் இங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன; வந் ததுநகையும்; சிவந்தனகண்;
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம்.

வேறு

14. கறுத்த மாமுனி கருத்தை உன்னி, 'நீ
பொறுத்தி!' என்(று)அவற் புகன்று, நின், 'மகற்(கு)
உறுத்தல் ஆகலா உறுதி எய்துநாள்
மறத்தியோ?' என வசிட்டன் கூறுவான்:

15. 'பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்

ஐய ! நின்மகற்(கு) அளவில் விஞ்சைவந்(து)
எய்து காலம்இன்(று) எதிர்ந்த(து) ' என்னவே.

16. குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
' திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்(று)'என,
' வருக ' என்றனன் ; என்ற லோடும்வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான்.

17. வந்த நம்பியைத் தம்பி தன்னேடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி' நல்
தந்தை நீதனித் தாயும்நீ இவர்க்(கு)
எந்தை தந்தனன் இயைந்த செய் 'கென்ருன்.

18. கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்(து)
எடுத்த சிற்றம்விட்(டு) இனிது வாழ்த்தி ' மேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம் 'எனு
நடத்தல் மேயினன் நவைக்கண் நீங்கினன்.

19. வென்றி வாள்புடை விசித்து, மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத் தூணி ஆர்த்(து)இரு
குன்று போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினன்.

20. அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்உயிர் வழிக்கொண் டால்எனச்
சொன்ன மாதவற் றொடர்ந்து, சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்.

21. வரங்கள் மாசறத் தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்கள் நேர்இலா நகரம் நீங்கிப்போய்,
அரங்கின் ஆடுவார் சிலம்பின் அன்னநின்(று)
இரங்கு வார்புனல் சரயு எய்தினர்.

22. தாழு மாமழை தழுவு நெற்றியால்
சூழி யானைபோல் தோன்று மால்வரைப்
பாழி மாமுகட்(டு) உச்சிப் பச்சைமா
எழும் எறப்போய் ஆறும் எறினர்.

23. தேவு மாவதற் றெழுது தேவர்தம்
நாவுள் ஆகுதி நயக்கும் வேள்விவாய்த்

தாவு மாபுகை தழுவு சோலைகண்(டு)
யாவ(து) ஈ(து)என்றான் எவர்க்கும் மேல்உளான்.

—கம்பர்

## தாயும் சேயும்

1. தன்னுடைய முன்னே படாம்போர்க்கத் தார்வேந்தன்
என்னுடைய மாதா இவ(ள்)என்று—நன்னுதலாள்
பொன்அடிமேல் வீழ்ந்தானைப் பொன்தடக்கை யால்தழுவித்
தன்மடிமேல் வைத்தாள் தளர்ந்து.

### குந்தி தேவி கூறியன

2. உனக்(கு) இனிய தம்பிமார் ஐவரையும் ஒன்றி
வனக்கிரிசூழ் மண்ஆள எண்ணி—உனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன் சுடர்வேலோய் போ(து)என்றாள்
வில்உலாம் வாள்நுதலாள் மீட்டு.

3. மண்எலாம் காத்தளித்து மன்னர்எலாம் வந்திறைஞ்ச
கண்எலாம் காதல் களிகூர—பண்உலாம்
பொன்தேரில் போந்தேறிப் போர்வேந்தர் ஐவரையும்
குற்றேவல் கொள்ளாய் குறித்து.

### கன்னன்

4. ஆவி அனையார்கள் ஐவர்க்கும் முன்னோனாய்
மேவி அனைய வினையேனைப்—பாவியேன்
முன்செய்த தீவினையால்முன்(பு) உரையா(து) இன்றுரைத்தீர்
என்செய்வேன் சொல்லீர் இனி ?

5. இன்னான் எனஅறியா என்னை முடிகவித்து
மன்னர் வணங்க அர(சு)இயற்றிப்—பின்னையும்
தன்எச்சில் உண்ணுத் தகைமையான் தான்உண்டான்
என்எச்சில் என்னோ(டு) இனிது.

6. கொன்னவிலும் தேர்ப்பாகன் என்று குலம்பேசி
என்னைப் பலரும் இகழ்ந்துரைப்ப—பின்னையும்தான்
என்எச்சில் என்னோடு(ம்) உண்டானை எங்ஙனே
உன்னச் சிழப்பேன் உரை ?

7. பன்மணிகள் சிந்திப் பரந்துகிடந் ததுகண்(டு)
இன்மணிக்கு என்உற்ற(து) என்னுமல்—நன்மணியைக்
கோக்கோ பொருக்குகோ என்றானுக்(கு) என்உயிரைப்
போக்கா(து) ஒழிவனோ புக்கு.

8. உந்தமது புத்திரர்க்கா நல்வீரா வந்தீர்நீர்
இன்றென்மேல் ஆசை இலைஉமக்கு—அன்று
வடுஅஞ்சிப் போவிட்டீர் மாண்டேனே(ல்) இன்று
நடஎன்பீர் ஆரை நயந்து ?

9. நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான்—என்றாலும்
மீண்டவன் செய்த உதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து ?

10. பார்த்தனையான் கோறல் அவன்கைப் படுதல்எனும்
வார்த்தை புரைசெய்தேன் மனமகிழ—எற்கும்
பொருவெம் சமர்தன்னில் போங்தெதிர்ந்தான் மற்றாங்கு
ஒருவரும்தாம் இல்லை எதிர்.

குந்தி தேவி

11. வெஞ்சரம் கோத்தெய்து விறலழிக்கும் நல்மகனே
பஞ்சவரில் பார்த்தன் உடன்மலைந்தால்—அஞ்சுதலை
நாகம்இருகால் தொடாதொழிக என்(று)உரைத்தாள்
ஆகம் உறத்தழுவி ஆங்கு.

கன்னன்

12. நாகம் இருகால் தொடாதொழிய வேண்டுமென்(று)
ஆகஉரைத்தீர் அது கேண்மின்—வேகம்
ஒருகால் தொடுத்தால் உதுபிழைத்தால் பின்னை
இருகால் தொடாதொழிந்தேன் யான்.

குந்தி தேவி

13. தருமனொடு வீமன் தனஞ்சயனு(ம்) அல்லால்
இருவரும்வந்(து) ஆங்குன்னோ(டு) என்று—பொருகளத்து
முட்டிநேர் வந்தாலும் புத்திரனே கொல்லேனென்(று)
ஒட்டியான் வேண்டுவனால் உற்று.

## கன்னன்

14. பொன்னே ஈனப்பயந்த பொற்கொடியே இன்றுனக்கு
மின்நேர் இடையாய் மறுப்பேனோ—பொன்னாய்முன்
பெற்றதாய் வேண்ட மறுத்தான் எனும்வார்த்தை
உற்றறியாய் நிற்கும் உலகு.

15. மற்றவர்க்(கு) எல்லாம் மறுதென்னை வாய்த்தவரம்
பெற்றாய் பெறப்பேசல் வேண்டுமோ—கற்றபோர்
வெல்லும் கணையொருகால் தொட்டாலும் நால்வரையும்
கொல்லேன் படிஒருகால் கூர்ந்து.

16. அம்மேநீர் வேண்டிற்றுப் பெற்றீர் அதுஈந்தேன்
உம்மையான் வேண்டுவதிங்(கு) ஒன்றுண்டு—செம்மை
அலர்கதிர்வேல் கையான் அருச்சுனன் கைப்பட்டால்
பலர்காணப் பால்அருத்து வீர்.

17. போர்க்களத்தில் யான்பொருது பொன்றினல் எம்பியரால்
தீக்கடனும் நீர்க்கடனும் செய்விப்பீர்—சேர்க்கும்
மருமலரும் தாரார் மணிமுடியார் காண
உரிமையுடன் செய்ம்மின் உகந்து.

18. உன்னுடைய மைந்தர்க்கிவ் வுண்மை தனையுரைக்கில்
அன்னவர்கள் பாகம் எனக்(கு)அளிப்பர்—பின்அதனை
ஈங்கெனது தோழற்கே யான்கொடுப்பன் ஆதலினல்
ஆங்கவர்கட்(கு) இல்லை அரசு.

## குந்தி தேவி

19. முன்செய்த பாவத்தால் மூத்தாய் உனைப்பிரித்தேன்
என்செய்தால் இப்பிழைதான் தீருமென—பொன்செய்த
மட்டவிழும் தாரானை மார்புறவே தான்அணைத்து
விட்டவளும் மீண்டாள் விரைந்து.

20. பாராளும் பாண்டவர்க்காப் பாவியேன் என்மகனைக்
கோனகம் வேண்டிக் கொலைநேர்ந்தேன்—ஆனாலும்
தேவர்க்காம் கொல்லோ திருவில்லா தாங்கொல்லோ
யாவர்க்காம் பாவம் இது ?

### கன்னன்

21. பாரதத்துப் பட்டேன் படேனுகில் பாண்டவர்பால்
ஆதரித்து நான்வருவேன் ஆரணங்கே—சீர்மிகுத்தூன்
பொன்கமல பாதம் புரிகின்றேன் போவென்றான்
நல்தவத்தின் மிக்கோன் நயந்து.

22. மல்உயர்தோள் பார்த்தன் மாயன் உடன்மலைந்தால்
கொல்லும் இவனை எனக்குலையா—நல்லமழைக்
கார்ஆரும் பூங்குழலாள் காதலொடு கண்இணைகள்
நீர்ஆரப் போனுள் நினைந்து.

—பெருந்தேவனுர்

---

## 3. அரிவாட்டாய நாயனுர்

1. வரும்புனற் பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்கண் உடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்சொரி யுங்கண மங்கலம்.

2. செங்நெ லார்வயற் கட்டசெங் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கை மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார்.

3. வள த்தி னீடும் பதியதன் கண்வரி
யுளர்த்து மைம்பா லுடையோர் முகத்தினுங்
களத்தின் மீதுங் கயல்பாய் வயலயற்
குளத்து நீடுங் குழையுடை நீலங்கள்.

4. அக்கு லப்பதி தன்னி லறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையிற் றங்கினர்
தொக்க மாநிதித் தொன்மையி லோங்கிய
மிக்க செல்வத்து வேளாண் டலைமையார்.

5. தாய ஞரெனும் நாமம் தரித்துளார்
சேய காலங் தொடர்ந்துங் தெளிவிலா
மாய ஞர்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதங் தொடர்ந்துளார்.

6. மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெ லின்னமு தோடுசெங் கீரையு
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன வென்று மமுதுசெய் விப்பரால்.

7. இந்த நன்னிலை யின்னல்வந் தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலி னுவந்திட
முந்தை வேத முதல்வ ரவர்வழி
வந்த செல்வ மறியாமை மாற்றினர்.

8. மேவு செல்வங் களிறுண் விளங்கனி
யாவ தாகி யழியவு மன்பினல்
பாவை பங்கற்கு முன்பு பயின்றவித்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனர்.

9. அல்ல னல்குர வாயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய வன்பினல்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனர்க்கு
ஒல்லை இன்னமு தாக்கொண் டொழுகுவார்.

10. சாலி தேடி அறுத்தவை தாம்பெறுங்
கூலி யெல்லாந் திருவமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யாரது மாற்றுவார்.

வேறு

11. நண்ணிய வயல்க ளெல்லா நாடொறு முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி யாக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலா ரறுத்த கூலி கொண்டிஃ தடியேன் செய்த
புண்ணிய மென்று போத வமுதுசெய் விப்பா ரானர்.

12. வைகலு முணவி லாமை மனைப்படப் பையினிற் புக்கு
நைகர மில்லா வன்பின் நங்கைகை யடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை யருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணம் திருப்பணி செய்யு நாளில்.

13. மனைமருங் கடகு மாள வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க வமுதுசெய் தன்ப ருரும்

வினைசெயல் முடித்துச் செல்ல மேவுநா ளொருநாள் மிக்க
முனைவனூர் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன்.

14. முன்புபோல் முதல்வ னாரை யமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோ மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து செல்லப்
பின்புபோ மனைவி யாரான் பெற்றவஞ் சேந்திச் சென்றார்.

15. போதரா நின்ற போது புலர்ந்துகா றளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடு கையாற்
காதலா லணைத்து மெல்லாங் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர் போவதங் கினியென் னென்று.

16. நல்லசெங் கீரை தூய மாவடு வரிசி சிந்த
அல்லல்தீர்த் தாள வல்லா ரமுதுசெய் தருளு மப்பே
றெல்லையில் தீமை யேனிங் கெய்திடப் பெற்றி லேனென்
றெல்லையி லரிவாட் பூட்டி யூட்டியை யரிய லுற்றார்.

17. ஆட்கொள்ளு மையர் தாமிங் கமுதுசெய் திலர்கொ லென்னப்
பூட்டிய வரிவாட் பற்றிப் புரையற விரவு மன்பு
காட்டிய நெறியி னுள்ளந் தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியு மறியா நின்றார் உறுபிறப் பரிவா ரொத்தார்.

18. மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி யரிவாட் பற்றும்
ஆசில்வன் கையை மாற்ற வம்பலத் தாடு மையர்
வீசிய செய்ய கையு மாவடு விடேல்வி டேல்என்று
ஓசையுங் கமரி னின்று மொக்கவே எழுந்த தன்றே.

19. திருக்கைசென் றரிவாட் பற்றுந் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று.

20. அடியனேன் அறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி.

21. என்றவர் போற்றி செய்ய விடபவா கனராய்த் தோன்றி
நன்றுநீ புரிந்த செய்கை நன்னுத லுடனே கூட

என்றுநம் முலகில் வாழ்வா யென்றவ ருடனே நண்ண
மன்றுளே யாடு மையர் மழவிடை யுகைத்துச் சென்றார்.

22. பரிவுறு சிந்தை யன்பர் பரம்பொரு ளாகி யுள்ள
பெரியவ ரமுது செய்யப் பெற்றிலே னென்று மாவின்
வரிவடு விடேலெ னாமுன் வன்கழுத் தரிவாள் பூட்டி
அரிதலால் அரிவாட் டாய ராயினார் தூய நாமம்.

—சேக்கிழார்

## 4. நாச்சியார் கனவு

1. வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரண நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

2. நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

3. இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

4. நால்திசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னை
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

5. கதிரொளித் தீபம் கலச முடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந் தெதிர்கொள்ள
மதுரையார் மன்ன னடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

6. மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

7. வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளி றன்னானென் கைபற்றித்
தீவலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்.

8. இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாரா யணன்நம்பி
செம்மை யுடைய திருக்கைபால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்.

9. வரிசிலை வாள்முகத் தன்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித் தென்னைமுன் னேநிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்து
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

10. குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலஞ்செய்து மணநீர்
அங்கவ னோடு முடன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்.

—நாச்சியார்

# IV. பொது

## 1. நால்வர்

### திருஞானசம்பந்தர்

1. சீரார் சண்பைக் கவுணியர்தம்
தெய்வ மரபில் திகழ்விளக்கே,
தெவிட்டா துளத்தில் தித்திக்குந்
தேனே, அழியாச் செல்வமே,
காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே,
கரும்பே, கனியே, என்னிரண்டு
கண்ணே, கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில்உமை
இனிய நகில்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே,
என்ஆர் உயிருக் கொருதுணையே,
பேரார் ஞான சம்பந்தப்
பெருமானே, நின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும்
பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே.

### திருநாவுக்கரசர்

2. தேவரெலாந் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே, நான்முகனும் விரும்பு ஞான
நாயகனே, நல்லவர்க்கு நண்பனே, எம்
பாவமெலா மகற்றியருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே, பணிந்து நின்பால்
மேவவிருப் புறுமடியர்க் கன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகைநீ விதித்தி டாயே.

### சுந்தரர்

3. இலைக்குளநீர் அழைத்ததனுள்
இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர்
தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற்
கலைக்கும்உறு கணக்குஉயர்பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உரு
வன்றொண்டப் பெருந்தகையே.

### மாணிக்கவாசகர்

4. வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

—இராமலிங்கர்

---

## 2. மன்னன்

1. முறைசெய்து காப்பாற்று(ம்) மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்.

—திருக்குறள்

2. நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்: அதனால்
'யான் உயிர்' என்ப(து) அறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.

—புறநானூறு

3. கோன்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடில் மாரிவறங் கூரும்;
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின்(று) ஆகும்.

—மணிமேகலை

4. தாய்ஒக்கும் அன்பில்; தவமொக்கும் நலம்ப யப்பில்;
சேய்ஒக்கும் முன்நின்(று) ஒருசெல்கதி உய்க்கு நீரால்;
நோய்ஒக்கும் என்னின் மருந்(து)ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப்பு குங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்.

—கம்பராமாயணம்

5. உறங்கும் ஆயினும் மன்னவன் தன்ஒளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்:
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்(து)
அறங்கள் வௌவஅ தன்புறங் காக்கலார்.

6. யாவர் ஆயினும் நால்வரைப் பின்இடில்,
தேவர் என்பது தேரு(ம்)இவ் வையகம்;
காவல் மன்னவர் காய்வன சிந்தியார்,
நாவி னும்உரை யார்நவை அஞ்சுவார்.

7. தீண்டி னார்தமைத் தீச்சுடும்; மன்னர்தீ,
ஈண்டு தம்கிளை யோடும்எ ரித்திடும்;
வேண்டில் இன்னமு தும்நஞ்சும் ஆகலால்,
மாண்ட(து) அன்றுநின் வாய்மொழித் தெய்வமே.

—சீவக சிந்தாமணி

---

## 3. இருபெரும் புலவர்கள்

1. கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ அம்மானே!
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே!

—ஒட்டக்கூத்தர்

2. ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே!

திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்மானே!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வெளிதோ அம்மானே!

—புகழேந்திப் புலவர்

---

## 4. சிலேடை

### குதிரைக்கும் காவிரிக்கும்

1. ஓடுஞ் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாகத் தலைசாய்க்கும்—நாடறிய
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடு பரிகாவி ரியாமே.

### நாய்க்கும் தேங்காய்க்கும்

2. ஓடு மிருக்குமதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது-சேடியே!
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயுமெனச் செப்பு.

### வைக்கோலுக்கும் யானைக்கும்

3. வாரிக் களத்தடிக்கும்; வந்துபின்பு கோட்டைபுகும்;
போரிற் சிறந்து பொலிவாகும்;—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

### ஆமணக்குக்கும் யானைக்கும்

4. முத்திருக்கும்; கொம்பசைக்கும்; மூரித்தண் டேந்திவரும்;
கொத்திருக்கும்; நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்குந்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கும் மால்யானை யாம்.

### பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும்

5. நஞ்சிருக்கும்; தோலுரிக்கும்; நாதர்முடி மேலிருக்கும்;
வெஞ்சினத்திற் பல்பட்டால் மீளாது-விஞ்சுமலர்த்

தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

### பாம்புக்கும் எள்ளுக்கும்

6. ஆடிக் குடத்தடையும், ஆடும்போ தேஇரையும்;
மூடித் திறக்கின் முகங்காட்டும் ;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் ; பாரிற்பிண் ணாக்குமுண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

### பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும்

7. பெரியவிட மேசேரும் ; பித்தர்முடி ஏறும் ;
அரியுண் ணும் ; உப்புமேல் ஆடும் ;—எரிகுணமாம் ;
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

—காளமேகப் புலவர்

---

## 5. இமய மலை

1. குடதிசை குணதிசை தழுவிய குறைகட
லிடைநுழை யிருதலை யிமையம தெனுமலை
வடதிசை யுளதது மலையர சிதுவென
இடமுடை யுலகவ ரிடுபெய ருடையது.

2. மயிலிய லுமையினை மகளென வுடையது
குயின்மொழி யவளொடு குளிர்சடை யரனுறை
கயிலையை யொருபுடை யுடையது கதிரவன்
வெயினுழை வருமர மிடைதட முடையது.

3. பகுமுக மொடுதிகழ் பகிரதி யிழிதரு
மொகுமொகு மெனுமொலி முழவொலி யதுவர
அகமகி ழுறுபத வளியிசை முரரற
மிகமயி னடமுறு விரிபொழி லுடையது.

4. எறிகதிர் மணிமுடி யிமையவர் பொழிலுடை
வெறிமலர் மதுநுகர் விரிசிறை மதுகரம்
உறுதலு மதுநுக ரிவரென வுவகையொ
டுறுபத மெதிர்கொளு மரவம துடையது.

5. மலைதலின் மனமென வரியர வெழுபதி
குலைகுலை குலைதரு குடுமிய துடையது
கலகல வெனவெழு கழையொலி யொடுபுனல்
சலசல வெனவிழு தடவொலி யுடையது.

—ஒட்டக்கூத்தர்

## 6. வேளாளர் சிறப்பு

1. தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் இவர்க்குப்பின் வணிகரெனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ராணுலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே.

2. அழுங்குழவிக் கன்புடைய தாயேபோல் அனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளர் எளியரோ யாம்புகழ
உழுங்கொழுவிற் கருவீறி யுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல்.

3. வேதியர்தம் உயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிகர் உண்டாகிற் கூறீரே.

—கம்பர்

# உரைநடைப் பகுதி

# 1. உலகின் நாகரிக ஊற்று

இவ்வுலகம் படைக்கப்பட்ட தென்ஞான்றென்பதைத் திட்டமாய்க் கூறலரிது. ஆயினும் ஏதோவொரு காலத்திற்றான் அஃதுண்டாக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்ப துண்மை. அவ்வாறுலகம் படைக்கப்பட்டபொழுது இஞ்ஞான்றிருக்கும் பொருள்களெல்லா மிருந்தனவல்ல. உலகைப் படைக்க முற்பட்ட கடவுள் முதலில் ஒரு பூமியை யமைத்தார். பின்னர் செங்கதிரையுந் தண் கதிரையும் படைத்தார். காற்றையும் நீரையும் அமைத்தவ ரவரே. இவ்வாறுண்டாக்கப்பட்ட உலகு முதலில் வெற்றிடமாகவே யிருந்திருக்க வேண்டும். அவ்வுலகில் உயிர் முதலில் வெப்ப மண்டலத்திலேதான் தழைத்திருக்க வேண்டும். மக்கள் முதலில் படைக்கப்பட்டது வெப்ப மண்டலத்திலேதான். வெப்ப மண்டலக்கோடு இந்தியாவின் வழியாய் ஓடுகிறதென்பது மாநில வளவறிவுடையோர் கூற்று. ஆதலால் இந்தியாவில்தான் முதலில் உயிர் தழைத்திருக்க வேண்டுமென்பது பெறப்படும். அவ்விந்தியாவினும் தென்பக்கத்தேதான் முதன் முதலில் உயிர் பிறந்த தென்பது இலெமூரியா (Lemuria) என்ற தீவொன்றிருந்ததாகக் கூறப்படுவதினின்று தெரியவருகிறது. ஆசுதிரேலியாவினும் தென்னாப்பிரிக்காவினுஞ் சிற்சில பகுதிகளும் தென்னிந்தியாவு மொருங்கு சேர்ந்திருந்ததால் அவை இலெமூரியா என்ற பெயரான் முற்காலத் தழைக்கப்பட்டன. முதலிற் படைக்கப்பட்ட மனிதன், ஆடு மாடு குரங்கு முதலிய உயிர்களைப் போலவே மொழியொன்றுமறியானாய்த் திசையொன்றுந் தெரியானாய் ஓடியாடித் திரிந்து கிடைத்ததைத் தின்றுங் குடித்தும் வந்திருக்கவேண்டும். நாட்கள் வளரவளர அவனதறிவும் வளர்ந்து உணர்ச்சியும் பெருகி, இன்னும் மிகுந்த நலன்களைப் பெறவேண்டுமென்ற அவாவும் பெருகி யிருக்க வேண்டும். அவ்வவாவை நிறைவேற்ற வேண்டிப் பல வழிகளிலும் அவனோடித் திரிந்து பயன் தரக்கூடிய பொருள்களைத் தேடியிருக்க வேண்டும். உலகிலுள்ள மற்றப் பொருள்களை யெல்லாம் எவ்விதம் தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற பேரவாவே அவனிடம் குடிகொண்டிருக்கக் கூடும். இவ்வாறு மனிதன் நாளடைவில் கல், இரும்பு, செம்பு, பித்தளை, மரம் முதலியவற்றின் தன்மையை உணர்ந்து அவற்றால் வேண்டிய கருவிகளைச் செய்துகொண்டு, புல் பூண்டு கனி காய்

இலை சருகு இவைகளைத் தின்ன வாரம்பித்து, பின்னர் சிக்கிமுக்கிக் கல்லைக்கொண்டு நெருப்புமூட்டி உணவுப் பொருள்களைச் சிறிதும் பெரிதும் வேகவைத் துண்டு, ஆடையின்றித் திரிந்ததைவிட்டு, மரப் பட்டைகளாலுந் தளிர்களாலும் உடம்பை மூடிக்கொண்டு வாழ்ந்து வந்திருக்க வேண்டும். தன் வயிற்றுக்கு முடம்புக்கும் வேண்டிய நலன்களைத் தேடிக்கொண்ட பிறகு, உலகிற் படைக்கப் பட்டுள்ள மற்றப் பொருள்களினமைப்பையுந் தன்மையையும் பற்றி அறிய வேண்டுமென்ற அவா மனிதனிடத்துத் தோன்றி யிருக்க வேண்டும். அவ்வாறு ஆராய முற்பட்டபொழுது வெங்கதிரும் தண் கதிரும் முதலில் அவன் நெஞ்சில் அச்சத்தையும் மயக்கத்தையும் உண்டுபண்ணி யிருக்கவேண்டும். இருள் சூழ்ந்துழி அவ்வச்சம் பெருகி யிருக்கக் கூடும். இருளைப் போக்கும் கதிரவனெழுந்தகாலை அச்சம் நீங்கி மகிழ்ச்சி தோன்றியிருக்கக்கூடும். அம்மகிழ்ச்சி யெளிதில் அன்பாய் மாறியிருக்கக் கூடும். ஆகவே இருசுடர்களிடத்தும் அன்பு மார்வமும் பெருகி, மனிதன் அவ்விரண்டையும் அவற்றைச் சுற்றியுள்ள விண் மீன்களையும் வணங்கியிருக்கக் கூடும். இவ்வாறே நீர்க் கடவுளென்றும் வளிக் கடவுளென்றும் ஒளிக் கடவுளென்றும் நீரும் வளியும் ஒளியும் மதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்னரே படைக்கப்பட்ட பொருள்களிடத்திலிருந்து படைத்தவரிடத்தன்பு தோன்றி யிருக்கக் கூடும். இதுதான் முறை.

இம் முறைபற்றியேதான் பண்டைத் தமிழரும் வாழ்ந்து வந்தனரென்க. இலெமூரியா தென்னிந்தியாவை யுட்கொண்டதே யன்றி வடஇந்தியாவை யுட்கொண்ட தல்லவென்பது மேலே கூறப்பட்டது. ஆகவே முதலில் உயிர் தழைத்தது தென்னிந்தியாவில்தான். முதலில் உயிர் தழைத்த விடத்தே நாகரிகமும் முதலிற் பிறந்தது என்று சொல்வதுதான் முறை. அதுதான் தகுதி; அதுதா னுண்மை. பழைய காலத்தில் இந்தியாவிற்கு என்ன பெயரிருந்ததோ அறியோம். ஆயினும் வட இந்தியாவுந் தென்னிந்தியாவும் இரண்டு வேறு நாடுகளாகவே யிருந்தனவென்று நினைக்க இடமுண்டு. இவ்விரண்டு நாடுகளுக்கு மிடையே அரசபட்டணக் கடலும் (Rajputana Sea) கீழ்க் கடலு (The Eastern Sea) மிருந்தனவென்று தெரிகிறது. அவ்விரண்டு கடல்களையுந் தாண்டி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதென்பது முதல் மக்களுக் கெளிதானதன்று. தென்

னிந்தியாவில் மக்கள் தோன்றியதற்குப் பின்னரே வடஇந்தியாவில் மக்கள் தோன்றினார்கள். இதனுண்மை வெப்ப மண்டலப் பகுதியைப்பற்றி முன் கூறியதிலிருந்து தெரியவரும். தென்னாடு உயிருண்டாக்குவதில் தலைசிறந்ததென்பது ஆள்தொகைக் கணக்கிலிருந்தும் தெரிகிறது. ஆனால், மக்கள் தென்னாட்டிற் றோன்றிய காலத்தே வட நாட்டிலுந் தோன்றினார்க ளென்பது பெரும்பாலோரா லொப்பத் தகுந்தது.

அவ்வாறு தென்னிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் முதன் முதல் தோன்றியோர் யார்? தென்னிந்தியாவில் தமிழரும் வட இந்தியாவில் ஆரியருந் தோன்றினர். அத் தமிழரையே தமிளர், திரமிளர், திரமிடர், திரவிடர், திராவிடர் எனப் பலரழைத்தனர். திராவிடரென்பது பிற்காலத்தியரால் தமிழருக்கு இடப்பட்டபெயர். ஆயினும் முதற் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்தவர் தமிழரேயாவர். பண்டைத் தமிழ்க் குடிகளுள் பாணர் என்பவர் ஒரு வகுப்பார் என்பது யாருமறிந்தது. வெகு பிற்காலத்தெழுந்த புறநானூற்றிலும் இவர் வகுப்பைச் சேர்ந்தவரைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. 'துடியன் பாணன் பறையன் கடம்பனென்றிந்நான் கல்லது குடியுமில்லை' என்பது புறம். பாணர் என்ற பெயர் நிலத்தைப் பண்படுத்துவோ ரென்ற ஏதுப்பற்றியெழுந்ததாக விருக்கலாம். அன்றிப் பண்ணுக்குரியவ ராதலால் அவர் அவ்வா றழைக்கப்பட்டனர் என்று கூறுவதுமுண்டு. அவருள் மண்டைப்பாணர், யாழ்ப்பாணர், குடைகட்டிப் பாணர், நிலப்பாணர், வலைப்பாணர் எனப் பல பிரிவுகளுண்டு. மண்டைப் பாண ரென்போர் இறந்த மக்களது மண்டையோட்டையெடுத்துப் பக்குவப் படுத்தி மை முதலானவை செய்துகொண்டு மந்திர வாதிகளாகவுங் குறி கூறுவோராகவும் வாழ்ந்து வந்தோராவர். யாழ்ப்பாண ரென்போர் யாழைக் கையிலேந்தி இன்னிசை இயக்குவோர். குடைகட்டி வயிறு வளர்த்த பாணர் குடைகட்டிப் பாண ரெனப்பட்டனர். நிலப் பாணரென்போர் நிலத்தைப் பண்படுத்தி யுழுது பயிர் செய்தோராவர். வலைப்பாண ரென்போர் குளத்திலுங் குட்டையிலும் ஆற்றிலுங் கடலிலும் வலை பரப்பி மீன் பிடித்தோராவர்.

ஆகவே பண்டைத் தமிழ்க் குடியினரு ளொருவராகிய பாண ரென்போர் மந்திரவாதிகளென்றும் கைத்தொழிலாளிகளென்றும்

வேளாண்மைக்காரர்கள் என்றும் கடற்பழக்கமுள்ளவர்களென்றுந் தெரியவரும். ஆனால் மந்திரவன்மையால் நஞ்சுடைப் பாம்பைக் கட்டுப்படுத்த அவரா லியலவில்லை யாதலால், பாம்பைத் தெய்வமென்றே அவருட் பல்லோர் வணக்கி வந்தனர். பாம்பின் நஞ்சைப் போக்குதற்குரிய இலை வேர் பூண்டு முதலியவற்றைத் தேடும் ஏது அதனாலேற்படவே அவர்க ளிங்குமங்குந் திரிந்து தேடத் தொடங்கினர். குடை கட்டற்குரிய பொருளைக் குறித்தும் பலர் பலவிடத்துக்குச் சென்றனர். இவருட் சிலர் மலையாளம் சோழமண்டலக் கரைப் பக்கஞ் சேர்ந்து மரம் மிகுதியா யிருப்பதைக் கண்டனர். அங்கிருந்துசில கட்டைகளைப் போட்டுக்கொண்டு முதலில் கடலிலிறங்கிப் பார்க்கத் தொடங்கினர். பின்னர் நாளடைவில் படகுகள் கட்டிக் கொண்டு கடலிற் காதக் கணக்காகச் செல்லத் தொடங்கினர். இவ்வாறு படகுப் பழக்க மிகுந்த காலையில் தொலைவான துறைக்கும் அவருட் சிலர் போகத் தொடங்கினர். மீன் பிடிக்குங்கால் அவர்கட்கு முத்தும் பவளமு மகப்பட்டன. அவற்றினருமை தெரியாமலே வேடிக்கையாக அவற்றைக் கரைமீது கொணர்ந்து சேர்த்தனர். நாளடைவில் அதனாலாய பயனையும் அறிந்துகொண்டனர். பின்னும் அத்தகைய முத்துக்களையும் பவளங்களையுஞ் சேர்க்கவேண்டுமென்ற விழைவு தோன்றக் கடலிற் கணக்கின்றி வெகு தொலைவு செல்லத் தொடங்கினர். இவ்வாறு செய்ததில் ஒருகால் அவர்கள் அரசபட்டணக் கடலைக் கடந்து வடக்கே சென்றனர். இவர் வடநாடு சேர்ந்த காலையில் அங்கு ஆரியரெனப்படுவோ ரிருந்தனர். யாரோ அயலார் வந்தனரென நினைத்து ஆரியர் அவரைத் துரத்த முயன்றனர். ஆரியரிடையே கடற்பாணர் தம்முடன் கொண்டுபோன முத்துக்களையும் பவளங்களையும் பரப்பவே ஆரியர் அவரைத் துரத்துவதைவிட்டு அவைகளைப் பொறுக்கத் தொடங்கினர். ஆரியர் தமிழர் கொணர்ந்த முத்து பவளம் முதலியவற்றைப் பெறக் கருதியதாலும் தமிழர் ஆரியரிடமிருந்து உணவு முதலியவற்றைப் பெறக் கருதியதாலும் இருதிறத்தார்க் குள்ளும் ஒற்றுமை யேற்பட்டது. ஆனால் அவ்வொற்றுமை நீண்டு வாழ்ந்ததன்று. ஆரியர் தமிழரிடமிருந்து கடலிற் படகோட்டும் வகையைத் தெரிந்து கொண்டதாலும், உணவுப் பொருள்கள் கிடைக்கக்கூடிய விடத்தைத் தமிழர் ஆரியரிடமிருந் தறிந்து கொண்டதாலும் சிலகாலங் கழிந்து அவ்விருவர்க்குள் சண்டை சச்சரவு ஏற்பட்டது. ஒருவர் உதவி மற்றவர்க்கு வேண்டியதில்லை

என்னுங் காலத்து இத்தகைய பூசல்கள் விளைதல் இயல்பே. பின்னர்ப் பாணருட் பலர் வடக்கு வடமேற்கு ஆகிய திசைகளை நோக்கிச் சென்றனர். மரக்கலத்தில் வந்த பாணரில் தெற்கு நோக்கி ஊர் சேர்ந்தோர் சிலரே. அவர் தென்னாட்டிலிருந்த அவரினத்தார்க்கு வடநாட்டிலுள்ள மக்களைப்பற்றிய செய்திகளைக் கூறினர். ஆரியர் கடற்பாணரிடமிருந்து மரக்கலமோட்டும் வகையை அறிந்து கொண்டனரேயன்றி மரக்கலஞ் செய்வதற்குரிய மரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அம்மரம் சோழமண்டலக் கரையிலும் மலையாளத்திலுந்தான் மிகுதியாக வுண்டு. அதனாற்றான் தென்னாட்டிலிருந்த பாணர்க்குக் கடலைக் கடப்பதென்பது இசைந்தது. வடநாட்டு மக்களையும் பொருள்களையுங் காணவேண்டி முத்து, பவளம், அகில் முதலியவற்றைத் தாங்கள் மரக்கலங்களி லேற்றிக்கொண்டு பல பாணர்கள் வட இந்தியா சேர்ந்தனர். இவ்வாறு சென்ற இரண்டாவது கூட்டத்தாருட் பெரும்பாலோர் வடநாட்டிலேயே தமது தொழிலைச் செய்ய முற்பட்டனர். வடநாட்டைப் பண்படுத்தித் தானியாதிகளை விதைத்துப் பயன்பெற்று இன்பமாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நல்ல பயன் கொடுத்தது வரகுங் கோதுமையுமாம். ஆடுமாடுகளின் பாலில் சுவையைக் கண்டு அவர்கள் அவற்றைப் பெரிதுங் கொண்டாடத் தொடங்கினர்கள். மழை பெய்யாத காலத்தில் பயிர்கள் விளையாது போவதைக் கண்ட அவர்கள் நீர்க்கடவுள் சின்னங் கொண்டனரோவென அஞ்சினர். சினத்தைத் தணிக்கவுன்னி நீர்க்கடவுளை நினைத்து ஆடுமாடுகளின் சுவை மிக்க பாலைக் கடலிலும் ஆற்றிலுஞ் சொரிந்தனர். இவ்வாறு செய்யவே மழையும் சிலகால் பெய்தது. கடவுளின் சினத்தைத் தணிக்கும் வகையைக் கண்டறிந்ததைக் குறித்து அவர்கள் பெருமகிழ்ச்சி யெய்தினர். மழை மிகுந்து வெள்ளம் பெருகிப் பயிர்களமுகிப் போவதைக் கண்ட பாணர் காய்ந்த குச்சிகளையும் உலர்ந்த இலைகளையும் ஒன்று சேர்த்து நெருப்பு மூட்டிச் சுவை மலிந்த பாலான் வந்த நெய்யை யதனுட் சொரிந்து தீயைப் பரப்பினர். அவ்வாறு செய்யின், தீக்கடவுள் மகிழ்ந்து துணைபுரியும் என்று நினைத்தனரென்க. இதனைக் கண்ணுற்ற ஆரியரிற் சிலர் கடவுளை மகிழ்விக்க வெண்ணுங்காலையில் முழு ஆடுமாடுகளையே கடவுளர்க்களிக்க நினைத்து அவற்றை வெட்டி வீழ்த்தி நெருப்பிற் போட்டனர். இங்கு, பொன் முட்டையிட்ட வாத்தின் கதை நினைவுக்கு வருத லியல்பே. பாணர் ஆடுமாடுகளின் பாலையும்

நெய்யையு மளித்தனர்; ஆரியரோ அவற்றின் பாலனைத்தையும் நெய் கொடுக்கும் பொருள் அனைத்தையு மொருங்கே கொடுக்க நினைத்து அவற்றை யடியோடொழித்துப் போட்டனர். எனவே கடவுளை மகிழ்விக்கவும் அவர் சினத்தைத் தணிக்கவும் முதன் முதலில் வழி தேடி யறிந்தவர் தமிழரே யாவர். அவர் கொண்ட முறையின் வழி வந்ததே ஆரியரின் வேள்வியாகும்.

ஆரியரின் மிகப் பழைய நூலெனக் கருதப்படும் இருக்கு வேதத்திலும் பாணரைப்பற்றிக் குறிப்பிடப்பட் டிருக்கிறது. அவர் கடலிலுங் காலிலுஞ் சென்று வாணிகஞ் செய்பவரென்றும், வகுப்பு வேற்றுமை பாராட்டாதவராயினும் ஆரியர் கொள்கைகளுக் குடன்படாதவ ரென்றுங் கூறப்பட் டிருக்கிறது. அவர் கடற் கரை யோரமாய் வாழ்ந்து வந்தவரென்றுங் குறிப்பிடப்பட்டிருக் கிறது. அவரைப் பாணீஸ் (Panis) என்று இருக்கு வேதங் கூறும். மேல்நாட்டு இலக்கியங்கள் அவரைப் புயூனிக் குழுவினர் (Punic Race) என்று கூறுகின்றன. அவர்கள்தான் சிரியாவின் (Syria) பக்கத்தில் குடியேறிய பின்னர் பொனீஷியர்கள் (Phoenicians) என்றழைக்கப்பட்டனர்.*

பாணர்கள் காந்தாரா கபூலிஸ்தான் வழியாக மேல் ஆசியா விற்கும், போண்டஸ் (Pontus) மாகாணம் பாஸ்போரஸ் நில வொடுக்கம் (Isthmus of Bosphorous) இவைகளின் வழியாக ஐரோப்பாவிற்கும் பல பிரிவுகளாகச் சென்றனர். காந்தாரா கபூலிஸ்தான் வழியாகச் சென்ற பாணர் கீழ் அரேபியாக் கரை யையும் பாபிலோனியாவையுந் தாண்டிச் சிரியாவின் வழியாய்ச் சென்று நிலை நாட்டிய நாட்டிற்குப் பொனீஷியா என்று பெயர். பாணருடைய நாடு பொனீஷியா எனப்பட்டது. பெர்சியன் குடாக் கரையி லிருந்தோர்கள் அவரைக் கடற்கடவுள் என்று நினைத்து வணங்கினர்கள். பின்னும், பாணர், டைகிரிஸ், யூப்ரெட்டிஸ் (The Tigris and the Euphrates) ஆற்று முகப்புகளுக்கருகே குடியேறி நாகரிகமாகிய விளக்கை யேற்றினர். அவ்வாறேற்றப்பட்ட விளக்கிலிருந்து வட ஆசியாவெங்கு மொளி பரவிற்று. பாணர்கள் குடியேறுவதற்கு முன் பொனீஷியா லெபனுன் (Lebanon) என்ற பெயர் பெற்றிருந்தது. பொனீஷியர்

* ஏ. சி. தாஸ் அவர்கள் எழுதிய 'இருக்கு வேத இந்தியா' என்னும் நூலைக் காண்க.

என்பவர் கிறித்து பிறப்பதற்கு முப்பதினுயிரமாண்டுகட்கு முற்பட்டவர் என்பது ஜுலியஸ் ஆப்ரிக்கானவின் முடிவு. ஆகவே பாணர்கள் வரலாறு அதற்கு முற்பட்டதே என்று தெரியவரும்.

இதற்குள்ளாக நிலத்தி னமைப்பு சிறிது மாறிற்று. பஞ்சாப்பிற்குத் தெற்கேயிருந்த கீழ்க்கடலும் அரசபட்டணத்தை யொட்டியிருந்த அரசபட்டணக்கடலும் 'நாடு கடலாகும்; கடல் நாடாகும்' என்பதை யொப்ப மேடாயின. மரக்கல மோட்டப் பாணரிடம் கற்றுக்கொண்டும் போதிய மரமில்லாததால் கடல் கடக்க முடியாதிருந்த ஆரியர்க்கு இப்பொழுது தென்னுடு நோக்கிப் போக முடிந்தது. ஆதலால் தமிழரது நாகரிகத்தைக் கற்றுக்கொண்டு மென்மேலும் பெருக்குவதற்கு எளிதின் அவரால் முடிந்தது. சோழமண்டலக் கரையி லிருந்த தமிழர் வடநாடு போந்த கடற் பாணரையொத்த நாகரிகத்தினர். அச் சோழர்கள் பாணருடன் சென்று ஒரு நாட்டிற் குடியேறினுர்கள். அக் குடியேற்ற நாட்டிற்குச் சோழநாடு அல்லது சால்தியா (Chaldea) என்று பெயர். அந் நாட்டையே ஷைனுர் நாடென்றும் (Shinar Land) பாபிலோனியா வென்றுங் கூறுப. அங்குக் குடியேறியவர்க்குச் சுமேரியர் (Sumerians) என்ற வேறு பெயருமுண்டு. பாபிலோனியாவிலேயே சுமேரியர் பிறந்தவர் என்று கூறுவதற்கு, அந் நாட்டு மண்ணும் நிலமு மிடந்தரா. சால்தியாவிலுள்ள டெல்லா (Telloh) என்ற விடத்தி லிருந்து அகப்பட்டுள்ள சில உருவங்களின் தலைகள் தமிழரின் தலைகளை ஒத்திருக்கின்றன. தமிழரது மொழியைப் போன்றே சுமேரியரது மொழியு மொட்டுச்சொற்களையுடையது. அச் சுமேரியர்தான் பாபிலோனியாவிலும் அசிரியாவிலும் நாகரிகத்தை வளர்த்தோராவர். இருக்கு வேதத்தில் சந்தன மரத்தைக் குறித்து யாதொரு குறிப்புங் காணப்படாததாலும், சந்தன மரம் மலையாளக் கரையின் தனிப் பொருளாகையாலும் பாபிலோனியோ இலக்கியங்களிற் காணப்படும் சந்தனம் தமிழராகிய சால்தியராலேதான் கொண்டு போகப்பட்டதென்று நினைக்க இடமுண்டு. மொழி பற்றிய இலக்கணமும் மண்டையோடு பற்றிய செய்திகளும் தமிழர்க்குஞ் சுமேரியர்க்குமுள்ள தொடர்பை வலியுறுத்துகின்றன. பாபிலோனியாவிலும் பாம்பைத் தெய்வமாகக் கொண்டாடுவதினின்று அத்தொடர்புண்மை பசுமரத் தாணியாகின்றது. சோழர்கள் சால்தியர்க்குச் சிற்ப வேலைகளைக் கற்பித்தனர்.

தென்னிந்தியாவி லிருந்து சென்ற சேத்துகள் அல்லது சிரேஷ்டிகள் (Seths or Shrestis) என்போரே சால்தியாவில் சேட்டுகள் (Saits) என்றழைக்கப்பட்டனர். அச் சேட்டுகளின்றேல் சால்தியாவில் கலேப்பெருக் கெள்ளளவு மிருந்திரா தென்பது திண்ணம். மெஸப்பொட்டோமியாவி லெழுந்த இந்தச் சால்தியரின் நாகரிகம் பதினுயிர மாண்டுகட்கு முற்பட்ட தென்ப.

பாண்டியர்கள் பெர்சியா அரேபியா வழியாகச் சென்று எகிப்தில் (Egypt) குடியேறினர். அவர் பண்டுநாட்டி லிருந்து (Land of Punt) வந்ததாக அந்நாட்டு வரலாற்றிலுங் கூறப்பட்டுளது. பண்டுநா டென்பது பாண்டிய நாடாகிய தமிழ் நாடே என்பது வ. சி. தாஸ் என்பவரின் கொள்கை. எகிப்தியருடையவும் தமிழருடையவும் மண்டையோடுகள் ஒத்திருப்பதே போதிய சான்று. தமிழரைப் போலவே எகிப்தியரும் ஒவ்வொரு திங்களிலும் மலக்கழிவு மருந்தருந்தினர். பெரியோரைவணங்குதல் இருபாலாரிடத்துமுண்டு. உயிரினழிவிலாத் தன்மையில் இருபாலார்க்கும் நன்னம்பிக்கை யுண்டு. துன்பக் காலத்திலும் பிரிவாற்ருமை நிகழ்ந்துழியும் தலைமயிரைக் களையாது வளரவிடும் வழக்கமிருவரிடமு முண்டு. அம்மை அப்பன் என்ற பகுப்பு எகிப்தியரிடமு முண்டு. புறவீழுக்கு மிகுந்த உயிரென்று பன்றி தமிழராலு மெகிப்தியராலும் பன்னுளாக இகழப்பட்டு வருகிறது. இவையெல்லாம் எகிப்தியருக்கும் தமிழருக்குமுள்ள புணர்ச்சி யுண்மையைக் காட்டுகின்றன.

இவ்வாறு தமிழராகிய பாண்டியரின் தொடர்பால் வந்த எகிப்தியருடைய நாகரிகமே உலகிற் பெரும்பாலும் பரவிற்று. எகிப்தியர் நாகரிகமே முதலிலெழுந்த தென்று சிலரும் பாபிலோனியரின் நாகரிகமே முற்பட்டதென்று சிலரும் கூறி வாதிப்பர். அவ்விருவர் நாகரிகமும் தமிழரான் வந்ததே யன்றி வேறல்ல வென்பது பாண்டியர் குடியேறிய நாடே எகிப்தென்றும், சோழர் குடியேறிய நாடே சால்தியா வென்றும், சால்தியர் குடியேறிய மெஸப்பெட்டோமியாவாகிய நாடே பாபிலோனியா வென்றும் வழங்கப்பட்டன என்று முற்கூறிப் போந்தவாற்ருல் விளங்கா நிற்கும். பாணருடைய நாடே பொனீஷியா வென்றும் மேலே கூறப்பட்டது. இவ்வெகிப்தியரும் பாபிலோனியரும் பொனீஷியருமே கிரேக்கருக்கு நாகரிகங் கற்பித்தவர். கிரேக்கருக்குக் கற்பிக்கப்பட்டதைக் கிரேக்கரிட மிருந்து உரோமர் அறிந்தனர். பின்னர், உரோமர் தாங்

கற்றுக்கொண்டதை ஐபீரியர், கெல்த்கள், தியூதர்கள், சிலேவர்கள் (Iberians, Celts, Teutons and the Slavs) முதலானோர்க்குத் தெரிவித்தனர். இவ்வாறே உலகெங்கும் தமிழரிடமிருந்து நாகரிகம் பரவிற்று. ஆகவே, தமிழ்நாடே உலகின் நாகரிக ஊற்று என்பது பெறப்படும்.

உலகெங்கும் நாகரிகம் பரவுதற்கு அடிப்படையாக வேண்டப்படுவன யாவுந் தமிழரிட மிருந்தனவென்று முன்னரே கூறப்பட்டது. தமிழர்தான் உலகில் முதலிற்றோன்றித் தழைத்தவர் என்றும், அவர் வேளாண்மை, வாணிபம், மந்திரம், கடற்றுண்டல், சிற்பவேலை இவைகளிற் சிறந்தவ ரென்றும், படைக்கப்பட்ட பொருள்களிலிருந்து படைத்தவரைப் பற்றிய நினைப்பு அவருக்குண்டாயிற் றென்றும் மேலே கூறப்பட்டது. தமிழரின் பாலளித்தல் நெய் சொரிதற் செய்திகளினின்று பிறந்ததே ஆரியரின் வேள்வி என்பதும் முன்னரே சொல்லப்பட்டது. பண்டைத் தமிழர் நெசவு வேலையிலுந் தச்சுவேலையிலுஞ் சிறந்தவரென்றுந் தெரிகின்றது. பால் தயிர் முதலியவற்றைக் கொட்டி வைக்கக்கூடிய தோற்பைகளவரிட முண்டென்றும் தெரிகிறது. பாணர்தான் சங்கான் வந்த அணிகளை முதன் முதல் அணிந்துகொண்டோராவர். அவ்வணிகளை யணியும் வழக்கத்தி லிருந்தே பிறவணிகளை யணியும் வழக்கம் பிறந்தது. ஆகவே, உலகினர் வேளாண்மை, நீர்ப்பாய்ச்சல், சிற்ப வேலை, மரக்கல மோட்டல், நெசவுவேலை, தச்சுவேலை, அணிவேலை, வேள்வி, கடவுள் வணக்கம் முதலியவற்றைப் பண்டைத் தமிழரிட மிருந்து அறிந்து கொண்டா ரென்பது விளங்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழரின் வரலாறு பேரிருளான் மூடப்பட்டிருக்கிறது. இதற்கு எண்ணிலாக் கடல் கோள்களும் கணக்கிலாக் கனலெழுச்சிகளுமே ஏதுவாகும். கறையான், செல் முதலிய பூச்சிகளும் தமிழர்தம் நூல்களைக் கொள்ளை கொண்டன. ஆதலாற்றான் தமிழரது பழைய வரலாற்றை எழுத முற்படுவோர் முட்டுறுகின்றனர். தமிழரது பழமைத் தன்மையை வெளிப்படுத்த அவர்களுக் குதவியா யிருப்பவை பிறநாட்டுப் பிறமொழி நூல்களே யாம். அந் நூல்களில் தமிழரைப் பற்றிய குறிப்புக்கள் சிலவாகவே யுள. ஆதலால், அச்சிறு குறிப்புக்களையும் நம்மறிவையும் ஒன்றுக்கொன்று துணையாக் கொண்டு தமிழரது பழமைத் தன்மையை விளக்க வேண்டியதா யிருக்கிறது. அவ்வழி பற்றியேதான் இக் கட்டுரையும் வெளி வருகிறதென்க.

## 2. மகாபலிபுர மாண்பு

தொண்டை நாட்டு விஷ்ணு ஸ்தலங்கள் இருபத்திரண்டனுள் ஒன்ருக இலங்கும் இவ்வூர், ஆழ்வார்களால் திருக்கடன்மல்லை எனப் பாடப்பட்டுள்ளது. வடமொழியில் மஹாமல்லபுரம் என்றும், ஆங்கிலேயத்தில் சப்த ஆலயங்கள் என்றும் குறிக்கப்படுவதும் இதுவே. பிரபல சிவ ஸ்தலமான திருக்கழுக்குன்றத்திலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள இவ்வழகிய சிற்றூர், கடற்கரையில் அமைந்து விளங்குகின்றது. மகாபலிபுரம் எனும் இதன் பெயரைக்கொண்டு, மகாபலிச் சக்கரவர்த்தியின் இராஜதானியென இதனைச் சிலர் இயம்புவர். ஆனல், பரசுராமரது காலத்திற்கு முன்னர் விளங்கிய மகாபலிச் சக்கரவர்த்திக்கும் இவ்வூருக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. அக் கூற்று சரித்திர ஆதாரமற்ற தொன்றேயாம். கடற்கரையில் அமைந்துள்ள நல்வளம் செறிந்த இடமாதலின், இஃது கடன்மல்லை எனும் பெயர் பெற்றதென்ப.

இத்தலம், கி. பி. இரண்டாம் நூற்ருண்டுக்கு முன்னரே இருந்த பூதத்தாழ்வார் காலத்திற்கு முன்பே சிறந்ததொரு துறை முகப்பட்டினமாக இருந்து வந்திருப்பதாக அவரது பாடலால் தெரிய வருகின்றது.

'புலங்கொள் நிதிக்குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை வலங்கொள் என் மடநெஞ்சே!'

எனும் திருமங்கையாழ்வார் பாசுரமும் ஈண்டு ஊன்றி நோக்கத் தக்கது. கி. பி. மூன்றும் நூற்ருண்டு முதல் ஒன்பதாம் நூற்ருண்டு வரை காஞ்சிபுரத்தை ஆண்டுவந்த பல்லவ மன்னரது இராஜதானிகளுள் இஃதும் ஒன்ரு யிருந்ததென்பது, இங்குக் காணப்படும் பஞ்ச ரதங்கள் எனும் ஒரு கற் கோயில்களைச் செய்வித்த நரசிம்ம வர்மன் என்னும் மன்னன், தனது சிறப்புப் பெயராய மஹாமல்லன் என்பதால் இவ்வூரின் பெயரை மஹாமல்லபுரம் என மாற்றி யமைத்தனனெனச் சரித்திரக்காரர்கள் சாற்றுவதாலும், திருமங்கையாழ்வார் காஞ்சியி லுள்ள திருப்பதிகளுள்

ஒன்றை 'பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம் அதுவே' எனப் போற்றுவதாலும் இனிது விளங்கும்.

சிறு குன்றுகளைக் குடைந்து செவ்விய ஆலயங்களாக அமைக்கும் வழக்கத்தைத் தமிழ் நாட்டில் பல விடங்களிலும் பரவச் செய்தவனும், கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவனுமான மகேந்திரவர்மன் எனும் பல்லவ மன்னனே இவ்வூரிலுள்ள சிற்பங்களைச் செய்வித்தவன் எனச் சில சரித்திர ஆராய்ச்சியாளரும்; சிற்சிலவற்றை அம்மன்னன் கட்டியது உண்மையே எனினும், பெரும்பாலனவற்றை அவனது மகனாகிய வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் என்பவனே கட்டுவித்தனன் எனச் சில சரித்திர ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். இவ்வூரிலுள்ள கோயில்கள் ஒரு நூற்றாண்டு காலமாகக் கட்டப்பட்டு வந்தன என்றும், அவை பல்லவ சாளுக்கிய யுத்த காரணத்தினாலோ அல்லது வேறு எக் காரணத்தினாலோ பூர்த்தியாகாமல் அரைகுறையாக நிறுத்தப்பட்டுவிட்டன என்றும் சிலாசாசனங்களை ஆராய்ந்த ஆங்கில சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இவ்வூரிலிருந்து அரைமைல் தூரத்திலுள்ள 'பஞ்சபாண்டவ ரதங்கள்' எனப்படுவன, இருதயங்களின் உருவங்கள் உடையனவாகவும், சிறந்த வேலைப்பாடுடன் கூடியனவாகவும் தனித்தனிப் பாறைகளில் குடைந்து செய்விக்கப்பட்ட ஒரு கற்கோயில்களேயாம். உண்மையில் பஞ்சபாண்டவர்கட்கும் இக் கற்றேர்கட்கும், யாதொரு சம்பந்தமும் இருப்பதாக சரித்திர பூர்வமான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை. அவ்வைந்து தேர்களுள் முதலில் உள்ள 'யுதிஷ்டிர ரதம்' எனப்படும் பெரிய கல்தேருக்கு மூன்று நிலைகள் அமைக்கப்பட்டுள. அவைகளின்மீது ஏறிப் பார்க்குமிடத்து சிவபெருமான், விஷ்ணு, பிரமா, கிருஷ்ணன் முதலிய பல திறப்பட்ட உருவங்கள் காணப்படுகின்றன. ஏனைய நான்கு தேர்கட்கும் நிலைகள் கிடையா. இத்தகைய கல் தேர்கள் வேறு எங்கும் காணக் கிடையாத பேரழகுடையனவே என்பதில் ஐயமில்லை. அவற்றைக் கவனித்து நோக்குமிடத்து, அவ்வளவு அழகுடையனவாக அவற்றைப் பாறைகளில் தனித்தனியாகக் குடைந்து அமைத்த தமிழ்நாட்டுச் சிற்பிகளின் சிற்பத் திறமையும் விடாமுயற்சியும் அகத்தில் தோன்றி பெரு வியப்பையும் பெரு மகிழ்ச்சியையும் விளைவிக்கின்றன. அவற்றினருகிலுள்ள யானை, சிங்கம்,

இடபம் முதலியவற்றின் சிலைகளும் மிக அழகுடையனவே. அக் கல் தேர்களின் அழகை நேரில் கண்ணாரக் கண்டு களிக்கவேண்டுமே யன்றி வருணித்து எழுதிக்காட்ட இயலாது.

மற்றும், இவ்வூரிலுள்ள பெருமாள் சந்நிதியின் பின் புறத்திலும் வேறு இரு மண்டபங்களிலும் விளங்கும் சிற்பங்கள் பெரிதும் வியக்கத் தக்கனவாம். அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன அர்ஜுன தவம், கோவர்த்தனோத்தாரணம், மஹிஷாசுர வதம், சேஷ சயனம், வராஹாவதாரம், வாமனாவதாரம் எனும் ஆறே. அவற்றுள் முதன்மை பெற்று விளங்கும் அர்ஜுன தவம் எனும் அற்புதச் சிற்பம், இரண்டு பெரிய கற்பாறைகளில் செதுக்கப்பட் டிருத்தலின் அதன் அழகை வருணித் தெழுதிக் காட்ட முடியாது. பாசுபதாஸ்திரம் பெறுவான் வேண்டி பசுபதியை நோக்கிக் கொடுந்தவம் புரியும் அர்ச்சுனன், ஒரு காலைத் தூக்கிக் கொண்டு மற்றொரு காலைத் தரையில் ஊன்றி இரு கரங்களையும் சிரத்தின்மேற் கொண்டு நிற்பது போன்றும், ஊண் எதுவுமின்றி இடையறாத் தவத்தில் ஈடுபட்டதால் கால்களும் கைகளும் பெரிதும் வாடி யிளைத்தும் மார்புக் கூண்டின் எலும்புகள் நன்கு தெரியுமாறு இளைத்தும் நிற்பது போன்றும், தவத்தால் மெலிந்து வாடிய மேனியுடன் கூடிய முனிவரும், இன்னிசைக் கருவிகள் ஏந்திய எழில் மிகு கந்தருவரும், இடைக்குக் கீழ் அரவ உருவமும் இடைக்குமேல் அரிவை உருவமும் உடைய நாககன்னிகைகளும் சூழ்ந்து விளங்குவது போன்றும், வில்லும் கணையும் பற்றிய வேடர் குழுவும் பூதகணமும் தொடரப் பசுபதி பார்த்தன் முன் தோன்றி நிற்பது போன்றும் செதுக்கப்பட்டிருக்கும் காட்சி கண் கவர் வனப்புமிக்க காட்சியாக விளங்குகின்றது. அவ் வற்புத சிற்பத்தை உற்று நோக்க நோக்க தமிழ் நாட்டுச் சிற்பிகளின் சிற்பத் திறமை அகத்தில் தோன்றி வியப்பும் உவப்பும் விளைவிக்கின்றன.

கோக்களும், கோபிகைகளும், கோபாலர்களும் சூழ்ந்து விளங்க, கோவிந்தன் கோவர்த்தன கிரியைத் தாங்கி நிற்பது போலச் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பமும் அழகுடையதே. பல வித படைகள் பற்றிய எட்டுக் கரங்களுடன் கூடிய துர்க்காதேவி, பாயும் சிங்கத்தின் மீது ஏறிப் பகைவனான மஹிஷாசுரனோடு போர் செய்வதுபோல செதுக்கப்பட்டிருக்கும் சிற்பம், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் அருமை வாய்ந்த சிறந்த வேலைப்பாடு

உடையதாகும். தேவியின் வீரமும் தாண்டவம் செய்யும் திருமுகமும் அசுரரை அச்சுறுத்தும் போர்க் கோலத்தின் கம்பீரமும் உற்று நோக்க நோக்க உவகையைப் பெருக்குவனவாக உள. அதற்கெதிரில் செதுக்கப்பட்டுள்ள திருமாலின் சேஷசயனமும், பக்தியை விளைவிக்கும் அருந்தோற்றம் உடையதே. பூமிதேவியை ஆர்வத்தோடு அணைத்துக்கொண்டு ஆதிசேடன் தலையில் ஓரடியை வைத்து, அமரர் துதிக்க நிற்கும் ஆதிவராக மூர்த்தியின் உருவமும், சங்கு சக்கரம் கதை வாள் வில் எனும் ஐம்படைகளும் ஏந்திய வரும் எட்டுத் திருக்கைகளுடன் கூடியவருமான திரிவிக்கிரமப் பெருமான் உலகளந்தருளிய திருக்கோலத்தைக் குறிப்பிடும் சிற்பமும் கவனித்து நோக்குமிடத்து வியப்பையும் உவகையையும் விளைவிப்பனவாக விளங்குகின்றன. அவ்வாறு சிற்பங்களையன்றி **'மற்றொரு வித அர்ஜுனன் தவம்' 'திரி மூர்த்திகள்'** எனும் வேறு இருவகைச் சிற்பங்களும் இருக்கின்றன.

இவ்வூர்க் கடற்கரையில் அமைந்துள்ள சிவாலயம், பாழடைந்து சிதறுண்டு கிடக்கின்றது. அதனுள் விளங்கும் சிவலிங்கம் உருட்சியாயிராமல் பன்னிரு பட்டைகள் உடையதாகவும் பாதிக்கு மேல் உடைத் தெடுக்கப்பட்டதாகவும் உள்ளது. அச் சிவலிங்கம் அக் கோயிலின் உட்புற உச்சிவரை முட்டிக்கொண்டிருக்குமாறு அவ்வளவு நீண்டதாக இருந்ததாகவும், ஆங்கிலேயரோ வேறு எவரோ அதைத் தகர்த்து எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் தெரியவருகின்றன. அக் கோயிலின் எதிரில் அமர்ந்து அலைமோதும் ஆழியை நோக்குவோர் ஆனந்த பரவசராவர். அச் சிவாலயத்தை அடுத்து தலசாயியாக பள்ளிகொண்டுள்ள திருமாலின் விக்கிரகமும் கவனிப்பாரற்று இருட்டறையில் இருக்கின்றது. அக்கோயிலே ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்ற ஆதி சந்நிதி என்றும், அது எவ்வகைக் காரணங்களினாலோ பழுதுபட நேர்ந்த பின்பே வேறு சந்நிதி கட்டப்பட்டதென்றும் இவ்வூரார் கூறுகின்றனர். இவ் வூரிலுள்ள இக் கடற்கரைக் கோயில் கற்றோர்கள் சிற்பங்கள் முதலியவற்றைப் பார்க்கச் செல்வதற்கு, ஆங்காங்கு அழகிய பாதைகள் அமைக்கப்பட்டுள.

இவ்வூரிலுள்ள ஆதிவராக ஸ்வாமி ஆலயம் அதிபுராதனமானது. வலத் திருத்தொடையில் வனிதை மண்மகளை இருத்திக் கொண்டு நிற்பவராக இங்குள்ள வராகமூர்த்தி எழுந்தருளி

யிருப்பதால், இத் தலத்திற்கு வல வேந்தை எனும் மற்றொரு பெயரும் உண்டு. 'ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில் கொண்ட-ஞானத்தின் ஒளி உருவினர்' ஆகிய இங்குள்ள மூலவரது விக்கிரகம், மிக மிகச் சிறியதாக அமைந்து விளங்குவது பெரிதும் வியக்கத் தக்கது. ஆழ்வார்கள் பதின்மருள் முதலில் தோன்றிய காரணத்தால், முதலாழ்வார்கள் எனும் பெருமைபெற்ற மூவருள் ஒருவராய பூதத்தாழ்வாரது அவதார ஸ்தலமும் இதுவே.

வேறு எவ்விடத்தும் காண்பதற்கு அரிய அற்புதச் சிற்பங்கள் முதலியன நிறைந்த இவ்வூரை, ஆங்கிலேயர் இன்றும் பெரிதும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். அம் மட்டுமோ? வெறும் வாயளவில் புகழ்வதோடு மட்டும் நின்று விடாமல், இவ்வூரைப் பார்த்துப் போகவரும் பொதுமக்களின் சௌகரியத்தை முன் னிட்டு வழியிலுள்ள கால்வாயைக் கடக்க இலவசப் படகுகள் ஏற்படுத்தியும், கற்றேர்கள் கடற்கரைக் கோயில் முதலியவற்றைப் பார்க்கச் செல்ல அணி அணியான சவுக்கு மரங்களால் இருபுறமும் அழகு செய்யப் பெற்ற நல்ல பாதைகளை அமைத்தும், 'சிலைகள் சிற்பங்கள் முதலியவற்றிற்குச் சேதம் விளைவிப்போர் தண்டிக்கப் படுவர்' என்று விளம்பர வாயிலாக எச்சரித்தும், சிற்றூராயினும் கடற்கரையில் அமைந் திருப்பதை முன்னிட்டு முப்பது ஆண்டு கட்கு முன்னர் பெரும் பொருட் செலவில் கண்கவர் வனப்பு மிக் குடையதாகச் சிறந்ததொரு கலங்கரை விளக்கத்தைக் கட்டியும், இவ்வூரின் அற்புதச் சிற்பங்களையும் சரித்திரக் குறிப்புகளையும் ஆராய்ந்து அவ்வப்போழ்து புகைப் படங்களுடன் வெளியிட்டும், ஆங்கிலேயர், 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனும் நன்னோக்கத்துடன் உழைத்து வருவது பெரிதும் போற்றற் குரியது. எனினும், இங்குள்ள சிற்பங்கள் முதலியவற்றைக் கண்டு களித்துச் செல்ல ஆங்கிலேயர் இவ்வூருக்கு அடிக்கடி வந்து செல்வதுபோல், தமிழர்கள் வந்து செல்லக் காணேம். நமது செந்தமிழ் நாட்டுச் சிற்பக் கலையின் அற்புத அழகைக் கண் குளிரக் கண்டு களிப்பதில் அயல் நாட்டினராய ஆங்கிலேயருக்கு உள்ள ஆர்வம், நமது தாய் நாட்டினராகிய தமிழ் நாட்டினர்க்கு இல்லா திருப்பது பெரிதும் வருந்தத் தக்கதே. நமது பண்டைய மன்னர் களின் அரிய செயல்களை ஆராய்வதில் ஆங்கிலேயர் ஆர்வங் கொண்டு நிற்க, வீண் பெருமை பேசும் நம் தமிழ் நாட்டவர் அவ்

வின்பத்தை அனுபவியாது வாளா கிடப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். கடந்தன கடக்க. இனியும் வாளா இராது தமிழ் நாட்டுச் சிற்பிகளின் வியக்கத் தக்க பேராற்றலும், பல்லவ மன்னர்களது சிறந்த செயல்களும், கண்கவர் வனப்பு மிக்க காட்சிகளும் ஒருங்கே விளங்கும் இவ்வழகிய கடன்மல்லைப்பதியை, ஒவ்வொருவரும் நேரிற்சென்று கண்குளிரக் கண்டு களிப்புறுவார்களாக.

---

## 3. மகா மந்திரம்

ஒரு தேசமோ, ஒரு சங்கமோ, அல்லது ஒரு பகுதியினரோ முன்னேற்றமடைய ஒரு பெரிய மகா மந்திரம் உண்டு. அது மூடுமந்திரமல்ல. மூக்கைப்பிடித்து மூச்சைஅடக்கிக் கற்றுக்கொள்ள வேண்டிய மந்திரமல்ல. மிகவும் எளியதோர் மந்திரம். ஆயினும் செயற்கரிய காரியங்களையும் எளிதில் செய்து முடிக்க வல்ல மந்திரம்.

டம், டம், டண், டண், டம், டம் என்று பாண்டு வாத்தியம் முழங்குகின்றது. சென்னை மலைச்சாலை (Mount Road) யில் செல்வோர் யாவரும் திடீரென நின்று திரும்பிப் பார்க்கின்றனர். நமது மாட்சிமை தங்கிய அரசாங்கத்தாரது இராணுவப்படை கோட்டையினின்று பல்லாவரம் செல்லுகின்றது. நால்வர் நால்வராக அணி வகுத்து வரிசை வரிசையாய்ப் போகின்றனர். ஆயிரம் கைகள் ஒரே காலத்தில் முன்னே செல்கின்றன. ஆயிரம் கால்கள் ஒரே காலத்தில் முன்னே நடக்கின்றன. படை செல்வது பல மனிதர்கள் செல்வது போல் தோன்றவில்லை. ஆயிரம் கால்களும் ஆயிரம் கைகளும், ஐந்நூறு தலைகளும் கொண்ட ஒரே மனிதன் ஒரே நோக்கத்துடன் செல்வதுபோல் தோன்றுகின்றது. இதை நேரில் பார்த்தவர்களே நன்கு உணர முடியும். இது படைப்பயிற்சியின் பயனும் விளங்குள்ள கட்டுப்பாட்டின் பயன். இந்தக் கட்டுப்பாடு (Discipline) என்பதுதான் அந்த மாய மந்திரம்.

முப்பத்து முக்கோடி மக்களையுடைய ஒரு பெரிய கண்டத்தை மூன்று கோடிக்குக் குறைவான நாட்டிலுள்ளோர் ஆறாயிரம் மைலுக் கப்பாலிருந்து அரசுபுரிந்து வருகின்றனர். அதிலும் அந்த முப்பத்து முக்கோடி ஜனங்களையுடைய நாட்டில் மூன்று லக்ஷம் ஆளும் வர்க்கத்தினர்தாம் உள்ளனராம். இஃதென்ன ஆச்சரியம்! இராணுவ பலத்தினால்தான் ஆளுகின்றனர் என்ற காரணத்தைக் கூறுபவர் கூறலாம். ஆனால் இராணுவ பலத்தால் அல்ல என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். உண்மையான காரணம் கட்டுப்பாடு (Discipline) தான். அந்த மாய மந்திரம்தான் ஆறாயிரம் மைலுக் கப்பாலிருந்து பாராளு மன்ற (Parliament) த்தார் அரசர் பெருமான் மூலம் தங்கள் தீர்மானங்களை இராஜப்பிரதிநிதிக்கு அனுப்புகின்றனர். அவை முறையே கவர்னர்களுக்கும், ஜில்லா கலெக்டர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு இலகுவாக நிறைவேறுகின்றன.

சாவி கொடுத்த மாத்திரத்தில் காலங் காட்டும் கடிகாரம்போல் இச் சர்க்காரின் வேலை நடக்கின்றது. அவர்களுள் நூற்றுக்குத் தொன்னூறு பேர் இராணுவப் பயிற்சியுள்ளவர்கள்; படைப்பயிற்சியின் பயனால் கட்டுப்பாடு, ஒழுங்கு என்பதின் உண்மை அறிந்தவர்கள். ஆளப்படுவோரோ கட்டுப்பாடு சிறிது மில்லாதவர்கள். சமாதான காலங்களில் ஆங்கிலேயரைப்போல் உலக இன்பங்களை அனுபவிப்பாரில்லை; மலைப்பிரதேசங்களிலும், கண்காக்ஷி சாலைகளிலும், நடன சாலைகளிலும், மற்றும் பல களியாட்டங்களிலும் கோடைக்காலத்து வண்டே போல் (Like the Summer Bee) இன்பமாகக் காலங் கழிக்கின்றனர்; உயர்ந்த ஆடைகளை அணிகின்றனர்; பங்களாக்களில் பல பங்காக்கள் அல்லது மின்சாரவிசிறிகளுடனும் பொழுது போக்குகின்றனர்; ஆனால் யுத்தமாரம்பித்தவளவில் உயர்ந்த ஆடையை விட்டு முரட்டுக் காக்கிக்கு வந்து விடுகின்றனர்; பங்களாவைவிட்டுக் காட்டிலும் வனாந்திரத்திலும் மழை, வெயில், பனி இவைகளைப் பொருட் படுத்தாது போர் வீரராகச் சேவகம் செய்கின்றனர். பிரபுவின் புத்திரனும் தொழிலாளியின் மகனும் தோளுடன் தோள் கொடுத்து யுத்தம் செய்கின்றனர்; இந்தத் தியாகத்தைத் தங்கள் தாய்நாட்டிற்குக் கட்டுப்பாடுடன் ஒரே காலத்தில், மவுண்ட் ரோடில் சென்ற ஆயிரங் கைகளும் கால்களும்போல் செய்கின்றனர். இந்தக் கட்டுப்பாடுள்ள தியாகத்தின் பலனை (வெற்றியை)க் கடந்த மஹா யுத்தத்தில் கண்கூடாக் கண்டோம்.

இந்து தேச சரித்திரப் போக்கு, இந்தக் கட்டுப்பாட்டின் (Discipline) மேன்மையினாலேயே மாற்றப்பட்டிருக்கிறது. இதன் உண்மையை ஆற்காட்டு முற்றுகை உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெள்ளிதில் விளக்கிக் காட்டுகின்றது. பலமற்ற ஒரு சிறிய கோட்டையில் ஐம்பது ஆங்கிலேயப் போர் வீரர்களுடனும், முன்னூறு இந்தியச் சிபாய்களுடனும், தீரனான ராபர்ட் கிளைவ் இருந்து கொண்டு, பதினாயிரம் (முப்பது மடங்கு பெரியது) கொண்ட **சண்டா சாகேப்பின்** முற்றுகையை எதிர்த்து நின்றான். கோட்டைக்குள் உணவு குறைய ஆரம்பித்தது. வடித்த கஞ்சியைத் தாங்கள் உட்கொண்டு சத்து மிகுதியுள்ள சோற்றை ஆங்கிலேயருக்குக் கொடுத்து முன்னூறு கட்டுப்பாடுள்ள இந்தியச் சிபாய்கள் கிளைவ் கட்டளைப்படி நடக்கலானார்கள். எதிரிகள் தைரியத்தில்

குறைந்தவர்க ளல்லர்; மத வைராக்கியம் மிகுதியுமுள்ள மகம்மதியர்கள் ; வெடி மருந்து, பீரங்கி, உணவு எல்லா வசதிகளும் பன்மடங்குடையவர்கள். மோகரம் தினத்தன்று கரிய இரவில் ஆவேசத்துடன், பீரங்கிகளுடனும், யானைகளுடனும் கோட்டைக் கதவுகள் தாக்கப்பட்டன. மதிற் சுவர்களின் நாலாப் பக்கங்களிலும் ஏணிகள் மாட்டப்பட்டுப் பகைவர் ஒருவர் பின் ஒருவராக ஏற வந்தனர். ஆனால், கட்டுப்பாடுள்ள அந்த முன்னூறு பேர்கள் மனங் கலங்காமல் கிளைவ் கட்டளைக் கடங்கி அவரவர் தம் பகுதிச் சுவரில் நின்று மேலேறிய ஒவ்வொருவனையும் துப்பாக்கி கொண்டு தாக்கினர். ஏக காலத்தில் முன்னூற்றைம்பது துப்பாக்கிகள் சுட்டன. எல்லாம் ஒரே மனிதனால் சுடப்பட்டவைபோல் எங்கு எங்கு போக வேண்டுமோ அங்கங்கே ஊடுருவிச் சென்றன. எதிரிகளின் பீரங்கி யாட்கள் வீழ்த்தப்பட்டார்கள். யானைகள் சில மல்லாந்தன ; பல வெறிகொண்டு திரும்பி யோடின. ஆயினும் சண்டா சாகேப்பின் வீரர்கள் பின்னடைந்தார்க ளில்லை; மறுபடியுங் கூடிப் பன்மடங்கு ஆவேசம் கொண்டு தாக்கினர். மறுபடியும் முன்னூற்றைம்பது கைகள் ஏக காலத்தில் திடீர் திடீர் என வெடித்தன. கோட்டைக்குள் ளிருந்து வெளியே சென்ற ஒவ்வொரு குண்டும் பகைவர் படையில் ஊடுருவித் துன்பமிக விளைத்தன. கடைசியில் பகைவர் பீரங்கிகளையும், தங்கள் கஜானாவையும் விட்டு முதுகு காட்டி ஓடினர். படைப் பயிற்சியின் பலனாய் வரும் கட்டுப்பாடு (Discipline) தீரமும், வீரமும், அஞ்சா நெஞ்சமும் தரும். அதன்முன் கட்டுப்பாடில்லா வீரமும், தீரமும், எண்ணிக்கைப் பெருக்கமும் பலியாது.

ஆற்காட்டு முற்றுகை மட்டுமல்ல, பிளாசி யுத்தமும் அந்தக் கட்டுப்பாட்டின் மேன்மையையே விளக்குகின்றது. இவ்விரு வெற்றியுமே நமது தேச சரித்திரத்தை மாற்றி எழுத அடிகோலின. பின்னால் கட்டுப்பாடு, வெற்றி மேல் வெற்றி கொண்டு மகத்தானதொரு இராஜ்யத்தை ஸ்தாபித்தது.

இந்தக் கட்டுப்பாடு இராணுவப் பயிற்சியினால் மாத்திரம்தான் வருமென்று நினைக்க வேண்டாம். தமிழர் தங்கள் இஷ்ட தெய்வங்களை நினைத்து, சில புண்ணிய நாட்களில் உணவு தவிர்த்து, புலன்களைத் தம் வயப்படுத்தி, கட்டுப்பாடு (Discipline) கொண்டிருந்தனர். இந்த விரதங்கள் சுகாதார முறைப்படி சிலரால் போற்றப்

படுகின்றன. சுகாதார முறையில் தரும் பலனைக்காட்டிலும், ஆத்மார்த்தமாய் அது பெரும் பலனைக் கொடுக்கின்றது. உண்மைக் கடவுளை நினைத்து உடலை வருத்தி, சுகத்தை நீக்கி மனத்தை ஒரு வழிப்படுத்துவோருக்கு விலையற்ற மன உறுதி அமைகிறது. அந்த மன உறுதி மண்ணையும் விண்ணையும் வெற்றி கொள்ளத் தக்கது. தீயது விலக்கி நல்லது கொள்ளும் ஆவலும் உறுதியும் தருகின்றது. மனக் கட்டுப்பாடு, விரதங்களை அனுஷ்டிப்பதாலும் அடைதல் கூடும். ஆனால், இது மனிதனை மறு உலகிற்குரியவனாக்குகின்றது. ஆத்மார்த்த முறையில் வழிபடுவது இவ்வுலகிற் கேற்றவனாகச் செய்வதில்லை.

நாம் இவ்வுலகையே வெறுத்துவிட முடியாது. நமக்கு மக்கள் வேண்டும், மனைவி வேண்டும், சுதந்திரம் வேண்டும், பொருள் வேண்டும். இவை வேண்டாமென்று பொய் வேதாந்தம் பேசுவதிற் பயனில்லை. ஆனால் இவ்வுலக வாழ்க்கையிலேயே ஆழ்ந்துவிடுவோர் மனித னல்லன். அவன் மிருகமே யாவான். உலக விவகாரங்களில் ஈடுபட்டிருந்தாலும், தர்மத்தை நாட்டில் நிலைக்கச் செய்வதில் முயன்றிருந்தாலும் தாமரை இலையில் உள்ள தண்ணீர்த் திவலை போன்று பற்றற நிற்க வேண்டும். நமது நோக்கம் ஆண்டவன் திருவடி. ஆகவே உலகின் மூலமாய் மறு உலகை அடைய வேண்டும். இதனால் இராணுவப் பயிற்சியின் பலனால் வரும் மனக் கட்டுப்பாடும் விரதங்களை அனுஷ்டிப்பதால் வரும் கட்டுப்பாடும் உடையவர்களா யிருக்கவேண்டிய தவசியம், அவசியம், ஆயிரமடங் கவசியம். ஒன்று தவிர்த்து ஒன்று கொண்டதன் பயனால்தான் இப்போது நமது தேசம் இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு வந்து சேர்ந்துள்ளது.

வீரப் பிரதாப சிவாஜி இவ்விரண்டு வழிகளா லேற்பட்ட கட்டுப்பாடுடையவன் ; தேவி பவானியைத் தொழுது விரத மனுஷ்டிப்பவன் ; படைப் பயிற்சியும் உள்ளவன் ; ஆகவே மகா ராஷ்டிர ஹிந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து பேரும் புகழும் பெற்றான். வீரனான சிவாஜி வாழ்க. அப் பெரியான் வாழ்ந்த நாட்டில் அவன் வாழ்க்கையின் தத்துவம் பரந்து வெற்றி யளிக்க.

பிரதாபசிங்கின் சேனைத் தலைவனான சாமுண்டிராய் என்பான் மற்றொரு அத்தாக்ஷி. அவன் சாமுண்டி உபாசனை மிகுதியும்

உள்ளவன்; படைப் பயிற்சியிலும் வல்லவன். அவன் பேரைக் கேட்டளவில் பகைவர் நடுங்கிக் கலக்கங் கொண்டனர்; வெற்றி மேல் வெற்றி கொண்டான். அவன் வாழ்க்கைத் தத்துவம் புது மணம் வீசி எங்கும் பரவுக.

அன்பனே நீ ஒரு தீரன். வீரர்களான பார்த்தன், இராமன், சிவாஜி இவர்கள் வம்சத்தில் உதித்தவன். 'தேடிச் சோறு நித்தம் தின்று பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, மிக வாடி உழன்றுத் திரிந்து நரை கூடிக் கிழப்பருவ மெய்தி கொடிய கூற்றுக்கிரையெனப் பின் மாயும் வேடிக்கை மனித'னல்லன். காலமென்னும் கடற்கரையில், சேவகத்தின் வலிமையால், உன் பாதச்சுவடுகள் படியவேண்டும். மகா மந்திரத்தைக் கடைப்பிடி. வீரமுண்டு. வெற்றியுண்டு. விடுதலை யுண்டு.

# 4. மனுச் சோழன் பெருமை

மூன்று சுடர்களிலும் முதற் சுடராகி மேன்மை யடைந்த சூரிய குலத்திற் பிறந்து அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களில் சிறந்தவராய்; அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவராய்; உயிருக் குறுதியைத் தருகின்ற நல்ல கேள்விகளை யுடையவராய்; எல்லா உயிர்களுக்கும் இதஞ் செய்கின்றவராய்; வேத மோது தலும், யாகஞ் செய்தலும், இரப்பவர்க் கீதலும், பிரஜைகளைக் காத் தலும், ஆயுத வித்தையில் பழகுதலும், பகைவரை அழித்தலு மென்னும் ஆறு தொழில்களும், வீரமுள்ள சேனைகளும், செல்வ முள்ள குடிகளும், மாறாத பொருள்களும், மதிநுட்பமுள்ள மந்திரியும், பகைவரா லழிக்கப்படாத கோட்டையு முடையவராய்; வழக்கை அறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக்கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக் குறைகளை முடித் துங் கொடுப்பவராய் ; பாலொடு பழஞ் சேர்ந்தாற்போல முக மலர்ச்சியோடு இனிய வசனஞ் சொல்பவராய்; பின் வருவதை முன்னே அறிந்து கொள்வதும் உறவினர், அயலார், சிநேகர், பகைவர், இழிந்தோர், உயர்ந்தோர் முதலான யாவரிடத்திலும் கால வேற்றுமையாலும் குண வேற்றுமையாலும் உண்டாகின்ற நன்மை தீமைகளை உள்ளபடி அறிந்து கொள்வதுமாகிய விவேக முள்ளவராய்; அகங்காரம், காமம், கோபம், லோபம், மோகம், பொறாமை, வஞ்சகம், டம்பம், வீண் செய்கை முதலான குற்றங் களைத் தினையளவுங் கனவிலும் புரியாதவராய்; துர்க் குணங்களை யுடைய சிறியோர் சேர்க்கையை மறந்தாயினும் நினையாமல், செய் வதற்கு அரிதான செய்கைகளைச் செய்து முடிக்க வல்ல நற்குணங் களையுடைய பெரியோர்களைச் சகாயமாகக் கொண்டு செய்யத் தக்க காரியங்களைத் தெரிந்து செய்தும், செய்யத் தகாத காரியங்களைத் தெரிந்து விடுத்தும், பகைவலியும் தன்வலியும் துணை வலியும் கால நிலைமையும் இட நிலைமையு மறிந்து காரியங்களை நடத்தியும், அடுத்த வர்களது குணம் வல்லமை ஊக்கம் முதலான தன்மைகளை ஆராய்ந்து தெளிந்து அவரவர் தரங்களுக்குத் தக்க உத்தியோகங்களை அவ ரவர்க்குக் கொடுத்தும், பழமை பாராட்டியும், சுற்றந் தழுவியும்

கண்ணோட்டம் வைத்தும், சாதி யியற்கை, ஆசிரம வியற்கை, சமய வியற்கை, தேசவியற்கை, காலவியற்கை முதலான உலகியற்கைகளை அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கபடி ஆராய்ந்து செய்தும் நல்லொழுக்கத்துடன் நடப்பவராய்; குடிகளுக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாக எண்ணித் தமக்கு வந்ததுபோல் இரக்கங்கொண்டு மனமுருகுவதனால் தாயை யொத்தவராய்; அத்துன்பத்தை விட்டு இன்பத்தை அடையத்தக்க நல்லவழியே அறியும்படி செய்விப்பதனால் தந்தையை யொத்தவராய்; அவர்களுக்கு அந்த நல்வழியைப் போதித்து அதிலே நடத்துகின்றபடியால் குருவை யொத்தவராய்; அந்தக் குடிகளுக்கு இகபர சுகத்தைக் கொடுப்பதற்கு முன்னின்று, அதுபற்றி முயற்சி செய்யும்போது வருமிடையூறுகளை நீக்குகின்றபடியாலும் அந்த ஒழுக்க வழியிலிருந்து தவறினால் அந்தக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதித்து அவ்வழியில் பின்னும் நடத்துகின்றபடியாலும் தெய்வத்தை யொத்தவராய்; குடிகளுக்கு ஆபத்து நேரிடும்போது கட்டிய வஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோலுடனே அந்த ஆபத்திலிருந்து நீங்கும்படி கை கொடுப்பதனால் சிநேகனை யொத்தவராய்; நல்ல காரிய மிது, கெட்ட காரிய மிது வென்று காட்டுகிறபடியால் கண்போன்றவராய்; குடிகளுக்கு அச்சம் அவல முதலானவை நேரிடாமல் காத்து வருதலால் உயிர் போன்றவராய்; குடிகள் தம்மை நினைக்குந்தோறும், 'இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய புண்ணிய மூர்த்தியை அரசனாகப் பெற்ற நமக்குக் குறையொன்று மில்லை' என்று களிக்கின்றபடியால் பொன்புதையலை யொத்தவராய்; கைம்மாறு வேண்டாது கொடுத்தலால் மேகத்தை யொத்தவராய்; அறிவே ஆயிரங் கண்களாகவும், கைகளே கற்பகமாகவும், கண்களே காமதேனுவாகவும், திருமுகமே சிந்தாமணியாகவும், மனோதிடமே வச்சிராயுதமாகவுங் கொண்டபடியால் இந்திரனை யொத்தவராய்; சிங்காதனமே செந்தாமரையாகவும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களும் அடைதற்குரிய நான்கு மார்க்கங்களே நான்கு முகங்களாகவுங் கொண்டு அந்தந்த மார்க்கங்களில் அந்தந்தப் பொருள்களை விருத்தி பண்ணுகிறபடியால் பிரமனை யொத்தவராய்; ஆக்கினை சக்கரமே சக்கராயுதமாகவும், செங்கோலே திருமகளாகவும், சிறந்த பெரும் புகழே திருப்பாற்கடலாகவும், யுக்தமல்லாத காரியங்களை ஒழித்திருப்பதே யோக நித்திரையாகவுங் கொண்டு மண்ணுலகி

னுள்ள உயிர்களைக் காத்து வானுலகிலுள்ள தேவர்களுக்கு யாகங்க
ளால் அமுது கொடுத்து வருகின்றபடியால் திருமாலை யொத்த
வராய்; சோர்வில்லாமை தூய்மை வாய்மையென்னு மூன்றுமே,
மூன்று கண்களாகவும், துணிவுடைமையைச் சூலமாகவுங் கொண்டு
பாவங்களை யெல்லாம் நிக்கிரகஞ்செய்து வருகின்றபடியால் உருத்திர
மூர்த்தியை யொத்தவராய்; வாட்டத்தை நீக்கி மகிழ்ச்சி செய்கின்ற
அருளுள்ளபடியால் அமிர்தத்தை யொத்தவராய்; சிவபக்தியில்
மிகுந்தவராய்; பொறுமையில் பூமியை யொத்தவராய்; தருமமே
உருவாகக்கொண்டு நடு நிலையிலிருந்து மனுநீதி தவறாது விளங்கிய
மனுச்சோழ ரென்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர் கலிங்
கர், குலிங்கர், வங்கர், கொங்கர், அச்சியர், கொச்சியர், தெங்கணர்,
கொங்கணர், தெலுங்கர் முதலான தேசத்தரசர்களெல்லாம் திறை
கட்டி வணங்க உலக முழுவதையும் ஒரு குடை நிழலில் வைத்துச்
செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்யுங்காலத்தில், உலகெங்கும்
புலியும் பசுவும் கூடிப்போய் ஒரு துறையில் நீர் குடித்துலாவியும்,
சிங்கமும் யானையுஞ் சேர்ந்து திரிந்தும், பருந்தும் கிளியும் பழகி
மகிழ்ந்தும், கூகையுங் காகமும் கூடிப் பறந்தும், பூனையு மெலியும்
பொருந்தி யிருந்தும், இந்தப்படி மற்றுமுள்ள விரோதமாகிய உயிர்
களும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் சிநேகஞ் செய்து வாழ்ந்
திருக்கவும்; மரங்கள் புல்லுகள் முதலான நடையில்லாத உயிர்க
ளும் வாடுதல் உலர்தல் உதிர்தல் வெட்டுண்ணல் முதலான குறைக
ளில்லாமல் வளர்ந்தோங்கி வாழ்ந்திருக்கவும்; பெருங்காற்று பெரு
வெள்ளம் பெருமழை தீப்பற்றல் இடிவிழுதல் முதலான உற்பாதங்
கள் சிறிது மில்லாமல் சுகுணமான காற்றும் மிதமான வெள்ளமும்
பருவ மழையும் தவறாம லுண்டாயிருக்கவும்; பசி நோய் உடம்பு
நோய் அவமிருத்து உயிரச்ச முதலான துக்கங்களொன்றுஞ் சேரா
மல் சுகமே சூழ்ந்திருக்கவும்; பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர
ரென்கிற ஜாதியாரும், பிரமசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நி
யாசி என்கின்ற ஆசிரமத்தாரும், சைவர் வைணவர் வைதிகர் என்
கின்ற சமயத்தாரும், தங்கள் தங்களுக்குரிய ஆசாரங்களில் குறைவு
படாமல் வாழ்ந்திருக்கவும்; அன்னதானம், சொர்ணதானம், கோதா
னம், பூதானம் முதலான தானங்களும், தேவாலயங் கட்டுவித்தல்,
திருக்குள மெடுத்தல், செழுஞ்சோலை வைத்தல், தண்ணீர்ப் பந்தல்
வைத்தல், சத்திரங் கட்டுவித்தல் முதலான தருமங்களும், சாந்தி
ராயண முதலான விரதங்களும், தியானஞ் செய்தல் ஜெபஞ்

செய்தல் முதலான தவங்களுந் தவறுபடாமல் ஓங்கியிருக்கவும்; தியாகேசப் பெருமானுக்கும் மற்றுமுள்ள தெய்வங்களுக்கும் திரிகால பூசைகளும் திருப்பணிகளும் திருவிழா முதலான சிறப்புக்களும் குறைவில்லாமல் நடக்கவும் அவரது ஆக்கினையே செய்வித்து வந்தது.

அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே பூவே பறிபடுவது; புனலே சிறைபடுவது; காற்றே அலைபடுவது; கல்லே கடினமுடையது; மாவே வடுபடுவது; வாழையே குலைபடுவது; வண்டே மதுவுண்பது; பந்தே அடிபடுவது; பரியே கட்டுண்பது; நெல்லே குத்துண்பது; நெற்கதிரே போர் படுவது; வயலே வளைபடுவது; மாதரிடையே குறைபடுவது; தரித்திரமே தரித்திரப் படுவது; துக்கமே துக்கப்படுவது; பொய்யே பொய் படுவது; இவையல்லாமல் பொருள் பறிக்கப்படுவோரும், சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும், பகைவராய் அலைக்கப் படுவோரும், கடினமனமுள்ளவர்களும், வடுப் படுவோரும், குலை படுவோரும், மது வுண்போரும், அடிபடுவோரும், குத்துண்போரும், போரிற் படுவோரும், கட்டுண்போரும், வளை படுவோரும், குறை படுவோரும், தரித்திரப் படுவோரும், துக்கப் படுவோரும், பொய் படுவோரும், வேறே யில்லாமையால் அந் நாட்டில் மேன்மையே விளங்கி யிருந்தது.

# 5. வெண்ணெய் அண்ணல்

‘தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று’

என்று வள்ளுவர் அருளிய உண்மைக்குச் சிறந்த சான்றாக, இவ்வுலகமுள்ளளவும் தம் புகழ் நின்று நிலவ வாழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் சிலரே யாவர். அவர்களுள் வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலும் ஒருவராவர். தமிழகத்தின் தனிப்பெரும் புலவரான கம்பர், தமது இளமைப் பருவத்தில், தந்தை தாயின்றித் தமியராய் இவ்வண்ணலை அடைந்த காலத்து அவருக்கு உண்டியும் உடையும் உவந்தளித்த பெருந்தகை இவரே யாவர். இப்பெரியார், கவியரசர் கம்பரை அவ்விள வயதில் ஆதரியாது விட்டிருப்பரேல், இத் தமிழகம், தன்னகத்தே கம்பரெனும் பெரும் புலவரை யுடைத்தா யிருப்பதும், அப்பெரும் புலவர் இராம காதையைப் பாடியிருப்பதும் ஆகிய பெருமையை இழந்தே நிற்கும். ஆகவே, கம்பரெனும் பாவலரைத் தமிழுலகுக்குத் தந்தளித்த புரவலர் வெண்ணெய் அண்ணல் என்று கூறின் அது ஒரு சிறிதும் மிகையாகாது.

இவ்வாறு, தம் புகழ் நிறுவ உதவியா யிருந்த வெண்ணெய் அண்ணலின் புகழை இவ்வுலகமுள்ளளவும் நின்று நிலவ அமைக்கக் கருத்துட் கொண்டார் கவியரசர்; கொண்ட கருமத்தையும் முட்டின்றி முடிப்பாராயினர். உலகம் புகழும் உத்தமனான இராம னது காதையைப் பாடிய கம்பர் அக் காப்பியத் தலைவனது புகழ் இந்நிலவுலகில் நிற்குமளவும், தம்மை யாதரித்த சடையப்ப வள்ளலா ரது புகழும் நிற்கும்படி யருளிய பெருமையை யாரே அளவிட் டுரைக்க வல்லார்?

‘வென்றிலன் என்றபோதும் வேதமுள்ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ அவ்விராமன்பேர் நிற்குமாயின்’

என்று வீரமுழக்கம் செய்யும் இராவணன் புகழும், அந்த அமரர்தம் புகழை விழுங்கிய அரக்கர் கோனை யடக்கிய இராமன் ஆற்றலும், அவ்விராம காதையில் புகழ்ந்து கூறப்படும் வெண் ணெய் வாழ் சடையப்ப வள்ளலாரது புகழும், இவ்வுலகில்

என்றும் நின்று நிலவும் என்பதற் கோர் ஐயமிலது. இனி கவியரசர் கம்பர், இப் பெருந்தகையின் புகழை எத்திறத்தில் ஆய்ந்து, தமது ஒப்பற்ற நூலில் அமைத்துக் காட்டுகின்றார் என்று பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பரது கவி நலத்தில் வெண்ணெய் அண்ணலின் கொடைத்திறம் உலகோர் புகழும் உயரிய மாண்புடையதாய் இலங்குகின்றது. 'தாங்கரும் தவத்தின் மிக்கோனாகிய' விசுவாமித்திரன், தன்னிடம் அன்பு பூண்டொழுகும் இராம இலக்குமணர்களுக்குப் படைக்கலம் அருளிய பான்மையைக் கவியரசர் கம்பர்,

'மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தென சடையன் வெண்ணெய்
அண்ணல் தன் சொல்லே யன்ன படைக்கலம் அருளினானே'

என்று எடுத்துரைக்கின்றார். இவ்வாறு போற்றிப் புகழும் உரையில், சடையப்பரது வள்ளன்மையும் மொழிதவறா நேர்மையும் அழகாய் விளங்கக் காணலாம். மருந்துண்பாரிடம் வியாதி நில்லாதது போல சடையப்ப வள்ளலை அணுகிய மக்களிடத்து வறுமை நோய் நில்லா தொழியும் என்பதும், அப் பெருந்தகையின் மொழி நேர்மைபோல முனிவர் அருளிய படைக்கலங்களும் தத்தம் தொழில்களில் தவறா என்பதும் கவியரசர் கருத்தாகும். வெண்ணெய் அண்ணலின் வண்மையே வண்மை. இவ்வண்மை மிக்க வள்ளல் தன்னைத் தஞ்சமென் றடைந்தாரைத் தாங்கும் பெற்றியும், கம்பரது கவி நலத்தால் அழகுறுவதாயிற்று. அறத்தின் வழிநின்ற ஆரியர்கோனது ஆணையால் அரிகள் ஆழியைக் கடக்க அணைகட்டப் போந்தன. அணைகட்டப் போந்த வானரங்கள், பெரிய பெரிய மலைகளை அடியோடே பேர்த்து எடுத்து, கவிக்குல தச்சனும் நளன் என்பானிடம், எறிகின்ற காலத்து அப் பெரு மலைகளை யெல்லாம் இவன் தனது தடக்கையில் தாங்கி அணை கட்டினான். குரங்குகளோ ஒன்றிரண்டல்ல. எண்ணில் கோடி குரங்குகள். தத்தம் ஆற்றலின் அளவிற் கேற்பக் கற்களைப் பெயர்த்து எடுத்து எறிகின்ற காலத்து ஒரு கல்லை யாவது தளர விடாமல் தாங்கிய நளனது பெருமையே பெருமை! இந்த இடத்தைச் சித்தரிக்க விரும்பிய கம்பர், இவ்வாறு நளன் தன்பால் எறியப்படும் மலைகளை யெல்லாம் தாங்குகின்ற தன்மைக்கு உவமானம் தேடித் தேடித் திரிகின்றார். தன்னை எத்தனைபேர்

தஞ்சமென்றடைந்த காலத்தும், அவர்களது தன்மை நோக்காமலும் அவர்களைக்காக்கும் அருமை நோக்காமலும் எல்லோரையும் தாங்குகின்ற வள்ளன்மை மிகுந்த வெண்ணெய் வாழ் சடையப்பரையே உவமையாகக் குறிக்கின்றார்.

'மஞ்சினிற் றிகழ்தரு மலையை மாக்குரங்
கெஞ்சுறக் கடிதெடுத் தெரியவே நளன்
விஞ்சையிற் றாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்'

என்று சாற்றுகின்றார் கவியரசர்.

வள்ளன்மையோடு விளங்கிய வள்ளல் நமது சடையப்பரே யாவர்.

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'

என்றும் வள்ளுவர் அருளிய உண்மைக்குச் சிறந்த சான்றாய் 'ஈத்துவக்கும் இன்பம்' அறிந்து தம்மை அடைந்தோரது வறுமையைத் தீர்த்தும் தம்மைத் தஞ்சமென் றடைந்தோரைத் தாங்கியும் புகழ்பெற வாழ்ந்த பெருமான் நம் வெண்ணெய் அண்ணலே யாவர். இத்தகைய அண்ணலின் புகழ் இந்நில உலக முழுதும் பரவியுள்ள தென்பதற்கு ஓரே ஒரு சான்று மட்டும் காட்டலாம்.

'வண்ணமாலை கைபரப்பி யுலகைவளைந்த விருளெல்லாம்
உண்ணவெண்ணித் தண்மதியத் துதயத்தெழுந்த நிலாக்கற்றை
விண்ணுமண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய் சடையன்றன் புகழ்போலெங்கும் பரந்துளதால்'

என்பது கவிக்கூற்று. சடையப்ப வள்ளலாரது புகழ் இவ்வுலக முழுவதும் பரந்து நிற்பதுபோல், தண்ணிய கதிர்களையுடைய மதியினது ஒளியும் உலகெலாம் பரந்து நின்றது என்று விளக்கும் பான்மையைவிட கம்பர் நிலவொளி வீசும் நீர்மைக்கு வேறு உதாரணம் கண்டா ரல்லர்.

இஃதெல்லாம் ஒரு புறமிருக்க, கவியரசர் கம்பர், கடைசியாக சடையப்ப வள்ளலுக்கு அருளும் பெற்றியே பெற்றி. இராமனது

திருமுடியணி விழா நடத்த விரும்பிய கம்பர் அத் தோற்றத்தைக் கண்முன் தெற்றெனக் கண்டு தமது அழகிய கவி நலத்தால் புனைந்துரைக்கின்றார். அங்கு அவர் தீட்டிய சொற் சித்திரத்தை யொட்டித்தான் இன்று ஓவிய வல்லார் பலரும் இராம பட்டாபி ஷேகப் படம் வரைந்துள்ளனர் போலும்!

‘அரியணை யனுமன்றாங்க வங்கதனுடை வாளேந்தப்
பரதன் வெண்குடை கவிக்க விருவருங் கவரிவீச
விரைசெறி குழலியோங்க வெண்ணெயூர்ச்சடை யன்றங்கண்
மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி’

இராமனுக்கு மௌலி சூட்டும் பெருமை வசிட்ட ருடையதா யிருந்தும், அம் மௌலியை ஏந்தி வந்து இவ் வசிட்டரிடம் தந்து, அம் மகுடஞ் சூட்ட வேண்டும் உரிமை சடை யப்ப வள்ளலாரது முன்னோர்களுக்கே இருந்தது என்னும் விஷ யம் எத்துணை தூரம் உண்மையோ அறியக்கூடவில்லை எனினும் புனைந்துரை கூறும் புலவர் பெருமகன் எவனும் தன்னை ஆதரித்த தலைவனுக்கு, இச்சிறந்த பதவியைவிட வேறு உயர்ந்த பதவி அளிப் பது இயலாத காரியம். வள்ளலின் புகழே புகழ்! கம்பரின் கவிப் பெருமையே பெருமை!

தம்மை ஆதரித்த வள்ளலது புகழ், இவ்வுலக முள்ளளவும் நின்று நிலவ தமது ஒப்பற்ற காப்பியத்தில் அமைத்தருளிய கம்பரது நன்றிமறவா நேர்மை, நாம் கண்டு களிக்கத் தக்க ஒரு பொருளாகும். இவ்வாறு தங்களை ஆதரித்த தலைவர்களை தாங்க ளியற்றும் காப்பியங்களிடையே புகழ்ந்து அவர்தம் பெருமை யைப் போற்றுவதே கவிமரபாகும். ‘வெண்பாவிற் புகழேந்தி’ யெனும் பெயர் பெற்று, தமிழகத்தின் தனிப்புகழை ஏந்தி நிற்கும் ‘மாலார்களந்தைப் புகழேந்தி’ யும் தம்மை ஆதரித்த சிற்றரச னை சந்திரன் சுவர்க்கியையும் அவன் புலவர்களுக்கு வரையாது கொடுக்கும் வள்ளன்மையையும்,

‘வண்டார் வளவயல்சூழ் வள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந்திரன் சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி’

என்றும், பாரதம் பாடிய வில்லியும் தம்மை ஆதரித்த தலைவனுன கோங்கர் கோனை,

'நாகையாப் புகழான் பெண்ணை நதிவளஞ்சுரக்கு நாடன்
வாகையாற் பொலிதிண்டோளான் மாகதக் கொங்கர் கோமான்
பாகையாட் கொண்டான் செங்கை பரிசு பெற்றவர் நெஞ்சென்ன
ஓகையாற் செருக்கி மீண்டார் உதிட்டிரன் சேனையுள்ளார்'

என்றும் போற்றிப் புகழ்கின்றார்கள். இவ்விரண்டு பெரும் புலவர்களும் இந்த வள்ளல்களைப்பற்றிப் புகழ்ந்து கூறும் செய்யுள்கள் இன்னும் பலவுள.

இவ்விடத்து ஒரு சிறு கதை ஞாபகத்துக்கு வருகின்றது. புகழேந்தியின் நளவெண்பாவையும், கம்பரது இராமாயணத்தையும் ஆராய்ந்த அன்பர் இருவர், தாம்தா மெடுத்துக் கொண்ட புலவர்களின் பெருமையைப்பற்றி வாதஞ்செய்ய நேர்ந்த காலையில் ஒரு அன்பர், 'புகழேந்தி நூறு செய்யுள்களுக்கு ஒருதரம் தமது தலைவனுன சந்திரன் சுவர்க்கியைப் புகழ்ந்துரைக்கின்றார். ஆனல் கம்பரோ, ஆயிரம் பாட்டிற் கொருதரம்தான் தமது வள்ளலைப் போற்றி யுரைக்கின்றார். ஆதலால் நன்றி மறவா நேர்மையில் கம்பர் புகழேந்திக்குப் பின்பட்டவரேயாதல் வேண்டும்' என்று தருக்கிக்கூறினராம்; அப்போழ்து, மற்றொரு அன்பர், 'அற்றன்று, சந்திரன் சுவர்க்கியைப் போன்ற வள்ளல்கள் இவ்வுலக மக்களில் நூற்றில் ஒருவராயிருப்பர் என்பது புகழேந்தியின் கருத்தாயிருக்க சடையப்பரைப் போன்ற வள்ளல்கள், ஆயிரத்தி லொருவரே யாவர் என்பது கம்பரின் கருத்தா யமைந்தது. ஆதலின் அன்பரே! ஏற்றமுந் தாழ்வும் யார் யாருக்கென எடுத்துரையும்' என்றியம்பினராம். இதன் உண்மையை ஆராய்வது ஒருபுற மிருக்க இச்சிறு சம்பவம், சடையப்பரது வள்ளன்மையையும் கம்பரது நன்றி மறவா நல்லன்பையும் பெரிதும் விளக்குவதாகும் அன்றோ!

இதுகாறும் எடுத்துக் காட்டிய சிறு சான்றுகளால் கம்பரை இளமையில் ஆதரித்தவர் சடையப்ப வள்ளலார் என்பதும், அவ் வள்ளல் தம்மை யடைந்தோரின் வறுமையைத் தீர்த்தும் தம்மைத் தஞ்சமென் றடைந்தாரைத் தாங்கியும் அதனுல் தம் புகழ் நிறுவிய

பெருமான் என்பதும், அப் பெருந்தகையின் புகழைத் தாம் பாடிய இராம காதையில் பலவிடத்தும் கம்பர் போற்றி யுரைக்கின்றார் என்பதும் ஒரு சிறிது விளக்க முறுவதாகும். வள்ளல்தம் புகழ் நின்று நிலவுக.

## 6. தோலும் நிறமும்

சரீரத்தின் தோல் இரண்டு வெவ்வேறு அடுக்காக இருக்கிறது. வெளியி லிருக்கிற தோல் பொய்த் தோல் அல்லது புறத் தோல் என்று சொல்லப்படுகிறது. உள்ளே இருக்கிற தோல் மெய்த் தோல் அல்லது அகத்தோல் என்று சொல்லப்படுகிறது. தோலானது நரம்புகளையும் இரத்த நாடிகளையும் ஏராளமாகக் கொண் டிருக்கிறதை நாம் எல்லாரும் நமது தோலின் வேதனை அநுபவத்தால் அறிகிறோம். அந் நரம்பு நாடிகளால்தான் ஸ்பரிஸ உணர்ச்சியும் வேதனை உணர்ச்சியும் உண்டாகின்றன. அது, சுவாசாசயத்தையும் மூத்திரப் பிண்டத்தையும் போல இரத்தத்தைச் சுத்தி செய்யும் ஓர் உறுப்பு. அதனுடைய வேலைகள் இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழிகால்கள் அல்லது குழாய்கள் மூலமாகச் செய்யப்படுகிறதாகக் காலஞ்சென்ற ஸர். இராஸ்மஸ் வில்ஸன் என்பவர் கணக்கிட் டிருக்கிறார். இக் கீர்த்தி பெற்ற சர்ம சாஸ்திரி ஒரு சதுர அங்குலத்தில் 2800 குழாய்கள் இருப்பதாகவும் ஒவ்வொரு குழாயும் கால் அங்குலம் நீளம் இருப்பதாகவும் கண்டு அவருடைய ஆச்சரியமான கணக்கை வெளியிட் டிருக்கிறார். இக் கணக்குப்படி நமது சரீரத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் 700 அங்குல நீளம் குழாய்கள் இருக்கின்றன. சாதாரண அளவுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தில் சுமார் 2500 சதுர அங்குலங்கள் இருக்கின்றன. ஆதலால் 1,750,000 அங்குலம் நீளமுள்ள (2800 + 2500) 7,000,000 கழி குழாய்கள் இருக்கின்றன. 1,750,000 அங்குலம் அல்லது 145,883 அடி; அல்லது 48611 கெஜம்; அல்லது சிறிது குறைய இருபத்தெட்டு மைல் ஆகின்றது.

தோல் சரீரத்தின் மிக மிக முக்கிய உறுப்புகளில் ஒன்று. அது செய்கிற பல வகையான வேலைகள், ஆரோக்கியமும் ஆயுளுமாகிய இரண்டிற்கும் இன்றியமையாதவை. நாம் ஜீவித்திருத்தற்குத் தோலைப் போல இரைக்குடலும் சுவாசாசயமும் மூளையுங்கூட அவ்வளவு அவசியமானதல்ல. மனிதர் சாப்பாடில்லாமல் ஒரு வாரத்திற்கு மேல் உயிர் வாழக் கூடும். சுவாசாசயம் தனது வேலையைச் சிறிதும் செய்யாது நின்றுவிட்ட பின்னரும் பல நாள்

மனிதர் சாவாமல் இருக்கக் கூடும். ஆனால், தோலின் வேலைகளைக் கெடுத்துவிட்டால், ஒரு சில மணிகளுக்குள் மரணம் வந்துவிடும். பத்தாம் லியோ, ரோமாபுரியின் குருவான சமயத்தில் பிளாரன்ஸ் நகரின் தெருக்களில் ஒரு பெரிய ஊர்கோலம் நடந்தது. அப்பொழுது பொற் பருவம் என்பதைக் காட்டும் பொருட்டு ஒரு குழந்தையின் சரீரம் முழுவதையும் பொன் இலையால் போர்த்து வைத்திருந்தார்கள். அக்குழந்தை, பார்த்தவர்கள் திகில் அடையும்படி பலமான வரிப்புகளால் ஒரு சில மணிகளுக்குள் இறந்துவிட்டது. தோலின் துவாரங்களை அடைத்து வியர்வையின் வெளி யேற்றத்தை நிறுத்திவிட்டதாலேயே இக் குழந்தை மரணம் அடைந்ததென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஸ்நானத்தால் அல்லது சரீரப் பயிற்சியால் தோலைச் சுத்தமாக வைத்தலை நாம் அசட்டை செய்வோமாயின், முன் சொல்லிய இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழி குழாய்களையும் நாம் அடைத்துவிடுகிறோம். இச் செயலிற்குச் சிக்ஷையில்லாமல் போகாது. இச் செயலின் நேரான பலன்களாக ஆரோக்கிய மின்மையையும் மரணத்தையும் உண்டுபண்ணும் அபாயகரமான வியாதிகள் உண்டாகின்றன. தோலின் வெண்மையும், ஒளி யூடுருவலும், நிறமும் அழகிற்கு முக்கிய அம்சங்களாக எப்பொழுதும் கருதப்படுகின்றன. முகத்தின் உறுப்புக்கள் எவ்வளவு பூரணமாக அமைந்திருந்த போதிலும் தோல் நிறம் கெட்டதாகவாவது தேமல் கொண்டதாகவாவது இருக்கும் பக்ஷத்தில் சகல வசிகரமும் நீங்கி விடுகின்றது. தோல் சிலந்திகளாலும் பருக்களாலும் சுருங்கல்களாலும் மறுக்களாலும் பழுதாக்கப்பட்ட பொழுது அழகும் சற்றேறக்குறைய நீங்கி விடுகின்றது. தோலின் தன்மையும் நிலைமையும் நிறத்தை ஆள்கின்றது. தோற்றத்தின் அழகைப் பெரும்பாலும் நிறம் ஆள்கின்றது. அழகிய நிறத்தோடு கூடியுள்ள ஒரு அவலக்ஷணமான முகத்தை யாராவது எப்பொழுதாவது பார்த்திருப்பதுண்டா? தெளிவான நிறத்தையும் சிவந்த கன்னங்களையுமுடைய சாதாரண முகங்களும் உண்டு. ஆனாலும் அவை பார்ப்பதற்கு எப்பொழுதும் இன்பகரமாயிருக்கின்றன. முக்கிய உறுப்பாகிய தோலைப் பாதுகாக்கும் பொறுப்பு விலை மதிப்பற்ற புறத் தோலைக் கொண்டுள்ள ஒவ்வொருவரையும் சேர்ந்தது. அழகை அடைவதற்கு ஆசிக்கிறவர்கள் அதை இடைவிடாது கவனித்துக்கொண்டு வரவேண்டும்.

சில மனோசலனங்கள் குளிர் போலவே தோலைத் தளர்ச்சி யாக்கி அதன் தொழில்களையும் பாதிக்கின்றன. தளர்ச்சியை உண்டு பண்ணும் வியசனம், பயம் முதலிய மனோசலனங்கள் சுவாச ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் குறைக்கின்றன; தோலின் நிறத்தை மங்கச் செய்கின்றன; வியர்வையைத் தடுக் கின்றன; நரம்பின் தொழிலைக் கெடுக்கின்றன. கோபமும் மற்றைய கொடிய மனோ சலனங்களும் சுவாஸ ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் விரைவுபடுத்தித் தோலின் சூட்டை அதிக மாக்கிக் கோபக் குறிகளான முகச் சிவப்பையும் முகக் கனப்பையும் முக விறைப்பையும் உண்டு பண்ணுகின்றன. மனோ சலனங்கள் தோலிற் செய்யும் காரியம் சில வேளைகளில் வியாதி களைக்கூட உண்டுபண்ணத் தக்க அவ்வளவு பெரிதா யிருக்கின்றது. பலத்த மனோ சலனங்கள் முக்கியமாக வியசனமும் பயமும் தோலின் ஒழுங்கீனங்களையும் வியாதிகளையும் உண்டாக்குகின்றன. சில சமயங்களில் பயத்தாலும் வியசனத் தாலும் ஜன்னியும் சுரமும் உண்டாகின்றன. வில்க்கின்ஸன் தோலைப்பற்றிப் பின் வருகிறபடி சொல்லுகிறார்: அன்பானது தனது சிவப்பு நிறத்தை உண்டு பண்ணுகின்றது. அன்போடு பொருந்திய நாணம் பிரகாசத்தை நல்குகின்றது. தாழ்ந்த வெட்கம் மண்ணின் நிறத்தைக் கொடுக்கின்றது. வெறுப்புத் தனது மங்கல் நிறத்தை உண்டு பண்ணுகின்றது. பொறாமை தனது பச்சை நிறத்தை நல்குகின்றது. கோபம் கறுப்பு நிறத்தை உண்டு பண்ணுகின்றது. ஏக்கம் இறந்துபோனவர்களது வெளுத்த நிறத்தை அளிக்கின்றது. கபடம் மற்றைய நல்லனவற்றை யெல்லாம் கவர்ந்துகொண்டு தீயனவற்றை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுக்கின்றது. துக்கமும் துன்பமும் தோலை முரடாக்குகின்றன. விவேகமும் அறிவும் தமது அழியாத கிரணங்களால் தோலிற்குப் பரிசுத்தமான ஒளியை நல்குகின்றன. சுருக்கமாகச் சொல்லின், தோலின் எண்ணிறந்த தோற்றங்களில் ஒவ்வொன்றும் மனித சுபாவத்தைக் காட்டுங் கருவியே யாகும்.

நல்ல அழகிய நிறத்தை விரும்புகின்றவர் சூரியனுடைய மிக உஷ்ணமான கிரணங்கள் தம் மீது விழாதபடி தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். எரிகின்ற சூரியனது சக்தியால் தோல் உலர்ந்தும் முரடாகியும் போம்; சில சமயங்களில் தடித்தும்

வெடித்தும் போம். சீதம் முதலில் தோலில் செய்யும் காரியம் சுருங்கல்களை உண்டு பண்ணுதலே. தோல் சுருங்கியவுடன் இரத்தக் குழாய் நாடிகளுக்குள் எவ்வளவு இரத்தம் இயல்பிற் செல்லுமோ அவ்வளவிற்குக் குறைந்து செல்கின்றது; உஷ்ணத் திற்கும் உயிருக்கும் ஆதாரமான பெரிய மத்திய ஸ்தலங்களி லிருந்து தூரத்திலுள்ள பாகங்களுக்குச் செல்கின்ற இரத்தத்தின் அளவும் குறைகின்றது; அவற்றால் நம் மெல்லோருக்கும் அநுபவமாயுள்ள நரம்புத் திமிர் உண்டாகின்றது. ஆனாலும் இக் காரியங்கள் ஸ்திரமானவை யல்ல. சிறிது காலங் கழித்து இவற் றிற்கு எதிரான காரியங்கள் நிகழ்கின்றன. அப்பொழுது முன் தடைசெய்யப்பட்ட இரத்தம் அதிக விரைவாகத் திரும்பு கின்றது. அது தோலில் ஒரு பளபளப்பான சிவப்பு நிறத்தை உண்டு பண்ணுகின்றது. இந் நிறம் பனிக் காலத்தில் அதிக தூரம் நடந்தவர்களுடைய முகத்தில் தோன்றும் பளபளப்பான சிவப்பு நிறத்தை ஒத்திருக்கும். சீதம் வாயு மண்டலம் உலர்ந்திருக்கும் பொழுது ஆரோக்கியமுள்ள மனிதருக்கு, முக்கியமாக அதிக தேகாப்யாசம் செய்தவருக்கு, மிக லாபகரமானது. ஆனாலும் நனைந்தவாயு சரீரத்தில் வேறு விதமான வேலை செய்கின்றது. அது சரீரத்தில் படுங் காலையில் சரீரம் அதிக அளவு ஈரத்தைக் கவர்ந்து மிகவும் கனமாகின்றது. அதன் சக்தியால் தோலின் நிறம் மிகுதி யும் பாதிக்கப் படுகின்றது; உலர்ந்து தேய்ந்து ஜனங்களின் நிறத்தைப் போன்றதாகின்றது. நனைந்த சீதம் சகல சீதோஷ் ணங்களினும் மிக மிகக் கெட்டது. அது சகல சரீரப் பிரகிருதி களுக்கும் இளையோரானாலும் சரி, முதியோரானாலுஞ் சரி தீங்கை விளைக்கின்றது. மழை காலத்தில் ஒவ்வொரு தினமும் வாயு நனைவில்லா திருக்கும் போது திறந்த வெளியிடங்களில் சரீராப் பியாசங்கள் செய்யவேண்டும். சீதோஷ்ண மாற்றங்கள் தோலிற் செய்யும் காரியங்களில் ஒன்றினின்று மற்றொன்றிற்கு விரைந்து செல்லும் மாற்றமே—எப்பொழுதும் அபாயகரமானது. சீதத்தி லிருந்து உஷ்ணத்திற்கு மாறுதல், உஷ்ணத்தி லிருந்து சீதத் திற்கு மாறுதலைப் போல அவ்வளவு அபாயகரமானதன்று. உஷ்ணத்தி லிருந்து சீதத்திற்கு மாறுதல் வியர்வையை வெளி யேற்றும் தோலின் வேலையைத் தடைப்படுத்துகின்றது. அதனால் சில சமயங்களில் நாசி தொண்டை முதலியவற்றின் ஜவ்வுகளில்

எரிச்சல் உண்டாகின்றது. நாமாக உண்டு பண்ணிக்கொள்ளும் சிதோஷ்ண மாற்றங்களை, உதாரணமாக ஓர் உஷ்ணமான படுக்கை அறையி லிருந்து ஒரு குளிர்ந்த இராத்திரியில் வெளியே செல்லல் போன்றவைகளை, நாம் அதிக ஜாக்கிரதையோடு நீக்க வேண்டும். அவை உண்மையில் வாயு மண்டலத்தின் இயற்கை மாற்றங்களைப் பார்க்கிலும் அதிக அபாயகரமானவை. உஷ்ணத்தி லிருந்து சிதத்திற்கும், உலர்ந்த காற்றி லிருந்து நனைந்த காற்றிற்கும் மாறி மாறிச் செல்கின்ற ஒரு மனிதனுடைய சரீரத்தின் புறத்தோல் முரடாகும் அல்லது வெடித்துப் போகும்.

# 7. மனம் போல வாழ்வு

வாழ்க்கையின் வெற்றியைப்பற்றியும் அதை அடையும் வழிகளைப்பற்றியும் எடுத்துக் கூறும் பல தேசத்துச் சான்றோர்களும், அது எப்படி மக்களுடைய மன நிலையோடு பிரிக்க முடியாத ஒரு தொடர்பைப் பெற்றிருக்கிறதென்று வற்புறுத்துவதை நாம் படிக்கின்றோம். அதைக் கண்கூடாக வாழ்க்கையிலுங் காண்கின்றோம். நம் வாழ்க்கையில் நிகழும் செயல்களனைத்தும் மனதோடும் அதன் எண்ணங்களோடும் கருத்துக்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனமே உலகில் நிகழும் பல செயல்களுக்கும் காரணமாயிருக்கின்றது. ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவற்றைச் செய்யும் கடவுளே மனது என்று கூறினும் பொருந்தும்.

ஒரு மரத்தில் பழம் ஒன்று பழுப்பதற்கு அடிப்படையாயும் மூல காரணமாயுமிருப்பது அதன் பூவே என்பது வெளிப்படை. அப் பூ பிஞ்சாகிக் காய்த்து, முற்றிப் பிறகு பழமாகின்றது. அதே போன்று நம் வாழ்நாளில் நிகழும் ஒவ்வொரு செயலையும் ஒரு பழமென்று வைத்துக்கொண்டால், அதற்கு அடிப்படையாகவிருக்கும் பூ, நம் மனதின்கண் தோன்றும் எண்ணம் அல்லது கருத்தே யாகுமென்று கூறுவது மிகையாகாது. பூ, பிஞ்சாகிக் காய்த்துப் பழமாவது போல் எண்ணமும் படிப்படியாக முதிர்ந்து இறுதியிற் செயலாக மாறுகின்றது.

எக் காரியத்தை நாம் செய்யினும் அதை முக்கரணத் தூய்மையோடுஞ் செய்வதே மேன்மை. பூவைப் போன்று முதலில் மனதின்கண் தோன்றுகின்ற எண்ணம் மொழி மூலமாக, எல்லோரும் அறியும் வண்ணம், பூவில் மறைந்து கிடந்த பிஞ்சு வெளிப்படுவதைப் போன்று வெளிப்படுகின்றது. காற்று, வெயில், கால நிலை முதலியவற்றால் முதிர்கின்ற பிஞ்சைப்போன்றே, வெளிப்படுத்தப்பட்ட எண்ணமாகிய பிஞ்சும், பிறர் அதை விரும்புதல், வெறுத்தல், சரி அல்லது தவறு என்று தம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தல் முதலிய ஆராய்ச்சிகளாகிய காற்று, வெயிலாதிய கால நிலைகளால் முதிர்ச்சி யடைந்து, இறுதியில் அவற்றிற்கெல்லாந் தப்பினால் வாழ்க்கையிற் செய்து காட்டலாகிய பழமாகப்

பழுக்கின்றது. பெருங்காற்றுக் காற்ருது உதிர்ந்துபோம் பிஞ்சை ஒக்க நெறிமுறைக் கெதிரான எண்ணமா யிருப்பின், அதைச் செய்கையில் செய்வதிலும் பயனில்லை யென்பது தேற்றம்.

தற்கால உளநூல் வாணர் செய்யும் ஆராய்ச்சியின் பயனுக, எப்படி எண்ணம் உண்டாகிறதென்றும், அது எங்ஙனம் செயலாக மாறுகின்றதென்றும் படித்து மகிழ இடமிருக்கின்றது. நினைப்பதற்கு இடமாக விருக்கும் மனதிற்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கின்றது. 'ஏனைய ஐம்பொறிகளும் மனது, வெளியுலகிலுள்ள பொருள்களை அறிந்து கொள்வதற்கு உரிய வாயில்களாக இருக்கின்றன' என்று ஹார்ன் என்னும் உளநூற் பண்டிதர் கூறுகின்ருர். வாயில்களாக விருப்பதோடு, மனது செய்யுமாறு கூறுகின்ற செயல்களைச் செய்வதற்கும் அவை உதவுகின்றன. நாம் ஒரு மணி அடிக்கும் ஒலியைக் கேட்கின்ருேம். மணியின் ஒலி என்னும் எண்ணம் காதின் மூலமாக உண்டாகின்றது. கதவைத் திறக்கும்படி யாரோ ஒருவர் மணியை அடிக்கின்ருர் என்ற எண்ணம் உண்டாக, உடனே கதவைத் திறக்கவேண்டுமென்ற மறு எண்ணம் தோன்றி, உறுப்புக்களுக்கு அறிவிக்கப் படவே, கால் கைகள் அவ் வேலையைச் செய்கின்றன. இன்னது என்று அறியும் எண்ணமும், இன்னது செய்யவேண்டு மென்று கூறுகின்ற எண்ணமும் இரண்டு வெவ்வேறு வித நரம்புகளின் மூலம் முறையே முதலில் மூளைக்கும், பிறகு அவயவங்களுக்கும் அறிவிக்கப்படுகின்றன வென்பது உடல் நூல் படித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இம் மனத்தின் மூலமாகவே வாழ்க்கையின் செயல்களனைத்தும் நடப்பதால் அது எவ்வளவு இன்றியமையாத தென்பதையும் அதை நாம் எப்படிக் காப்பாற்றி நல்வழிப் படுத்த வேண்டுமென் பதையும் நாம் நன்ருய்க் கவனித்து நோக்க வேண்டும். மனமெனும் நினைப்பாலேயே நாம் மேல் நிலையையோ அல்லது கீழ்நிலையையோ அடைகின்ருேம். ஆவதும் அதனுல் அழிவது மதனுலேயே. மனிதனது 'அக நிலைமைகளி லிருந்தே அவனது புற நிலைமைகளெல்லாம் வருகின்றதினுல், புற நிலைமைகளைத் திருத்துவதற்கு அகநிலைமைகளைத் திருத்த வேண்டும்' என்று ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலப் பண்டிதரும் கூறியுள்ளார். மனம் போலேயே மக்களுக்கு வாழ்வு அமைகின்றது. மக்களே, அதாவது மனமே நினைப்பின்

தலைவனுகும். ஒழுக்கத்தைத் தோற்றுவிப்பதும், தனது நிலையையும் சுற்றுச் சார்பையும் விதியையும் உண்டாக்கிக்கொள்வதும் அதுவே. இதுபற்றியன்றோ 'மனிதனே தன் வாழ்க்கை வெற்றியை உண்டாக்கிக் கொள்ளும் சிற்பி' என்ற ஆங்கிலப் பழமொழியும் எழுந்தது. 'பெருமையுஞ் சிறுமையும் தான்றர வருமே' என்றதும் இக்காரணத்தை முன்னிட்டே.

'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்'

என்று நாலடியாரும்,

'எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்று திருக்குறளும் முழங்குகின்றன.

மேற்கூறியாங்கு மனமே யாவற்றிற்கும் அடிப்படையென்னு முண்மையைக் கண்டோமாதலின், நாம் மனதின் பயிற்சியைப் பற்றியும், வாழ்க்கை நிலைமையைப்பற்றியும் ஊக்கத்தோடிருப்பின் ஒழுக்கம் என்னும் குன்றேறி மேல் நிலையை யடைந்து பேரின்ப வீட்டின் வாயிற்படியில் கால் வைப்போம். பேரின்ப வீட்டுக் கதவு நமக்குத் திறக்கும். அவ்வுண்மையை ஒருவர் சரிவரக் கண்டறிவாராயின், அவர் தம் மனதை அதிக முயற்சியோடு பாதுகாத்து, சுத்தப்படுத்திக்கொண்டு அதன் மூலமாகத் தம் புறவொழுக்கத்தையும் தூய்மைப்படுத்திக் கொள்ள வழியுண்டு. தம் மனத்தை ஆள்வதற்கும் அதை அடிமைப்படுத்தித் தம் இலட்சியத்திற்குத் தக்கபடி திருத்திக் கொள்வதற்கும் வழி யுண்டு.

அவ்வாறின்றி அவ்விஷயத்தில் நாம் தூக்கத்தோடிருப்பின் அறியாமை யென்னும் இருளி லுழன்று, தண்ணீர் நிறைந்திருப்பதைப் போன்று மேலுக்குத் தோற்றும் சேற்றி லிறங்கிப் புதைபட்டவராவோம். அப்பொழுது ஒழுக்கத்தைச் சரியாகத் திருத்துவதாகிய மேலான கடமையைச் செய்யாது சோம்பித் திரிந்தவர்களாவோம். அறிவு மயங்கித் துன்பக் கடலில் மூழ்க நேரிடும். அப்படியுள்ள ஒருவன் தன்னைத் தானே

கட்டுப்படுத்திக் கொள்கின்றவ னாகின்றானே யொழிய பிறர் அவனைக் கட்டுப்படுத்தவில்லை யென்பதை எல்லோரும் உணர வேண்டும். முயன்றால் அவன் அக் கட்டினின்று விடுவித்துக் கொள்ள முடியுமென்பதை அறிய வேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்த எல்லோரும் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தித் தங்கள் பெயரைப் பொறித்து வைக்க வேண்டு மென்னும் அவாவினால் தூண்டப்படுவர் என்பது திண்ணம். பலமும் சுத்தமும் பொருந்திய நினைப்புகள் உடம்பிற்கு ஊக்கத்தையும், வன்மையையும், அழகையும் கொடுக்கும். இந் நல்லெண்ணங்கள் நற் பழக்கங்களாக மாறி நற் பயனை விளைவிக்கும். அங்ஙனே தூய்மை யற்ற கெட்ட எண்ணங்கள் அவற்றை யுடையோரது புறத்தையும் கெடுக்கு மென்பதில் ஐயமுண்டோ? கெட்ட எண்ணங்கள் தோன்றுங் காலமெல்லாம் இரத்தமுங் கொதிப்படைந்து அசுத்தமாவ தோடு, நற்செயல், வாழ்வு முதலிய தண்ணீர் ஊறும் ஊற்று வாயாகிய நினைப்பு, விஷங் கலந்ததைப்போ லாகின்றது. ஆகவே, ஒருவன் வாழ்க்கையிலும் மனத்திலும் தூய்மை யுடையவனா யிருக்க வேண்டின், அகம் புறமாகிய இரண்டு கருவிகளும் சுத்தத்தோடும் ஒற்றுமையோடும் உழைக்க வேண்டும். இயற்கையில் தோன்றும் கெட்ட மன நிலைகள் கெட்ட செயல்களைச் செய்யத் தூண்டுதலின் அவற்றை யொழித்து நல்ல மனநிலைகளிற் பழக வேண்டும். தன் உடை ஊண் முதலியனவும், தன்னைச் சுற்றி யிருக்கும் பொருள்களும், இருக்கு மிடத்தின் தன்மையும், நண்பரும் இன்னும் இவை போன்ற பல விஷயங்களும் ஒருவ னகத்தே எழும் நிலைகளுக்கு முற்றிலும் காரணமா யிராவிடினும், ஒரு சிறிதாயினும் அவற்றை மாற்றுவதற்கு இடமிருப்பதால் அவையெல்லாம் சரியா யிருக்குமாறு செய்வ தவசியம்.

காமம், தன்னலத்தையே பாராட்டல், அழுக்காறு, அவா, வெகுளி முதலியன கெட்ட மன நிலைகளில் முக்கியமானவை. அவை அசுத்த உடையினை அணிதல், உடம்பினையும் அசுத்தமாய் வைத்துக் கொள்ளுதல், பிறர் பொருளை விழைந்து அதை அடைய வேண்டிப் பாவ காரியங்களைச் செய்தல், பேருண்டி, பெருந் துயில் முதலிய பல கெட்ட செயல்களுக்கு ஒருவனை

யிழுத்துக்கொண்டு சென்று, வாழ்க்கையைக் கெடுக்கும். தன்னல மின்மை, அடக்கம், அன்பு, அருள், பொறுமை முதலியன நற் குணங்கள். இவை முற் கூறியபடி ஒழுக்கமென்னும் குன்றிலேற்றி மேல் நிலைக்குக் கொண்டுபோய் விடுவன. மனநிலையை உயர் வாழ்வோடு சம்பந்தப்படுத்தி மேன்மை யடையும் உண்மையை, என்றும் பொன்றாப் புகழ் படைத்துச் சென்ற **ரஸ்கின், டால்ஸ்டாய்** முதலியோருடைய வாழ்க்கைச் சரித்திரங்களி லிருந்தும், **மகாத்மா** என்று உலகு முழுவதும் கொண்டாடும் **காந்தி** யடிகளின் வாழ்க்கையி லிருந்தும் நேரில் கண்கூடாகவும் காணலாம். எனவே,

‘நல்ல செய்து நரரை யுயர்த்தவு
மல்ல தெய்தங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்லதிந்த மன’

மென்பதுவும்,

‘அறவி னைக்கு மரும்பொரு ளின்பொடு
வெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
துறவி னுக்குந் துணை மனம்’

என்பதும், அதனால் அதை நல் வழிப்படுத்த வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. மன நிலையைச் செம்மையுறச் செய்தபின்றான் வாழ்க்கை.

---

## 8. போப் ஐயர்

இவர் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார். இவர் தமிழ் நன்கு கற்றுச் சில தமிழ் நூல்களை ஆங்கில மொழிபெயர்ப்புடன் அச்சிட்டுத் தமிழ் மொழியின் பெருமையைத் தமிழ் நாடேயன்றி உலகமெங்கும் அறியச் செய்தவர். இவர் இருபது ஆண்களுக்கு முன்னர் இறந்துபோகும் வரை தமிழ்ப் பாதிரியாராகவும், தமிழாசிரியராகவும் இருந்து ஏறக்குறையத் தொண்ணூறும் வயதில் இறக்கும் பொழுது தம்முடலை யடக்கஞ் செய்யப்படும் இடத்தில் 'தமிழ் மாணவன்' என்று கல்லில் வெட்டி அதனைப் பதிக்க வேண்டுமென்று கூறி உயிர் துறந்தனர். இவ்வாறு தமிழுக்காக உழைக்கும் பாதிரிமார்கள் இக் காலத்திற் கிடையாவென்றே சொல்லலாம்.

இவர் பாலனாக இருந்தபொழுதே இவருக்குத் தமிழ் கற்க வேண்டுமென்றும், தமிழ் கற்றுத் தமிழ்ப் பாதிரியாக வேண்டுமென்றும் ஆசையுண்டா யிருந்தது என்று கூறப்படுகின்றது. சிறு வயதில் ஓல்ஹோம் தெருவி லிருந்த வேஸ்லியன் ஆலயத்தில் நிகழ்ந்த பாதிரியார் கூட்டத்திற்கு இவர் சென்றிருந்த பொழுது பாதிரியாரொருவர் 'நான் சென்னைக்குப் போகிறேன். நான் தமிழ் கற்றுத் தமிழர்களுக்கு உபதேசிப்பேன்' என்று சொன்ன சமயம் தமக்கும் வயது வருங்காலத்தில் தாமும் அங்ஙனமே தமிழ் நாட்டிற்குப் போய்த் தமிழ் கற்றுத் தமிழ் மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமென் றெண்ணம் உண்டாயிற்றென்று இவர் ஒரு பெரிய சபைமுன் கூறினர். சில ஆண்டுகள் கழிந்த பின் இவர் சென்னைக்குப் புறப்பட்டார். இவரேறிய கப்பலில் இவரைப் பண்டிதரென்று மற்றவர்கள் அழைத்தனராம். ஏனெனில் இவருக்குத் தமிழ்க் கல்விமீது அத்துணை ஆர்வ மிருந்தது. சென்னைக்கு வந்த பொழுது இவரை எதிர்கொண்டு அழைக்க வந்தவர்களில் கட்டைமரம் தள்ளிக்கொண்டு வந்த செம்படவனும் ஒருவனும். அவனைக் கப்பலுக்கும் கரைக்கும் எவ்வளவு தூரமென்று இவர் கேட்டதாகவும், அவன் தூய தமிழில் சரமாரி பொழிந்ததாகவும் அதைக் கேட்டுத் தமக்கு ஒன்றும் விளங்கவில்லையே யென்று நினைத்து, செந்தமிழ் நன்கு கற்றுக்கொள்ள

முயன்றனராம். ஒரு மொழியைத் தேடி அதுவும் நலல மொழியாக விருப்பதை நாடி அதை இடைவிடாமற் கற்றுத் தேர்ச்சியடைதலே வாலிப னொருவன் கொள்ளத் தக்க பேரெண்ண மென்றனர். மனம் நிறைந்த இவ்வொரு எண்ணத்துடனேயே இவர் சென்னை மாகாணத்தில் தமிழ் மணங் கமழும் தாமிரவருணி பாயும் தமிழகப் பகுதியில் கிறிஸ்தவ ஊராகிய சாயர்புரத்தில் சிறிது காலம் இருந்து கல்வி பயின்று வந்தனர். திருநெல்வேலியில் தமிழ்ப் புலமை வாய்ந்த சில பெரியாரிடம் தமிழ் கற்று நாலடி, குறள், திருவாசகம் ஆதிய நூல்களைப் படித்து ஆசான் கூறியதை அமைவுறக் கேட்டும் கேட்ட வனைத்தையும் நோட்டுப் புத்தகங்களில் எழுதி வைத்தும் வந்தனர். இவை யனைத்தும் பிற்காலத்தில் இந் நூல்களை இவர் அச்சிட்டபொழுது பெருந் துணையா யிருந்தன என்பது திண்ணம்.

முதலில் சாயர்புரத்தைக் கூறினோம். இதனைக் கிறிஸ்தவக் கல்விக்கும் உபதேசத்திற்கும் தலைசிறந்த இடமாகச் செய்தவர் போப் ஐயரே யாவர். இன்றும் அது சிறோங்கி யுள்ளது. அதனை முற்றிலும் கிறிஸ்தவ நகரமென்றே கூறலாம். எஸ். பி. ஜி. வகையாருக்குத் தலையான ஊர் அதுவே. 1839-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்த போப் பாதிரியார் பத்தாண்டு வரை வேலை செய்த பின் இங்கிலாந்திற்குச் சென்று இரண்டாண்டு இளைப்பாறினர். இவர் 1851-ஆம் ஆண்டு திரும்பித் தஞ்சைமாநகரத்திற்கு வந்தனர்; திருநெல்வேலியில் தமிழ் மக்களுடன் கலந்து தமிழையும் தமிழர் நாகரிகத்தையும் பெற்றுச் சீர்மைக்குச் சென்று திரும்பி வந்தபொழுது தஞ்சையில் வேலை பார்க்குமாறு ஏவப் பெற்றனர்; அவ்வமயம் அங்குள்ள தமிழ் மக்களின் நடையுடை பாவனைகளைக் கூர்ந்து கவனித்தனர். 'தஞ்சைக் கல்லூரி' என்ற கல்விச் சாலையை ஏற்படுத்தி அப் பகுதியில் ஆங்கிலக் கல்வியையுங் கிறிஸ்தவ சமயக் கல்வியையும் ஐயர் பரப்பினர். அது செயின்ற பீற்றர் காலேஜ் என்ற பெயரால் நாற்பதாண்டுகள் வரை புகழ்பெற்று வந்தது. இவருடைய மாணவர்களும் அவர்கள் பிள்ளைகளும் ஆயிரக் கணக்காகப் பெருகினர். அதன்பின் உதகமண்டத்திலும் பங்களூரிலும் கிறிஸ்தவக் கொள்கைகளையும் மார்க்கத்தையும் பரப்புவதில் 1880-ஆம் ஆண்டு வரை உழைத்துவிட்டு அப்பொழுது இந்தியாவை விட்டு அகன்று

தம்முடைய சுய தேசத்திற்குப் போயினர். போய், அவ்விடத்திலும் இவர் வாளா விருக்கவில்லை. இவரது அபார உழைப்பால் டி. டி. என்ற 'சமய வாணர்' பட்டத்தையும் கான்றர்பெரியின் தலைக் கண்காணியாரிடம் பெற்றனர். இவர் எருதுத்துறை என்ற ஆக்ஸ்போர்டு நகரில் வசித்து வந்தனர். அங்குள்ள சர்வ கலாசாலையார் இவருக்கு எம். ஏ. பட்டம் அளித்தனர். 'பாலியல் காலேஜ்' என்ற கல்லூரியில் சமய போதகரா யிருந்து இவர் இருபது வருஷம் வாத்திமை வேலை பார்த்து வந்தனர்; ஐ. சி. எஸ். பரீட்சையில் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்கட்குத் தமிழும் தெலுங்கும் கற்பித்துக் கீர்த்தி பெற்றனர்; தம்முடைய மாணவர்களுக்காகத் தமிழில் பாடப் புத்தகங்கள் சில எழுதி வெளியிட்டனர்.

சிறுவரும் சிறுமிகளும் இன்றும் கையில் வைத்து வழங்கும் நூல், போப்பையர் முதலிலக்கண மெனப்படும். இவ் விலக்கணம் பயின்று மேற்சென்ற மாணவர்கட்காகப் பவணந்தி முனிவர் செய்த நன்னூலாகிய பெரிய நூலை 1850-இல் சூத்திரங்கட்கு ஆங்கிலத் தலைப்புடன் பதிப்பித்தனர். இப் பதிப்பின் முதற் பகுதியில் இலக்கண வினாவிடையும், இறுதியில் இலக்கண அகராதியும் காணப்படும். இவ் விரு பகுதியிலும் இவருடைய நுண்ணறிவும் கல்வித் திறமையும் பொறையுஞ் சால விளங்கும். இப் பதிப்புச் சென்னைக் கவர்னர் லார்டு ஹாரிஸ் என்பவருக்கு உரிமையாக்கப் பெற்றது.

திருக்குறள் பல ஐரோப்பியர்களால் தங்கள் தங்கள் மொழிகளில் உரையுடன் ஆக்கப் பெற்றிருப்பது எவருக்கும் தெரிந்த காரியமே. பெஸ்கி என்ற வீரமா முனிவர், ட்ரூ, பேர்சிவல், ஏதில் ஆகியவர்கள் லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன், இங்கிலீஷ் முதலான பாஷைகளில் திருக்குறளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அத்தகைய பெரியார் பலரி னுதவி பெற்றும், பரிமேலழகர் உரையைப் பின்பற்றியும் போப்பையர் தமிழ் வேதம் எனப்படும் அரிய பெரிய வொழுக்க நூலை ஆங்கிலத்தில் ஈரடிப் பாவாக இயற்றினர். அதில் முகவுரையும், நுணுக்கவுரையும் அகராதியும் உள. முகவுரையில் நூலினருமையைக் கூறுமிடத்துச் சேன்தோம் சேன்தாமசை இவர் மறக்கவில்லை. சிற்சில இடங்களில் வழுவினும் போப்பையர் மொழிபெயர்ப்பு மிகவும் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. அகராதி மிகவும் உபயோக

முள்ளது. எச் சொல் எப் பொருளில் எங்கு வழங்கப்பட்டிருப்பது என்பதை ஐய மற அது எடுத்துக் காட்டும். நூலின் பொரு ளடக்கமும் குறிக்கோள்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இந் நூலிற் கிணையான வொழுக்க நூல் எம் மொழியிலும் கிடையாதென்ற ஒரு பெருமையால் எவரும் இதனைத் தம் மொழிக்கு அணியாக அமைத்துள்ளார்.

நாலடியார் மொழி பெயர்ப்பு முதலில் தோன்றிற்று. செய்யுட்களின் பொருள்கள் உள்ளவாறே ஆங்கிலத்தி லமைத்திருப்பதை வியவாதார் எவருமிலர். வட நாட்டி லிருந்து பல சமணர்கள் பாண்டிய நாட்டில் பன்னீராண்டு பஞ்சத்தின் நிமித்தம் படிந்திருந்து பின்னர் வடதிசை நோக்கிச் செல்லுங்கால் கருணை பொருந்திய அரசனிடம் நேரில் விடைபெற மனந் துணியாது ஒவ்வொருவரும் தத்தம் படுக்கையி னடியில் ஒவ்வொரு வெண்பாவை வைத்துப் போனதில் சிறந்தன நானூறு செய்யுளே. வழக்கம் போல இந்நூலிற்கும் முகவுரை, குறிப்புரை, அடியுரை, அகராதி அமைக்கப்பட்டுள்ளன. குறள், நாலடி இவ்விரண்டு நூல்களையும் போப்பையர் செய்த மொழிபெயர்ப்புடன் ஆங்கிலேயர் படிப்பரேல் தமிழின் தொன்மையும் சிறப்பும் நாகரிகமும் நன்குக விளங்கும். 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்ற முதுமொழி இவ்விரண்டு நூல்களையே குறித்த தாகும். இவைகள் சிற்றுயிர்க் குற்ற துணையாம். எத் தருணத்திலும் எக் குழாத்திலும் எப் பொருளாராய்ச்சியிலும் இந் நூல்களிலுள்ள ஒளி பொருந்திய மணிகள் போன்ற அடிகளும் தொடர்களும் உண்மையை விளக்கி வலியுறுத்த உதவுமென்பது வெளிப்படை.

'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்'

'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'

'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமை யான்'

இக் குறள்கள் தீமை விதைப்பின் தீமை விளையும் என்பதையும், தீயாரைத் தண்டிக்கும் விதம் அவருக்கு மிகுந்த நலஞ் செய்தலே என்பதையும், உப்பிட்டவரை உள்ளளவும் நினைத்தல் தகுதி, தீமையை மனதில் வைக்கலாகாது என்பனபற்றியும், கண்ணோட்டம், நன்றி யறிதல், பரோபகாரம் இவற்றின் சிறப்பையும், பிறப்பாற் சிறப்பில்லை, தொழிலாற் சிறப்பு வரும் என்பதையும் வற்புறுத்தும் ஆற்றலைக் கவனிக்க.

'கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணி பல'

'ஒருவர் பொறை யிருவர் நட்பு'

'கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை'

'வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு'

'ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலுமாங்கே கடுந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பம் கெடிற்றுன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்'

இந் நாலடிச் செய்யுளடிகளில் பெரிய வுண்மைகள் பொதியப்பட்டிருத்தல் காணலாம். மானிடப் பிறப்பின் இடும்பையும், பதிலுக்குப் பதில் செய்யாத் தகைமையும், பொறுமையும், பொருளால் வருந் துன்பமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இத் தகைய உயிர்க்குறுதியான நன்மொழிகள் பலவுள.

இனிச் சைவ சமய நூலாகிய திருவாசகத்தையும் போப்பையர் மொழிபெயர்த்து மூலத்துடன் பதிப்பித்துள்ளார். முன் கூறியவை ஒழுக்க நூல்கள். இந் நூல் சைவ சித்தாந்தத்தை விளக்குவது. செய்யுளின் பொருளும் சுவையும் அறிதல் தமிழராகப் பிறவாதாருக்கு மிக அரிதென்பர். நம் போப்பையருக்கோ அப்படி யன்று. தமிழ்வாணரிடம் தாம் பெற்ற உரைகளைப் பல்லாண்டுகளாகச் சேமித்து வைத்திருந்து சீமைக்குச் சென்ற பின் அவற்றைப் பன்முறை வேறு துணையின்றி ஆராய்ந்து

பார்த்து உண்மைகள் வழுவாமல் மொழிபெயர்த் திருப்பது அருமையே.

இந் நூலை மொழிபெயர்க்கத் தொடங்குமுன் போப்பையர் தம் முதுமையை நினைந்து முடிக்கும்வரை உயிரோடிருக்க வேண்டுமே என்று சந்தேகித்து ஒரு நாள் மாலையில் பாலியல் கல்லூரியின் சதுக்கத்தில் பேராசிரியர் ஜோவெற்றுடன் அதைப் பற்றி உரையாடினரென்றும், அதற்கு அப் பெருமான் அதனை நீர் தொடங்க வேண்டுமென்றுரென்றும், அவர் ஆசி மொழியால் தாம் உயிருடன் இருந்து இந் நூல் மொழிபெயர்ப்பை முடிக்கக் கிடைத்ததென்றும் ஒரு சமபத்தில் ஐயர் கூறினர். ஜோவெற்று என்னும் பெருமான் ஐயரிட முரைத்த ஊக்க மொழி இதுவாகும். 'பெரிய வேலையைக் கைக்கொள்ளல் நெடுநாள் வாழ்தலாகும். இதனை, முடிக்கும்வரை நீர் உயிருடனிருப்பீர்.' இம் மொழி பகர்ந்தவர் இந் நூல் முடியுமுன் காலஞ் சென்றனர். ஆசிர்வதிக்கப் பெற்றவர் ஆசிர்வதிக்கப்பட்டபடி எடுத்த வேலையை முடித்தனர். 'இது 1900 ஆம் ஏப்ரல் 24-ல் என்னுடைய எண்பதாவது வயதில் வெளியிடப்பட்டது. முதலில் தமிழ்ப் பாடம் படித்தது 1837-இல். ஆகவே தமிழ்க் கல்வி பயில நீண்ட காலம் பல ஆண்டுகளை யான் செலவு செய்திருக்கிறேன். இத்துடன் என் நூல் பற்றிய வேலை முடிவாகின்றது' என்று போப் ஐயர் எழுதுகிறார்.

இந் நூல்களேயன்றி பல மாதப் பத்திரிகைகளுக்கும் போப்பையர் பல தமிழ் நூல்களைப்பற்றி வரைந்திருக்கின்றார். புறநானூற்றி லிருந்து சில பாட்டுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பத்திரிகைகளுக்கு உதவியுள்ளார். இவை அடிக்கடி சித்தாந்த தீபிகையில் வந்துள்ளன. இதே தீபிகையில் நம் ஐயர் ஆங்கிலத்தில் மணிமேகலையின் கதையைப் பல அதிகாரங்களாக வகுத்து வரைந்து அருளி யிருக்கின்றனர். தவிரவும் சேக்கிழார் ஞானசம்பந்தர் ஆகிய சமயப் பெரியார் வரலாற்றையும் அவர் தம் நாட்டு மொழியில் கொடுத்துள்ளார். இவையன்றித் தமிழ் நாடுகளில் சிறப்புற்ற பெரிய புலவர்களைப்பற்றியும் அவர்களாலாக்கப் பெற்ற நூல்களைப்பற்றியும் பத்திரிகைகளுக்கு விஷய தானஞ் செய்திருக்கின்றனர். மேலும், புறப்பொருள் வெண்பா மாலையின் பன்னிரு படலத்திலுள்ள சாரத்தை விடாமல் ஆங்கிலத்தில் தந்துளார். இதுவும் புறப்பாட்டு மொழிபெயர்ப்புகளும்

'தமிழியன் ஆன்றிக்குவரி' என்ற வெளியீட்டின் ஆறுவது மலரில் ஒன்று சேர்த்துத் தரப்பட்டுள்ளன. தவிரவும், பழமொழி நானூறு என்ற அருமையான நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த் திருப்பதாகத் திருவாளர் நல்லசாமிப் பிள்ளை யவர்களுக்குப் போப்பையர் எழுதி யிருந்தார். இது அச்சில் வெளிவந்த விவரம் தெரியவில்லை.

போப்பையர் சென்னை மாகாணத்தில் தமிழ் கற்கத் தலைப் பட்டபொழுது தமிழ்ப் பண்டிதரொருவர் 'நீர் தமிழைக் கற்றால் உமக்குத் தரித்திரம் வரும். அது உம்மை விடாது' என்றனராம். ஏனெனில் புலமை வாய்ந்தவர் உலக வாழ்க்கையைக் கவனியாமல் உயர் ஞானத்தையே கருதிக்கொண் டிருப்பது மல்லாமல் தாமின் புறுவதை உலக மறிந்து இன்புற வேண்டுமென்ற எண்ணங் கொண்டிருப்பர். புகழே பெரிதென்று பாடுபடுவ ராதலின் கேடும் சாக்காடும் பெரிதென மதியார். அதுபோன்றே பெரும் பொருள் திரட்டுந் திறமுடைய போப்பையரும் தாம் வறுமை எய்தாவிடினும் பெரும் பொருள் திரட்டிச் சந்ததியாருக்கு வைக்கவில்லை. இவருடைய மக்களில் ஒருவர் ஜான் வி போப் என்பவர் இந்தியாவில் முதலில் கொச்சி சமஸ்தானத்திலும், பின் இரத்தின பூமியாகிய பர்மா தேசத்திலும் கல்வி இலாகாவில் சிறந்த பதவி பெற்றிருந்தனர். இவர் தம்முடைய தந்தை யின் வரலாற்றைத் தம்முடைய தந்தையின் விருப்பப்படி தாமே எழுதப் போகிறதாக வாக்களித்தனர். அவர்தம் வாக்கை நிறைவேற்றிய விவரம் அருந்திலம். கைம்மாறு ஒன்றையும் கருதாமல் தமிழ் மாணவனாக ஐம்பது தறுபதாண்டுகளாக உழைத்த உழைப்பு தமிழுலகத்திற்கு மிகுந்த பயனை அளித்தும் தமிழ் மக்கள் இவர் மீது தம் நன்றியைக் காட்டத் தக்க ஒன்றையுஞ் செய்திலரென்பது தான் இங்கே கவலைப்படத் தக்கது. ஆயினும் ஆங்கில மக்கள் பல முறை இவர் மாண்பைப்பற்றிப் பேசி இவருக்குப் பதக்கப் பரி சளித்துள்ளனர். இராயல் ஏசியாடிக் சொசைட்டியார் 1906-ஆம் இ ஏப்ரல் மாதத்தில் இப் பெரியார் தமிழ் மாணவராக வெகுகால மாக உழைத்ததை மதித்துப் பெருங் கூட்டங் கூடி மூன்றாண்டு தோறும் அளிக்கப்படும் தங்கப் பதக்கத்தைப் போப்பையருக்கு அளித்தனர். அத் தருணம் தலைமை வகித்தவர் லார்டு ரீ என்பவ ராவர். பேசினவர்களில் இந்திய தேச அமைச்சர் லார்டு மார்லியும்

லண்டன் நகரிலுள்ள பல்கலைக் கழகத்தின் தெலுங்கு, தமிழ் மொழி களின் போதகருமான ஆர். டப்ளியூ. பிரேசருமே முக்கியமான வர்கள். போப்பையரைப்பற்றி முன்னவர் கூறியதாவது: 'போப் பையர் சுறுசுறுப்பும் கூரிய அறிவும் விடாமுயற்சியும் பொறுமையு முள்ள பெரியார். இவர் தம்மாயுள் முழுதும் எம்மக்களிடையில் தாம் வேலை செய்யுமாறு விதிக்கப்பட்டாரோ அன்னார் மத்தியி லிருந்தே அவர்களுடைய அன்பைப் பெற்று அவர்களுக்கு உப தேசித்தும் அவர்கள் மொழியின் சீர் சிறப்பை உலகம் அறியுமாறு செய்தும் பரோபகாரமாக உழைத்துவந்தனர்' என்று இவ்வாறு பேசிய பின்பு தம் கையால் தங்கப் பதக்கத்தைப் போப் ஐயரிடம் கொடுத்தனர். இதைப் பலரும் பார்த்து மகிழ்ந்தனர். ஆனால் தமிழ் மக்கள் நன்றி பாராட்டாததை முன்னெடுத்துக் கூறினோம். தமிழகத்திலுள்ள சென்னைப் பல்கலைக் கழகமும் இத் தமிழ்ப் பெரியாரைப் போற்றவில்லை.

1820-ஆம் ஆண்டில் நோவா ஸ்கோஷியாவில் பிறந்து ஹாக்ஸ்டன் காலேஜில் கல்வி கற்று வெஸ்லியன் கோயிலைச் சார்ந்த போதகராகப் போவதற்கென்று சமயஞானம் பயிற்றப் பெற்று, அறுபது ஆண்டுகளாகத் தமிழ் நூல்களையே பெரும் பாலும் படித்துப் புகழ் பெற்ற போப்பையர் தமக்குக் கிடைத்த அவகாசங்களில் ஒரு தமிழகராதியைத் தயாரித்தனர். அதில் அதுவரை வெளியிடப்பட் டிருந்த நிகண்டுகளில் சதுர அகராதி களிற் காணப்பட்ட சொற்களுடன் பின்னால் வெளியான சங்க நூல்களில் வழங்கி வந்த அரிய சொற்கள் அநேகத்தைச் சேர்த்து ஆங்கில மொழி பெயர்ப்புடன் எழுதி வைத்தனர். அதை வெளியிடுவதற்காக லார்டு மார்லி என்ற இந்திய மந்திரிக்கு எழுத்தனுப்பினர். அதில் அப் புத்தகம் சீமையில் அச்சிடப்பட வேண்டுமென்றும், அச்சிடுவதற்குக் கிளாரண்டன் பிரஸ் முன் வருமென்றும், அதற்குத் தக்க பண வுதவி இந்திய கவர்ன்மெண் டார் செய்ய வேண்டுமென்றும் கண்டிருந்தது. அதைப் பார்த்த மார்லி பிரபு, போப்பையருக்கு வயது ஏறக்குறைய தொண்ணூறு ஆனமையால் அவர் அவ் வேலை முடியும் வரை உயிரோடிருப்பதைச் சந்தேகித்து அது சென்னைச் சர்வ கலாசாலை மூலமாக இந்தியத் தமிழ் மக்கள் உதவி பெற்றுச் சென்னையில் வெளி யிடப்படின் அவ்வகராதி அதிகமாகச் சிறப்புறு மென்று நினைத்து,

இந்திய சர்க்காருக்கு எழுதினர். அச் சர்க்கார் அதற்கிணங்கிப் பெருந் தொகை அளிப்பதாக வாக்களித்து வின்ஸ்லோ அகராதியை ஆக்கி வெளியிட்டவர் அமெரிக்கப் பாதிரிமாராதலின் மதுரையி லிருந்த அமெரிக்கப் பாதிரியாராகிய ஷாண்ட்லர் என்பவர் தலைமை வகிக்கவும் பல தமிழ் மக்கள் உதவி செய்யவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதுவரை ஏழெட்டு இலஷ ரூபா செலவாகி விட்டது. சிறிது சிறிதாக பாகம் பாகமாக அகராதியும் வெளிவந்துகொண் டிருக்கின்றது. முதலிரண்டு பாகங்கள் வெளியானவுடன் பல குறைகள் குறித்துக் காட்டப் பட்டன. அவை பின் பாகங்களிற் காணப்படமாட்டா வென்று நினைப்பதற் கிடமுளது. முற்றிலும் வெளிவர இன்னும் எத்தனை ஆண்டுகளாகு மென்றும், வெளிவரும் அகராதியால் தமிழ்ச் சிறப்பெய்துமா வென்றும் பலர் நினைக்கின்றனர். இவ் வகராதியைத் தனவந்தர்களும் நூல் நிலயங்களும் கல்லூரிகளும் வழக்கு மன்றங்களுமே வாங்க முடியுமென்று தமிழுலகம் மதிக்கின்றது.

வாக்கர் பாதிரி தமிழ் கற்றவர்; தமிழில் நன்றாகப் பேசினவர். பாப்லி பாதிரியார் குறளாதிய அற நூல்களை நன்கு பயின்று உண்மை யுணர்ந்து சொற் பெருக்குகள் செய்து வருகின்றனர். ஆயினும் போப்பையர் மாதிரி தமிழ் மொழி சிறக்கப் பாடுபடும் பாதிரியார் இக்காலத்தில் இல்லை யெனலாம். உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணம் செய்த போப் ஐயரைப் போன்று பல பாதிரிமார்கள் உழைக்க முன் வருவராயின் தமிழின் தொன்மையும் முதன்மையும் தமிழரின் புலமையும் நாகரிகமும், தமிழ் நூல்களின் பெருந் தொகையும் அருமையும் வெளிப்படுவதுடன் மேனாடு முழுதும் சிறந்தோங்கும் என்பது உறுதி.

# 9. மாணவர் கடமை

மாணவர் கடமை என்ற தலைப்பின்கீழ், யான் கட்டுரை எழுதத் துணிந்ததற்குச் சில காரணங்களுண்டு. தற்பொழுது மாணவராயிருப்பவரே பிற்காலத்தில் தேசாபிமானத்தோடு தாய் நாட்டின் அபிவிருத்திக்காக உழைக்கும் கௌரவம் வாய்ந்த குடிகளாய் மாறப் போகின்றவராதலால் அவர்களுக்கான கடமைகளை அறிவுறுத்த விரும்பியது ஒன்று. 'ஏதேனும் உலகத்திற்கு உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்குளதாயின் பொது ஜனங்களிடையே போய்த் துன்பப்படாதே! பள்ளி மாணவர்களிடையே தொண்டு செய்! உன் எண்ணம் நிச்சயமாக நிறைவேற்றப்படும்' என்று ஜெர்மானிய அறிஞர் ஒருவர் கூறியவாறு, மாணவர்களிடம் இன்றியமையாத சில பொருள்களை வலியுறுத்தி எனது கடனை முடிக்கக் கருதியது மற்றொன்று.

அடைதற்கரிய மானிடப் பிறவியின் பருவங்கள் சிலவற்றுள் இளமை சிறந்ததென்பது உலகறிந்தது. இளமைப் பருவந்தான் வாழ்வின் உயிர் நாடியாயுள்ளது. வாலிப வயதுதான் வருங்கால வாழ்க்கைக்கு அடியாயிருப்பது. வாழ்க்கை என்னும் மாடியை அடைய இளமைப் பருவமே முதற்படியாயிருக்கிறது. இளமையே சக்தி, வலிமை, வீரம் இவற்றிற்கு இருப்பிடமானது. முடிவாய்க் கூறவேண்டுமாயின், ஒருவனது உயர்வும் தாழ்வும் அவனுடைய வாலிப ஒழுக்கத்தில் வயப்பட்டிருக்கிறதென்னலாம்.

இத்தகைய இளமைப் பருவம் பெரிதும் பாடசாலையிலேயே கழிக்கப்படுகின்றது. அங்கு எது விதைக்கப்படுகிறதோ அதுவே நாளடைவில் செழித்து வளருகின்றது. பள்ளிப் பருவத்தில், இளம் வயதில் எத்தகைய அபிப்பிராயங்களும், நோக்கங்களும் வேரூன்றுகின்றனவோ, அவற்றிற்குத் தக்கவாறே பிற்கால நடவடிக்கைகளுமிருக்குமென்பதற் கையமில்லை. அவற்றிற்குத் தக்கவாறுதான் தாய் நாடு நன்மையையோ, தீமையையோ அடையும் என்பதும் உண்மை. போருக்குப் புறப்படும் வீரனொருவன் எவ்வாறு முன்னரே தனக்குத் தகுதியான படைகளைத் தயார்செய்துகொள்ள வேண்டுமோ, அங்ஙனமே பிற்கால வாழ்க்கையில் ஈடுபடப் போகும் இளைஞன், மாணவன் நல்லொழுக்கத்தில் நடக்க

வேண்டுவது அவசியமேயாகும். கல்வி கற்பது கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்கென் றெண்ணலாகாது. பெரும்பான்மையும் ஒழுக்கத்திற்கே என்று உன்ன வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஆதலின், இளமையிற் பற்றிய ஒழுக்கம் பல்லாண்டிற்குப் பின்னரும் நிகழும்.

எனவே, மாணவர் நல்லொழுக்கத்தில் பயிலுவதே முதற் கடமையாகும்; எழுதப் படிக்கக் கற்பதை இரண்டாவ தென்னலாம். மொழி அறிவாகிய வெறுங் கல்வி ஒரு பயனையும் தாராது. கல்வியின் மூலமாக நல்லொழுக்க நன்னெறிகளை அறிந்து அவ்வழி நின்றொழுகலே இன்றியமையாதது. இதனை, 'ஓதலின் சிறந்தன்று ஒழுக்க முடைமை' என்ற முதுமொழி வலியுறுத்துகின்றது. இன்னும் ஒழுக்கத்தின் உயர்வைக் கூறவந்த திருவள்ளுவனார் 'ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார். மேலும், உலகத்தை நோக்குமிடத்து ஒருவனிடத்து வெளிப்படையாகக் காணப்படும் ஒழுக்கத்தாலேயே அவன் மதிப்போ, அவமதிப்போ அடைகிறான். மகாத்மா காந்தியடிகள் உலகும் போற்றும் உத்தமராய் விளங்குவதற்கு அவர்கள் கொண்ட சிறந்த ஒழுக்கங்களன்றோ முக்கிய காரணமாய்த் துலங்குகின்றன? பண்டு நம் மிந்திய நாடு பல் வகையாலும் சிறப்புற்றிருந்ததென்றால் அதற்குக் காரணம் அக் காலத்தில் வதிந்த இளைஞரின் ஒழுக்கம், அறிவு இவைகளே யென்றுரைப்பது மிகையாகாது.

இத்தகைய அத்தியாவசியமான ஒழுக்கம் நம் நாட்டுத் தற்கால மாணவரிடம் திருப்தியாக இருக்கவில்லை யென்பதை யான் வருத்தத்தோடு உணர்த்திக் கொள்கின்றேன். ஆன்மார்த்த அழுக்கு மாணவரிடையே இதுகாலை அதிகமாகப் பரவியுள்ளது. இது தொத்து நோய் போல் பரவி எல்லை இல்லாத தீங்குகளை இயற்றிவிடுமே என்றுதான் இரங்கவேண்டி இருக்கின்றது. மாணவர் தங்களுக்குள் பரவி வரும் தீய பழக்க வழக்கங்களை இனியேனும் அறவே அகற்றவேண்டும்; தங்கள் வாய்களைப் புகைப் போக்கிகளாக மாற்றுவதை நிறுத்த வேண்டும். பீடி, சிகரெட் பிடிப்பதால் உடலுக்கு ஊறு உண்டாவதை எண்ணி, அடியோடு அவற்றைத் தொலைக்க வேண்டும்; உள்ளத்தையும், உடலையும் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

மாணவர்கள் தங்கள் ஒழுக்கத்தைப்பற்றித் தாங்களே கவலையுற்று ஒழுகாத வரையில் பயனில்லை. 'மாணவர்களின் ஒழுக்கத்தை ஆசிரியர்கள் கவலை கொண்டு கடுமையான முறையில் சீர்திருத்த வேண்டு மென்னும் கொள்கையை யான் பிற்போக்கான அபிப்பிராய மென்றே உரைப்பேன். 'கல்விச் சாலையிலுள்ள மாணவர்களின் ஒழுக்கத்தைச் சீர்படுத்த வேண்டுமாயின் அதற்கு அந்த மாணவர்களையே பொறுப்புள்ளவ ராக்குவதுதான் மிக உசிதமான வழி' என்று அனுபவ முறையில் கண்ட ஆங்கில அறிஞர் ஸ்ரீ எர்னஸ்டு ஏ. கிராடாக் என்பார் மொழிகிறார். எனவே, மாணவர்கள் தங்கள் ஒழுக்கத்திற்குத் தாங்களே ஜவாப்தாரிகள் என்பதை உணர்ந்து சன்மார்க்கத்தில் ஒழுக வேண்டும்.

மாணவர் மனத்தில் முதலில் அமைய வேண்டுவது தாய் நாட்டின்பால் அன்பு. நாட்டுப் பற்றுண்டாகத் தாய் மொழிப் பற்று இன்றியமையாது வேண்டற்பாலது. மகாத்மா காந்தியடிகள் 'தாய்மொழியின் வழியே பிள்ளைகளுக்குக் கல்வி பயில்வித்தல் மிக முக்கியம். தாய் மொழியை அலட்சியம் செய்வது தேசீயத் தற்கொலையாகும்' என்று கூறுகின்றார். ஆனால், இந் நாளில் நம் நாட்டிற்குரிய இயற்கைக் கல்வி மாணவரிடையே சிதைக்கப் பட்டிருக்கிறது. 'ஆங்கிலம் பயில்வதுதான் அறிவுடைமை' என்று மாணவர் கருதுகின்றனர். இஃது அறியாமை யாகும். யான் ஆங்கிலம் கற்கலாகாதென்று கூறவில்லை. ஆங்கிலம் உலக மொழியாகப் பரவி வருவதாலும், அரசாங்க பாஷையாக இருப்பதாலும் அதனையும் பயில்வது அவசியமென்றே உரைக்கலாம். ஆனால் 'ஆங்கிலக் கல்வியில்தான் அறிவுண்டு' என்பதையும், 'தாய் மொழியை அசட்டை செய்து ஆங்கிலம் கற்பதுதான் கௌரவமும் நாகரிகமுமாகும்' என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளேன். தாய்மொழி விடுத்துப் பிறமொழியைப் படிப்பது 'மாதா வயறெரிய மகேஸ்வரி பூஜை செய்வ'தை ஒக்கு மென்பதை உணர வேண்டும். தாய்மொழியை அலட்சியஞ் செய்து அன்னிய மொழியையே சிறந்ததாக எண்ணும் எவரையும் உலகம் கௌரவமாகக் கருதா தென்பதைக் கண்கூடாகக் காணலாம். ஆங்கிலர் முதலிய அன்னிய நாட்டினர் எத் தேயத்தி லிருந்தாலும், பல மொழிகளைப் படித்திருந்தாலும் தங்கள் தாய்மொழியையே பேசும் போதும், எழுதுங்காலும் உபயோகித்து அதனிடத்துத் தனிப் பற்றுக் காட்டுகிறார்களே யன்றி அசட்டை செய்கிறார்களில்லை.

மேல் நாட்டாரைச் சாயல் பிடிக்கும் நம்மவர் அவர்பால் காணப் படும் இத்தகைய நற்குணங்களை ஏனோ நோக்குவ தில்லை?

எவர்க்கும் அவரவர் தாய்மொழிக் கல்விதான் அவசியமாகும். ஒவ்வொரு நாட்டின் அமைப்புக்குத் தக்கவாறு மொழிகள் அமைந் துள்ளன. நமது நாட்டின் இயல்புக்கேற்ற மொழி தமிழ் மொழியே யாகும். மாணவர் தமிழ் மொழிமீது கவலை செலுத்தாது வாழ்வது இயற்கை அன்னையை மறந்து வாழ்வதாகும். தாய் மொழிமீது பற்றில்லாத எந் நாட்டாரும் முன்னேற்ற முற முடி யாது. அடிமைச் சங்கிலியில் கட்டுண்டிருந்த அயர்லாந்து, பின் விடுதலை அடைந்ததற்குக் காரணம் மறந்திருந்த நாட்டு மொழியை வளர்த்த தன்றோ?

நிற்க, நம் தாய் மொழியாகிய தமிழ்மொழி இதர மொழி களைப் போன்றதன்று. பெய ரளவிலேயே இனிமையெனும் பெயரை யுடையது; முற்றுப் பெற்றது; சிறு சொற்களை யுடை யது; நோய் கண்டோர், மூப்புற்றோர், சிறுவர் முதலியோர்க்கும் உச்சரித்தற்கு எளிதானது; கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய பல மொழிகளுக்கு முதலானது; சுருங்கக் கூறல் என்னும் அழகில் விரிந்த பொருட் பொலி வுடையது; உள்ளத் தின் தோற்றங்களை வெளியிடுவதற்கு நுணுக்கமாகவும், தத்துவ வகையாகவும் அமைந்த சொற் பொலி வுடையது; பிற மொழிச் சொற்களை வேண்டாது நடைபெறும் பெருமை யுடையது; ஆரியம், கிரீக் முதலிய மொழிகளிலும் கலந் துள்ளது; வட மொழிக்கு முற்பட்டது. மற்றும் இதன் பெரு மைகள் எண்ணற்றன. உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைகள் நிறைந்த நூல்கள் தமிழ் மொழியில் பல வுண்டு. திருக்குறள் ஒன்றே இதனை உண்மையென ஒப்பச் செய்யும். திருக்குறளில் அடங்கியுள்ள உண்மைகள் இவ்வுலக மழிந்து வேறு உலகம் ஏற்படினும் அவ் வுலகும், ஏற்றுக் கொள்ளும் சிறப்பினை யுடை யவை. மற்றும் தமிழன்னையின் அணியாகிய சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை முதலிய அரிய காப்பியங்களின் பெருமையை என்னென் றுரைப்பது? எம்மொழியினும் இனிய மொழியும், தெய்வ மணங் கமழும் சொற்களும் கேட்கவும், ஆனந்திக்கவும் நிறை சுவை யுடையதுமான தமிழ் மொழியின் மகிமையை எவரே அளவிடற் குரியார்? தமிழ் மொழியை நீங்கள்

சிறிது காலம் வரை செவ்வையாகக் கற்றுச் சுவைத்து, அதன் அமுதினை ஒரு தரம் பருகிவிட்டால் பின்னர் தீஞ்சுவை கண்டு விடாது விரும்புவீர்கள் என்பது திண்ணம். தமிழினிமையில் ஆழ்ந்திருந்த காலஞ்சென்ற தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணேம்' என இசைத்ததை நோக்குங்கள். நமது தாய் மொழியாம் இனிய தமிழ் மொழியை ஆர்வத்தோடு பயிலுங்கள்! அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள்!!

இன்னும் இரண்டு, மூன்று பொருள்களைக் குறிப்பிடுவது இன்றியமையாததாக இருக்கிறது. மாணவர்க்கு அவர்களது முன்னோரைப் பற்றிய அறிவும், நினைவும் அவசியமாகும். ஆகவே, அந்நோக்கினை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ள சரிதங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டும். தங்கள் நாட்டின் பழமை, நாகரிகம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்; பிற நாடுகளின் சரித்திரங்களையும் படித்தறிதல் நலமேயாகும். சரித்திரங்களை ஆராய்வதால் வாழ்க்கைக்கு அவசியமான விஷயங்களை உணர்ந்து கொள்ளுதற் கியலும். ஆதலின், சரித்திர ஆராய்ச்சி மாணவர்க்கு மிகவும் அவசியமானதாகும்.

மற்றும், அறிவு வளர்ச்சிக்குச் சரித்திரக் கல்வி ஆதாரமாயிருப்பது போல பல ஊர்களின் பழக்கமும் மிக அவசியமாகும். வெறும் எழுத்துப் பூச்சிகளாக இருப்பதைவிட நாட்டு வளப்பத்தையும் அறிதல் நலம். நாட்டின் பல பாகங்களையும் சுற்றி வருகையில் அங்கங்கேயுள்ள மக்களின் நடையுடை பழக்க வழக்கங்கள், இயற்கை செயற்கைக் காட்சிகள் இவையனைத்தையும் நேரே கண்டு களிக்கவும், மனம் பண்பட்டு அறிவு வளர்ச்சியடையவும் முடியும். இவ் வுலகத்தைப் பலவித பாடங்களையுடைய ஒரு சிறந்த புத்தகமென்று கூறலாம். அதைச் சுற்றிப் பார்ப்பதுதான் அதனைப் படிப்பதாகும். இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஊர் சுற்றிப் பார்ப்பதை மாணவர்க்கு ஒரு முக்கிய பாடமாக வைத்திருக்கின்றனர். பள்ளிக்கூட விடுமுறைக் காலத்தில் மேற்கண்ட நாடுகளிலுள்ள மாணவர்கள் முடிந்தவரையில் நெடுந்தூரஞ் சென்று சுற்றிப் பார்த்து வருகின்றனர். நம் நாட்டிலும் மாணவர்கட்கு இவ்வசதி வேண்டும். இது பெற்றோர்கள் கவனித்துச் செய்ய வேண்டிய

காரியமாகும். எனினும், மாணவர்கள் ஊர் சுற்றிப் பார்ப்பதில் ஊக்கங் கொள்வாராக.

கடைசியாக வற்புறுத்தும் விஷய மொன்றே உண்டு. உத்தியோகம் பெறுவதுதான் கல்வி பெறுவதன் பயன் என்பது தற்கால மாணவருடைய கொள்கையாக இருக்கிறது. துரைத்தன உத்தியோகந்தான் கௌரவம் என்ற அபிப்பிராயம் பரவி விட்டது. எல்லோரும் உத்தியோகம் பெறும் நோக்கத்தோ டிருப்பதாலேயே எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாய் விட்டது. மாண வர்கள் வர்த்தகம், கைத்தொழில் முதலிய சுயாதீனத் தொழில் களின்மீதும் இனி மனம் செலுத்த வேண்டும்.

இதுவரையில் குறிப்பிட்டன யாவும் மாணவரது எதிர்கால நலத்திற்கும், தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மிக மிக இன்றியமையாதவை. எதையும் படித்ததால் பயனில்லை. படித்ததைச் சிந்தித்துச் செயலில் காட்டாத வரையில் அவ்வளவும் வீண்தான். எனவே மாணவர்கள், இனியேனும் விழிப்படைந்து மேலே படித்தவை யனைத்தையும் நினைத்து வேண்டுவன செய்வார்களாக.

## 10. இயற்கை இன்பம்

கோடையின் வெப்பம் கொஞ்சமும் தாங்குதற் கின்றிக் கொடுமையாய் இருக்கவும், பொய், புனை சுருட்டு, அக்கிரமம், தீச் செயல், திருட்டு முதலியன ஒருங்கே நிறைந்துள்ள நகர வாழ்க்கையில் அலுப்பும், வெறுப்பும் தோன்றவும், அவைகளை விடுத்து, சேர வள நாட்டிலுள்ள குளிர்ச்சியும், வனப்பும் மிக்க தோர் மலைப் புறத்தை யடைந்தேன். மலையடி வாரத்தில் இருந்த தொரு சிறு கிராமத்தில் தனித்த தொரு வீட்டில் தங்கினேன். சிறிது தூரத்தே வானை நோக்கி வளர்ந்து நின்ற மலையினைக் கண்டதும் என் மனம் துள்ளிக் குதித்தது. மறு நாள் அதிகாலையில் அம்மலைமீது ஏறத் தீர்மானித்தேன். அற்றைப் பகற் பொழுதும் இராப்பொழுதும் இருந்த விடத்திற்றனே கழிந்தன. குண திசையில் கதிரவன் எழுமுன் படுக்கையை விட்டு எழுந்தேன். பகற் பொழுதிற்கு வேண்டிய பலகாரங்களைச் சிறு மூட்டையாகக் கட்டித் தோளில் மாட்டிக்கொண்டு, மலையை நோக்கி நடக்க லானேன். புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் மலையடி வாரத்தை யடைந்தேன்.

அப்பொழுதே கீழ்த் திசையில் கதிரவன் பொன்னொளி யொத்த தன் கதிர்களை வீசிக் கடுகி வான் மிசை ஏறலானன். வானொளி படரும் இன்பத்தைக் கண்டு பாட்டுப் பாடிப் புட்கள் மகிழ்ந்தன. உவகை பூத்த மனத்தினனாய் நானும் மளமளவென்று அம்மலைமீது சென்றதோர் ஒற்றையடிப் பாதையைப்பற்றி அதன் வழிப்படலானேன். ஒரு நாழிகைப் போழ்து அவ்வாறு நடந்த பின்னர், மரங்களின்றிப் பரந்து நின்றதோர் பாறையைக் கண்ணுற்று அதன் மீதேறித் தூரத்தே தெரியும் நிலக் காக்ஷியினை அள்ளிப் பருகலாயினேன். கீழே நோக்கவும், குளிர் போக்கிக் கொள்ளத் தம் தலைகளை வெளியில் உயர்த்திக் கொண்டிருப்பது போன்று சிற்சில பாறைகள் இங்கு மங்கும் அம் மலையில் தென் பட்டன. நாடகத்திரையில் காணப்படும் சிறு சிறு வெள்ளைப் புள்ளிகளெனத் தூரத்தே கிராமத்திலுள்ள வீடுகள் தோன்றின. மண் மீதே காதல் கொண்டானெனக் கதிரவனும் கண்பிறழ் வின்றிப் பூமியை நோக்கினவன் போலிருக்க, பூமிதேவியும் ஆதவன்

சோதி கண்டதால் அவன்மீது காதல் மிக மண்டினவள் போல் தன் முகத்தில் புன்னகை பூக்கத் தோன்றினாள்.

அம் மலைச் சரிவினில், அடுக்கடுக்காய், படிப்படியாய்ப் பற்பல நிறப் பூக்களுடன் கூடிய மரங்கள் பல வளர்ந்திருந்தன. சவுக்க மரங்கள் இலைக ளதிகமற்ற தம் கிளைகளுடனே ஆங்காங்கு மற்ற மரங்களைக் காட்டினும் உயர்ந்து இறுமாப்புத் தோன்ற நின்றன. பச்சிலைகள் நிறைந்த ஆல விருக்ஷங்கள் ஓர் பாலும், மஞ்சள் நிற மலர்க் கொம்புகளுடன் கூடி சண்பக மரங்கள் ஓர் சாரிலும் மலிந்து தோன்றின. பள்ளிச் சிறுவர்களின் பலகைகள் பல, பசும் போர்வையுடன் தரைமீது பரப்பிக் கிடக்கின்றனவோ என்றெண்ணத் தகுந்த கழனிகள் பலவும், அவற்றிற்குச் சிறிது தூரத்திற் கப்பால், இயற்கையெனும் கற்றச்சன் கைப்பட்டு உருண்டை வடிவாகிக் குவியலாகக் கிடக்கும் பாறைகள் நிறைந்த மேடான நிலமும் பார்வைக் கழகா யிருக்கக் கண்டேன்.

மழை யுலாவிய அம் மலைச் சாரலில், மந்தமாருதம் அப்பொழுதே தவழ்ந்து வந்து மெல்லிய மணங் கமழ்ந்தது. அதை ஆவலுடன் என் நாசிகள் பருக, என் மார்புக ளிரண்டும் விம்மி, விம்மி யடங்கின. என் உடம்பினிலே ஓர் வகைப் புத்துணர்ச்சி தோன்றிற்று. என் கண்களில் ஒளி வீசலாயிற்று. அச் சமயத்தில் என் மனதினில் பற்பல எண்ணங்கள் உதித்தன. என் பால்யப் பருவத்தினை எண்ணினேன். ஆஹா! நீரிற் குமிழி என அப் பருவம் கழிந்து சென்றுவிட்டதே என்ற நினைப்பு என் மனத்தினை வாதனைக்குள்ளாக்கிற்று. ஏனெனில் அந் நாட்களிலெல்லாம் துணிகரமான காரியங்களைத் துடுக்குடன் செய்வதில் எத்துணை ஆர்வங் கொள்வேன்! அத்தகையதோர் உணர்ச்சி அன்று தோன்றியதன் காரணமாகவே, கரடு முரடான அம் மலைமீ தேறத் துணிந்தேன். இயற்கை யன்னையின் சிறப்பினைக் காணும் ஆவல் என் மனத்தின் கண் ஓங்கிநின்றது.

நிற்க, நான் அப் பாறையை விட்டிழிந்து மீண்டும் அடர்ந்த காட்டினூடே நுழைந்தேன். நாற்றிசையினின்றும் பலவகை வண்டுகளின் ரீங்காரமே காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. தண்ணறுஞ் சோலையில் விண்ணளாவி நின்ற மரங்களிடையே பின்னிப் படர்ந்த வாசமலர்க் கொடிகளில் வானர மங்கையர் ஊசலாடி

மகிழ்ந்து விளையாடினர். தேக்கு, தேவதாரு, சந்தனம், சண்பகம், பலா, பாதிரி, புங்கை, புன்னை முதலிய மரங்கள் வானை நோக்கிக் கைகளைத் தூக்கி, அதனைத் தொடுவதே போல் தோன்றின. அவைகளின் பரந்த கிளைகளில் அடர்ந்து விளங்கிய இலைகள் பகலவனொளியை உள்ளே புக வொட்டாது தடுத்தன.

மற்றும், அம் மலைக் காட்டில் பல விந்தைச் சுவையுடைய கனிகளும், எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகளும், நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்களும், எங்கும் நீளக் கிடக்கும் இலைக் கடல்களும், முட்கள் மண்டித் துயர் கொடுக்கும் புதர்களும் ஆங்காங்கே காணப்பட்டன. மரங்களின் மீது பலவகை நிறங்களுடன் கூடிய பறவைகள் கூட்டம் கூட்டமாய்த் தத்தம் பேடுகளுடன் கூடிக் கொஞ்சிக் குலாவி விளையாடிக் கொண்டிருந்தன.

நடைப் பாதையில் ஊசி குத்தக்கூட இடமில்லாதபடி, செல்வந்தர் வீட்டுப் பளிங்குத் தரை மீது பரப்பிக் கிடக்கும் ரத்ன கம்பளமென, மெத்தென உலர்ந்த இலைகளும், வாடிய புட்பங்களும், மகரந்தப் பொடிகளும் சிந்திக் கிடந்தன. இரு மருங்கிலும் ஆங்காங்கே வெண்ணிறப் பாறைகள் வழவழெனத் தரை மட்டத்திற்குச் சற்றே உயர்ந்து தோன்றிநின்றன. மஞ்சள் நிற வண்ணாரப் பூச்சிகள் தம் வனப்பு மிக்க இறக்கைகளை விர், விர் என்று வீசிக்கொண்டு சுற்றிப் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன. அம் மலைக் காட்டினில் அச் சமயத்தில் என்னையன்றி வேறெவரு மிலர். ஆகவே இயற்கை யன்னையின் தோற்றங்களைக் கண்டு மகிழ்வெய்தி நின்றேனாயினும், திடீரென்று பக்கத்தேயுள்ளதோர் புதரினின்றும் சரேலென்று ஓர் பக்ஷிக்கூட்டம் பறந்து செல்ல, அவ்வோசை கேட்டு, காட்டு மிருகங்களேதேனும் அங்குக் கடுகி வந்துவிட்டதோ எனும் எண்ணம் அந் நிமிடம் என்னை ஒரு முறை குலுக்கிவிட்டது. மறு நிமிடம் நான் என் நிலை யடைந்தேன்.

அக் காட்டிடையே சருகுகளின் மேல் நான் நடந்து செல்லுங்கால் ஏற்படும் சலசலப்பும், மரங் கொத்திப் பறவைகள் கொட்டு, கொட்டென்று தம் கூரிய அலகுகளால் மரக்கொம்புகளைத் துளைக்கும் சப்தமும், வண்டுகளின் ரீங்காரமும், குக் குக் கென்று குயில்கள் பாடும் பாட்டும், தவிர வேறெவ்விதப் பேரோசையும்

கேட்க வில்லை. சிறிது நேரத்திற் கொருமுறை மரங்களிடை வாயு பகவான் விர்ரென்று வீசிக்கொண் டிருந்தான். அதனால் விநாடிக் கொரு விதமான சப்தம் கேட்கலாயிற்று. இந் நிமிடம், பல மைல் தொலைவிற் கப்பால் வரும் புகைவண்டியி னோசை போன்றதொரு சப்தம் எழும். மறு நிமிடம் நீல நிறக் கடலலைகள் கரைமீது மோதுவது போன்றதோ ரொலி கிளம்பும். சரேலென, அச்சமயம் எங்கிருந்தோ, ஆசை பெற விழிக்கும் மானினத்திற் சில மருண்டு, மரங்களிடையே, வேடன் வில்லினின்றும் விடுபட் டோடும் அம்பினைப்போல் விர்ரென்று பறந்து செல்லும்.

இத்தகைய தோற்றங்க ளனைத்தையும் கண்டு களித்துக் கொண்டே, நான் ஆனந்த உள்ளத்தினனாய் அடிமே லடிவைத்து ஒப்பார நடை நடந்து உல்லாசமாய் மென்மேலும் சென்று கொண்டிருக்க, சூரியனும் என்னைத் தொடர்ந்து வருபவனேபோல் வானவீதியில் ஏறிச் சென்றுகொண் டிருந்தான். செஞ் ஞாயிற் றொண் கதிரால் பச்சை மர மெல்லாம் பள பளென மின்னின. உச்சிவேளை வந்தது. அப்பொழுதே என் சித்தம் என் தோள் மேல் தொங்காநின்ற சிறுமூட்டை மீது செல்லலாயிற்று. ஆகவே பக்கத்தே எங்கேனு மோர் சுனை யுளதோ என்று பார்ப்பான் வேண்டிச் சற்று வேகமாகவே நடக்கலானேன். வெம்மதக்களிறுகள் சேர நாட்டு மலைக் காடுகளில் செறிந்து காணு மென்பதை முன்னரே கேள்வியுற் றிருந்தேன். அக் காட்டிடையே அக் களிறு கள் வெருண்டு விழுமிய மரங்களை முறித்து வீழ்த்திச் சென் றுக்கும் முறைமையை அன்று கண்டு வியந்தேன். அவ்வாறு சிதறிக் கிடக்கும் மரங்களில் அமைந்த செந்தேன் மலையின் வழி யொழுகிய மாண்பினைக் கண்டு மனக் களிப்புற்றேன்.

சிறிது தூரத்திற் கப்புறத்தே சல சல வெனக் காறு கற் களில் விழுந்தோடும் ஒலி கேட்டு அத்திசை நோக்கி நடந்து அவ ணடைந்தேன். ஆஹா! எத்தகைய காக்ஷி அது. மாவும் மாக்களும் விரும்பி நீராடும் அம் மலைச் சுனைகளில் அருவி நீர் ஆறுகப் பாய்ந்து சென்றுகொண்டிருந்தது. மாசற்ற மணி நீர்ச்சுனைகளில்சல்லிமீன்கள் துள்ளி விளையாடின. களங்கமற்ற அச் சுனைநீரில் கதிரவன் சாயை காண்போர் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் தோன்றிற்று. அச் சுனை யோரத்தில் அமர்ந்து என் மூட்டைக் கனத்தைச் சிறிது போழ் தினில் குறைத்துவிட் டெழுந்தேன். அற்றைப் பிற்பகலில் வெகு

நேரம் அக் காட்டிடையே சுற்றி வந்தேன். கதிரவனும் களைப்புற் றவனேபோல் மேற்றிசையில் இறங்குவானாயினன். அப்பொழுதே நானும் இயற்கை யன்னையை விட்டுப் பிரிய மனமற்றவன்போலச் சோர்வுடன் மலையை விட்டிழிந்தேன். சம நிலத்தை யடைந்தேன். வீடு போய்ச் சேருமளவும் வனப்பு மிக்க மலையாளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றேன். வெங்கதிரோன் மறையவும் தண் கதிரோன் குணதிசையில் எல்லை யில்லாததோர் வானக்கடலிடை விழிக்கின்ப மளிப்பதோர் தீவென்றிலங்கி வெளிக் கிளம்பினன். வீட்டை யடைந்து சாளரங்களை யெல்லாம் அகலத் திறந்துவைத்து விட்டு, ஓர் ஆசனத் தமர்ந்து பலகணி யொன்றின் வழியாகத் தெரிந்த வெண்ணிலாவி னழகில் ஈடுபட்டேன்.

சித மணி நெடுவானக் குளத்திடைத் தேசு மிகுந்த வெண் டாமறை போன்ற வெண்ணிலாவின் அழகே அழகு! சட்டென வானத்திடை எங்கிருந்தோ அதன்மீது பொறாமையுற்று அதை மோதவருவதே போல் ஓர் கரு மேகம் வர, தன்னை மோத வரும் அம் மேகத் திரளினுக்கு முத்தினொளி தந்தழகுறச் செய்து விட்டு மாமதி மறு நிமிடம் மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்து, தன் மேனியி னழகு மிகைபடத் தோன்றிற்று. சற்று மேற்புறம் திரும்பினேன். மரங்க ளடர்ந்த மதியினொளி தாங்கி, பகலில் கொண்ட தோற்றத்தைக் காட்டினும் பன்மடங் கதிக அழகு பெற விளங்கிற்று. அற்றைப் பகற் போழ்தினில் அம் மலையில் நான் கண்ட காக்ஷிக ளனைத்தும் என் மனக் கண்ணாடிமுன் மின் னொளியெனத் தனித்தனி தோன்றி மறையலாயின.

உடனே என் மூளை வேலை செய்யலாயிற்று. இம் மலைக் காக்ஷியைக் கண்டு, நம் மனம் வித்தை செயுஞ் சூத்திரத்தின் மேவு மொரு பொம்மையென அதன்பால் விரைந்து செல்லக் காரண மென்ன வென்பதை ஆராயலானேன். அயர்ந்து தளர்ந்து நிற்கும் நம் ஆத்மா மலைக் காட்டிடை மந்தமாருதம் வீசுதலால் தளர்ச்சி குறையப் பெறுகின்றது. உலகெனும் அரங்க மேடைமீது உழல்வ தால் பெரிதும் கவலையுற்ற மனத்தினராய மக்கள், நாடு, நகரம், உற்றார், பெற்றார் அனைவரையும் விடுத்து இயற்கை யொளி வீசும் மலைகளிடைச் சென்று இயற்கை யமுதைப் பருகி, தம்மனம் நிம்மதி யடைகின்றனர். மதுவுண்டு, தேள் கொட்டுண்ட மாயக் குரங்கினை யொத்த மனத்தின் அழுக்கைப் போக்கி அறநிலைப் படுத்துவதற்கு

மலையின்கணுள்ள ஆரண்யமே சாலச் சிறந்த விடமாகும். குடும்ப சாகரத்திலகப்பட்டுச் சில நாட்களானதும், அதுவரை நம்முடன் வசித்துவந்த இன்பமெனும் நங்கை நம் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பி விடுகிறாள். அவ்வாறு வெளிக் கிளம்பிய மெல்லிடையாளை வனப்பு மிக்க மலைக்காட்டிடைதான் மீண்டும் காணலாம். நம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கை வனப்பு நம் மனத்தை முற்றிலுமாறுபடச் செய்துவிடுகிறது. வாழ்வெடுத்ததன் பயனை அப்பொழுதே கவலையற்று அனுபவிக்கிறோம். அக் காட்டிடையே எத்தனை நாட்களாயினும் வாழவேண்டுமெனும் இச்சைபிறக்கின்றது. எண்ணம் தலை காட்டாது மறைகின்றது. நமக்கு எதிர் பாரா ஆபத்துகள் பல அடுக் கடுக்காய் வருங்காலை இருப்பதினும் இறப்பதே மேல் எனும் எண்ணம் உதிக்கின்றதே! அத்தகைய நினைவே அம் மலையீ திருக்கையில் வருவதில்லை. நம் மனப் போக்கைத் தடுக்க அங்கு என்ன இருக்கிறது? ஏதுவுமில்லை. இயற்கை யன்னையின் மடிமீ துறங்கி, அவளிடையே ஓடித் திரிந்துலாவி வசித்து, அவளது எண்ணற்ற அற்புதத் தோற்றங்களைக் கண்டு மகிழ்ந்துகொண்டு, காலனைப்பற்றிக் கடுகளவும் எண்ணாது காலங் கழிக்கலாம்.

அங்குள்ள தூய்மையான காற்று நம்மையும் தூய்மைப் படுத்துகின்றது. தேகப் பயிற்சி செய்ய அவா காணத் தலைப்படுகின்றது. பசியென்பதே பறந்து போகின்றது. ஆனால் தெள்ளிய நீரோடையைக் கண்டதும் பசி தோன்ற ஆரம்பிக்கின்றது. நமக்குள்ள மனச்சங்கை யனைத்தும் மறைய, அங்குச் சாந்தி தோன்ற, சுதந்திர உணர்ச்சியுடன் உலாவி வருகின்றோம். வெளி உலகைப் பற்றிய நினைவே தோன்றுவதில்லை. பணப் பேயா லலைக்கப்பட்ட மாந்தர் பரபரப்புடன் எத்தகைய பாவச் செயல்களையும் செய்யும் திடசித்தம் கொண்டு செல்லும் முறை, கண்ட விடமெல்லாம் அசங்கியமாய்க் குப்பையும், செத்தையும் குவிந்து துர்நாற்றம் வீசவும், அதனிடைவாழும் வாழ்க்கை முதலிய எண்ணங்கள் அப்பொழுது நம் மனதில் தலை காட்டுவதேயில்லை. அங்கு, குளிர், காற்று எனுமிருவர் தவிர வேறு பகைவருண்டா? உடலை வாட்டும் நோயுண்டா? உற்றார், சுற்றத்தாரின் துன்ப முண்டா? ஆரோக்கியமான பசியைத் தவிர வேறு கடு வேதனை யுண்டா? எதுவுமின்றி, ஏகாங்கியாய், அங்கு வாழும்

வாழ்க்கைக்கு நிகரேது? மனதை வாட்டிக் கருக்கும் துன்பங்கள், அறிந்தும் அறியாமலு மிழைக்கு மின்னல்கள், அதன்பின் அதைக் குறித்தனுதாபப்படுதல், கடமை கடமை யென்று கடமை யென்றில்லாததைக் கணப்பொழுது மிடைவிடாது பேசிக் காலங் கழிப்பது இவையனைத்தும் ஒப்பற்ற மலைக்காட்டிடையே, நம் மனதை விட்டுப் பெருங்காற்றி லகப்பட்ட மேலாடையெனக் கடுகிப்பறந்து சென்றிடு மென்பது திண்ணம். இவ்வாறாக இயற்கை வனப்பின் மாட்சியை எண்ணிக் கொண்டே யிருக்கையில், ஆறலைக்கும் கள்வனும் அயர்ந்து விழும் நடுநிசியாய் விட்டது. என்னை யறியாமலே தூங்கிவிட்டேன் என்று பின்னர் அறிந்து கொண்டேன்.

